# திருப்புல்லாணி ஊராட்சி ஒன்றியம்

- ஊர்ப் பெயராய்வு



கி. இளங்கோவன்

V2196.T,64
N94
211316.

...த்துறை

PUBLICATIONS DIVISION

# திருப்புல்லாணி ஊராட்சி ஒன்றியம் ஊர்ப்பெயராய்வு

பேரா. கி. இளங்கோவன்

பதிப்புத்துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை 625 021.
1994

(C)
பதிப்புரிமை : பதிப்புத்துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

முதற்பதிப்பு : பிப்ரவரி, 1994.

பதிப்பு எண் : 119

விலை. ரூ. 20/-

நூலகக் குறியீடு : Y 31 : 1(P;2) : F
N 94

Title : Thiruppullani Uratchi Onriyam — Urppeyar Ayvu.

Contents : Research work on place names.

Language : Tamil

Pages : 6 + 140 = 14(

Author : Dr. K. ELANGOVAN

Publishers : Publications Division,
Madurai Kamaraj University,
Madurai — 625 021

Printer : Malligai Printers.
T. Vadipatti-624 218. Phone : 4344

# பதிப்பு முன்னுரை

வரலாற்று நோக்கில் பெயர்களை ஆராயும் "பெயர் ஆய்வுத்துறை" (Onomastics) மேலை நாடுகளில் பெரிதும் வளர்ச்சியுற்றது. இதன் கிளைத்துறையான இடப்பெயராய்வுத் துறையும், மொழியியல், மானுடவியல், வரலாற்றியல், நாட்டுப்புறவியல் ஆகிய துறைகளையொட்டி அங்கு மிகச் சிறப்பாக வளர்ந்துள்ளது. இடப்பெயர்களின் முக்கியத்துவத்தைப் பலகாலமாக நன்கு அறிந்திருந்த போதிலும் அவற்றின் வரலாற்றுப் பொருண்மையை அறிவியல்பூர்வமாக ஆய்ந்தறியும் முயற்சிகள் இந்தியாவில் மிக அண்மையில் தான் தொடங்கின.

ஒரு நாடோ, மொழியோ, பண்பாடோ வரலாற்று நோக்கில் ஆய்வுசெய்யப்படும்போது அதுசார்ந்த இடப்பெயர்கள் ஆய்வுக்குள்ளாவது தவிர்க்கவியலாதது. மற்றப் பண்பாட்டுக் கூறுகளைவிடவும் மொழிசார்ந்த கூறுகளான பெயர்கள் ஒரு பண்பாட்டின் கூட்டு. மனத்தில் நெடுங்காலம் தங்கி நிலைத்திருப்பதால் இவற்றை ஆராய்வது மிகுந்த பயன் தரக்கூடியதும், ஒப்பீட்டளவில் துல்லியமான முடிவுகளைப் பயக்கக்கூடியதுமாகும்.

பேரா. கி. இளங்கோவன் அவர்களின் இந்த நூல் இந்த வகையில் குறிப்பிடத்தக்க முயற்சியாகும். வரலாற்று நோக்கு இவ்ஆய்வின் அடிப்படையாக அமைந்த போதிலும் ஆங்காங்கே தளப்பார்வையில் இவர் தரவுகளை அணுகியிருப்பதை நூலைப் படிக்கிற எவரும் உணரமுடியும். மொழியியல், வரலாற்றியல், மானுடவியல், நாட்டுப்புறவியல் போன்ற பல துறைகளில் புலமையும் கல்வியும் கொண்ட ஆசிரியர் மிகுந்த அக்கறையுடன் பெயர்களைத் தொகுத்து ஆய்ந்து விளக்கியிருக்கிறார்.

கோவில், வாணிகம், வரலாற்றுச் சிறப்பு, கருப்பொருள்கள், சாதி, மதம் ஆகிய அடிப்படைகளில் பெரும்பாலான பெயர்கள் எழுந்துள்ளன. பழைய இலக்கியங்கள், நாட்டுப்புற வழக்காறுகள், கல்வெட்டுகள், செப்பேடுகள், சடங்குகள், பழக்க வழக்கங்கள்,

புராணங்கள், செவிவழிச் செய்திகள் போன்றவற்றை ஆராய்ந்து முடிவுகளை ஆசிரியர் வெளிப்படுத்தியுள்ளார். பல இடங்களில் இயற்கையாய் அமைந்துள்ள பண்புகளும், வேறு சில இடங்களில் அங்கே வாழும் மக்களால் எழுப்பப்பட்ட பண்பாட்டுக் கூறுகளும் பெயர்களுக்குக் காரணமாய் அமைவதைக் காண்கிறோம். சில சமயம் ஒரு பெயர் காலந்தோறும் மாறிவந்திருப்பதை நோக்கும்-போதோ, சிலவகைப் பெயர்கள் குறிப்பிட்ட காலகட்டங்களில் பெருவழக்காகிநிற்பதை அறியும்போதோ வரலாற்றின் ஓட்டத்தில் பெரிய நிகழ்வுகளைச் சந்தித்துணரும் வாய்ப்புக் கிட்டுகிறது.

டாக்டர் ரா.பி. சேதுப்பிள்ளை தமிழில் பல்லாண்டுகளுக்கு முன் எளிய முறையில் தொடங்கிவைத்த இந்த ஆய்வுத்துறை இன்று பேரா.கி. இளங்கோவன் போன்றோர் முயற்சியால் வளர்ச்சி பெற்றுவருகிறது. நூலாசிரியர் தமது எம்.ஃபில். பட்டத்-திற்காக மேற்கொண்ட ஆய்வு இப்போது நூல்வடிவு பெற்றுப் பல்கலைக்கழக வெளியீடாக வருகிறது. நூலாசிரியருக்கு எமது நன்றியுரியதாகுக.

நூலைச் சிறந்த முறையில் அச்சிட்டுதவிய வாடிப்பட்டி மல்லிகை அச்சக நிறுவனத்திற்கும் எம் நன்றி.

மதுரை,
14-1-'94.

டாக்டர் அ. விநாயகமூர்த்தி,
பதிப்பு அலுவலர்.

பேராசிரியர்
சாலமன் பாப்பையா, எம்,ஏ.,
தலைவர்,
தமிழ்த் துறை.

அமெரிக்கன் கல்லூரி,
மதுரை-625002.

## அணிந்துரை

முனைவர் கி. இளங்கோவன் அவர்கள் என் நெருங்கிய நண்பர்; எங்கள் தமிழ்த் துறையின் நல்ல சொத்து. புலமையும், செயல் திறமையும் பல தலை முறைகளாகவே கைவரப் பெற்றவர். எந்த வேலையையும் ஏற்றுக் கொண்டால் திட்டமிட்டுத் திறம்பட, செய்து முடிப்பவர்; பிறர் மனங் கோணாமல் காரியம் ஆற்றுவதில் வல்லவர்.

எம்.பில். ஆய்வுப் பட்டம் பெறும் பொருட்டு அவர் எழுதிய ஆய்வேடே இந்த நூல். இந்த ஆய்வேட்டைத் தயாரிக்க அவர் தனியே அலைந்ததும், மாணாக்கரின் துணையோடு முயன்றதும் எனக்கு மிக நன்றாகத் தெரியும். திருப்புல்லாணி ஊராட்சி ஒன்றியத்துள் அடங்கியுள்ள ஊர்களின் பெயர்க் காரணத்தை அறிய அவர் எடுத்துக் கொண்ட முயற்சியால் அவ்வூர்கள் உருவான வரலாற்றையும் நாம் அறிந்து கொள்ள முடிகிறது. இத்தகைய நூல்களால் இந்த மண்ணை மட்டும் அல்லாமல், இங்கே மனிதர் வளர்ந்தவரலாற்றையும் உலகம் நன்கு அறிந்து கொள்ள முடியும். அதற்குப் பாதை போட்டுக் கொடுக்கும் அரிய பணியில் இந்த நூல் சிறப்பிடம் பெறும்.

மதுரை
12-01-94.

வாழ்த்துகளுடன்
சாலமன் பாப்பையா.

# பொருளடக்கம்


தோற்றுவாய் ... 1

1. திருப்புல்லாணி ஊராட்சி ஒன்றியம் - ஓர் அறிமுகம் ... 10

2. கோவிலின் பெயரால் வழங்கும் ஊர்கள் ... 20

3. வணிக-வரலாற்றுச் சிறப்புள்ள ஊர்ப்பெயர்கள் ... 55

4. கருப்பொருளால் உருப்பெற்ற ஊர்ப்பெயர்கள் ... 89

5. சாதி அடிப்படையில் ஊர்ப்பெயர்கள் ... 104

6. வலசு-வலசை பின்ஒட்டில் எழுந்த ஊர்ப்பெயர்கள் ... 114

7. பெயர்க்காரணங்களும் எல்லையுரையும் ... 121

**பின்னிணைப்புக்கள்**

1. துணை நூற்பட்டியல் ... 128

2. சேதுபதிகளின் பரம்பரைப் பட்டியல் ... 131

3. ஊராட்சியும் உட்கடையும் 'அகரநிரல்' ... 133

4. ஊர்ப்பெயர்ப் பட்டியல் 'அகரநிரல்' ... 137

# தோற்றுவாய்

இடங்கள், ஆட்கள் போன்றவற்றின் பெயர்கள், சொற்களாக இருப்பினும் அவைகள் மொழியின் மற்ற சொற்களிலிருந்து பல நிலைகளில் மாறுபட்டுச் சில சிறப்பியல்புகளோடு விளங்குகின்றன. இப்பெயர்கள் மொழியில் ஏற்படும் பொது மாற்றங்கட்கு உட்பட்டும் உட்படாமலும் நிற்கும் வல்லமை உடையன. மொழியிலுள்ள மற்ற சொற்களைவிட நிலைபேறுடைய இச்சொற்கள் வரலாற்றோடு நேரடித்தொடர்பு கொண்டு, பழமை எச்சங்களாக (Fossil remains of the past) நின்று மனித வரலாற்றையும் பண்பாட்டையும் விளக்கும் ஆற்றலுடையன. சொற்கள் எண்ணங்களுக்கு இடந்தருகின்றன; கற்பனைக்கு இடந்தந்து, புராணம், நாட்டுக்கதைகள் ஆகியவற்றைப் படைக்கும் ஆற்றல் பெறுகின்றன; எல்லாவற்றிற்கும் மேலாக, எல்லா மொழிகளையும் எளிதில் ஊடுருவும் பொதுத்தன்மை உடையன. இவ்வாறு மொழியியல், வரலாறு, பண்பாட்டியல், நாட்டிலக்கியம் ஆகிய பலதுறைகளோடு உறவுடைய பெயர்கள், மொழியில் ஒரு கூறாக இருப்பதால் மொழியியலில் உள்ளடங்கும் இயல்பினதாக இருந்தும், சில சிறப்பியல்புகளால் பெயராய்வு (Onomastics) என்ற தனித்துறையாக வளர்ந்திருக்கிறது. ஆங்கிலத்தில் (Onomastic Sciences) என்றழைக்கப்படும் பெயராய்வு, ஆட்பெயராய்வு (Anthroponymy), இடப்பெயராய்வு (Toponymy) என்ற இரண்டாகப் பிரிகிறது. இவ்வாய்வில் இடப்பெயராய்வினைப் பற்றி விளக்குவோம்.

ஆய்வின் பொருண்மையை விளக்கத் தலைப்பு ஒன்றே சாலும். இவ்வாய்வின்கண் நிகழ்த்தியுள்ள ஊர்களின் பெயர் ஆராய்ச்சியும், ஆங்காங்கே பொறித்துள்ள குறிப்புக்களும், பிறவும் தமிழ் ஆய்வு உலகுக்கு வருவிருந்தாகும். மேலும் தமிழ்நாட்டில் இன்றும் சில ஊர்களின் பெயர்கள் சிதைந்தும் திரிந்தும் மருவியும் மாறியும் தத்தம் முதனிலையை இழந்தும் உள்ளன. அவை மீண்டும் பழைய நிலை எய்திப் பண்புற வேண்டும் என்பது இவ்வாய்வின் நோக்கும் போக்கும் ஆகும்.

கற்றவரிடமும், கல்லாதவரிடமும், இடப்பெயராய்வினைப் பற்றித் தவறான கருத்துக்கள் சில உள்ளன. இடப்பெயராய்வு

என்பது ஒருபெயரைக் கேட்ட மாத்திரத்திலேயே அதனை விளக்க-சொற்பொருள் விரிப்பதோ, கதைசொல்வதோ என்று சாதாரண-மாக நினைக்கிறார்கள். அன்றியும், இப்பெயராய்வு, பயனற்ற பொழுதுபோக்கு என்றும் சொற்சிலம்பம் என்றும் நினைக்கிறார்கள். இத்தகைய தவறான எண்ணங்களுக்குக் காரணங்கள் உண்டு. இவ்வாய்வில் ஈடுபட்டிருந்த ஆய்வாளர்களின் பொழுதுபோக்கான (Entertaining) மனப்பாங்கு; இவ்வாய்வு தந்த எளிமைத் தோற்றம்; இவ்வாய்வின் முறைகளைப் பற்றிய அறிவின்மை என்பன எனலாம்.

இடப்பெயர் ஆய்வின் நோக்கம், இடப்பெயர்கள் தோன்றிய-தன் காரணத்தையும், அதன் உண்மைப்பொருளையும் விவரிப்பது தான். ஆனால் இத்தகைய ஆய்வு சிலர் நினைப்பதைப்போல அத்துணை எளிதன்று. சில இடப்பெயர்களின் காரணத்தைச் சாதாரண மக்களிடமும், படித்தவரிடமும் கேட்டால் உடனே அவர்கள் அவற்றைப் பிரித்துப் பிரித்துப் பொருள் சொல்வதைப் பார்க்கிறோம். ஆனால் கூர்ந்து நோக்கினால், விளக்கத்திற்குள்-ளாகும் பெயரில் தற்கால வடிவம், மூலப்பெயரின் திரிந்த வடிவமாயிருக்கும். எனவே தற்காலப் பெயர் வடிவத்திற்குக் கொடுக்கப்படும் பொருள் விளக்கம் உண்மையான மூலப்பெயரின் விளக்கமாகாது. மேலும் கொடுக்கப்படும் பொருள்-அப்பெயரின் பலபொருளில் ஒன்றாக இருக்கலாம். இதுதான் இதன்பொருள் என்று துணிந்து கூற அரண் செய்யும் துணைச்சான்றுகள் தேவை. எனவே, பெயர்களின் உண்மைப்பொருளை அறிய, மூலவடிவத்-தையும் உரிய துணைச்சான்றுகளையும் தேடவேண்டும். இவ்வாறு செய்யும்பொழுதுதான் இவ்வாய்வு பொழுதுபோக்கு அல்லது கதைசொல்லல் என்ற நிலை மாறி, அறிவியலோடு இணைந்த 'பெயராய்'வாக மாறிவருகிறது. இவ்வறிவியல் கண்ணோட்டத்-தோடு திருப்புல்லாணி ஊராட்சி ஒன்றியப் பகுதியிலுள்ள 151 ஊர்ப்பெயர்களின் காரணங்கள் ஆராயப்படுகின்றன.

## இடப்பெயர் ஆய்வு — தற்கால நிலைமை

பொதுவாக, வரலாற்றுப் பழமைமிக்க ஐரோப்பிய நாடு-களிலும், பிரிட்டனிலும், அமெரிக்காவைக் காட்டிலும், பெயராய்வு-கள் நிரம்ப நடந்துள்ளன. அங்கு ஒவ்வொரு நாட்டிலும்

நிலவியல் பெயர்களை நிலைப்படுத்தவும், பல்வேறு காரணங்களுக்காகவும், இடப்பெயராய்வுக் கழகங்களை, அரசுகளோ, பல்கலைக்கழகங்களோ நிறுவியிருக்கின்றன. அரசுஆதரவோடு, நாடு முழுவதும் பெரிய அளவில் அளவாய்வுகள் (Surveys) நடத்தப்பட்டுப் பதிவுசெய்யப்படுகின்றன. பல்கலைக் கழகங்களில் டாக்டர் போன்ற பட்டங்களுக்காக இடப்பெயராய்வு மேற்கொள்ளப்படுகின்றது. குறிப்பாகக் கேரள, ஆந்திரப் பல்கலைக் கழகத்தமிழியல் துறையில் இப்பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

இங்கிலாந்தில் ஆங்கில இடப்பெயராய்வுக் கழகம் 50 ஆண்டுகளில் நாட்டில் ஒவ்வொரு பகுதிக்கும் திட்டமிட்டு, ஏறக் குறைய 50 தொகுதிகளை வெளியிட்டிருக்கிறது. அதேபோல ஸ்காட்லாந்திலும் இடப்பெயராய்வுத் திட்டங்கள் தொடங்கி நடக்கின்றன. அமெரிக்காவிலுள்ள அமெரிக்கப் பெயராய்வுச் சங்கம் "Names" என்ற காலாண்டு ஆய்வு இதழை 1953லிருந்து நடத்தி வருகிறது.

1949 இல் தோற்றுவிக்கப்பட்ட அனைத்துலகப் பெயராய்வுகளின் குழு (International Committee of Onomastic Sciences) வில் அனைத்துலகப் பெயராய்வு மையம் (International Onomastic Centre) பெல்ஜியத்திலுள்ள லூவெய்ன் நகரத்தில் இருக்கிறது. இதன் நோக்கம் அனைத்துலகத்திலும் உள்ள பெயராய்வு அறிஞர்களிடையே அறிவு உறவை ஏற்படுத்துவதாகும். மேலும் பெயராய்வுகள் பற்றிய செய்திகளையும், நூல்தொகைக் குறிப்புக்களையும் தொகுத்துத்தரும் என்ற Bibliographical and Information Bulletin 1949 லிருந்து வெளியிட்டு வருகிறார்கள்.

இந்தியாவிலுள்ள பலமொழிப் பகுதிகளிலும் இடப்பெயராய்வுகள் மிகக் குறைவாகவே நடைபெற்றுள்ளன. அவற்றில் பலவும் அங்கொன்றும் இங்கொன்றுமாகத் தொட்டுவிட்டுச் செல்லும் நிலையில் எழுதப்பட்ட உதிரிக்கட்டுரைகள் ஆகும். இலக்கியம், வரலாறு, நிலநூல் போன்ற ஆய்வுகளின் பகுதியாகப் பெயராய்வைப் பற்றி அரைகுறையாக எழுதப்பட்டவையே மிகுதி.

திராவிட மொழிகளிலும் இதேநிலைதான். கன்னட மலையாள மொழிகளில் குறிப்பிடத்தக்க விதத்தில் பெரிய ஆய்வுகள்

இத்துறையில் நடக்கவில்லை. தமிழிலும் தெலுங்கிலும் சில முயற்சிகள் காணப்படுகின்றன. குறிப்பாக, மதுரைப்பல்கலைக் கழகத் தமிழியல்துறைப் பேராசிரியரின் முயற்சியால் ஊர்ப் பெயராய்ச்சி இப்போது நடைபெற்று வருகிறது.

தமிழில், ஆராய்ச்சியும், அறிமுகமும், சுவைநயமும் கலந்த பாணியில் பேராசிரியர் ரா. பி. சேதுப்பிள்ளை எழுதிய ''ஊரும் பேரும்'' என்ற நூல் குறிப்பிடத்தக்கது. ஆங்கிலத்திலும் பல கட்டுரைகள் இப்பொருள் குறித்து அவர் எழுதியுள்ளார். என்ன காரணத்தாலோ அவர் இத்துறையில் முறையான கவனத்தோடு தொடர்ந்து ஈடுபடவில்லை. திரு. தி. அ. சொக்கலிங்கத்தின் எம். லிட்., ஆய்வாகிய Historic place names of Tamilakam upto 10th Century A. D. திரு. ரா. பி. சேதுப்பிள்ளையின் மேற்பார்வையில் எழுதப்பட்டது. திரு. ச. ஞானமுத்துவின் அச்சிடப் படாத எம். லிட்., ஆய்வாகிய Place name of Kerala-Trivandrum District தான் முதன்முதலாக முறையியல் அடிப்படையில் தோன்றியது. கோவைமாவட்ட இடப்பெயர்களைப் பற்றித் திரு. கி. நாச்சிமுத்து ஆய்வுசெய்து அறிவர் (டாக்டர்) பட்டம் பெற்றார். தமிழ் இலக்கியம், கல்வெட்டு போன்றவைகளில் உள்ள பெயர்களை அடையாளம் காணுவது போன்ற காரணங்களாகத் தமிழ் ஆய்வின் தொடக்க காலத்தில் சில முயற்சிகள் நடந்துள்ளன. அவற்றில் சேரர் கருவூர் கொங்குநாட்டிலுள்ளதா, கேரளத்திலுள்ளதா என்ற விவாதம் குறிப்பிடத்தக்கது. கேரளக் கட்சியை வற்புறுத்தித் திரு. எஸ். கிருஷ்ணசாமி ஐயங்கார் ''சேரன்வஞ்சி'' என்ற நூலையும், கொங்குநாட்டுக் கட்சிக்காகத் திரு. ரா. இராகவையங்கார் ''வஞ்சிமாநகரம்'' என்ற நூலையும் எழுதினார்கள். சோழன் பூர்வபட்டயம் கூறும் கொங்குநாட்டு ஊர்கள்-என்ற நூல், பட்டயப் பெயர்களை ஆய்கிறது. இதே போல முகவை மாவட்டத்தின் வரலாற்றுக் குறிப்புக்களைக் கொண்டதாகச் ''சேதுநாடும் தமிழும்'' என்னும் நூல் இயங்குகின்றது.

தமிழ்த்தொடர்புள்ள இலங்கையிலும், மலேசியாவிலும் பெயர் ஆய்வு பற்றிய சில வெளியீடுகள் காணப்படுகின்றன. தமிழ், சிங்களக்கூறுகளை இனங்காணப் பெயராய்வினைப்

பயன்படுத்தும் முயற்சி இலங்கையிலும், இந்தியச் செல்வாக்கைக் காணும் முயற்சி மலேசியாவிலும் காணப்படுகின்றன.

இனி' இங்கு அறிவியல் அடிப்படையில் பெயராய்வு முறைகளைத் திருப்புல்லாணி ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் உள்ள ஊர்ப்பெயர்களுக்கு ஏற்ற வகையில் காணலாம்.

இடப்பெயராய்விற்கு, வரலாற்று ஆய்வில் முறை (Historical Method), அளவாய்வு முறை (Survey or Descriptive Method) என்ற இருமுறைகள் இவ்வாய்வில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. குறிப்பாகச் சிறிய நிலையிலான ஆய்வு (Small Scale Survey) என்ற பகுப்பால் இவ்விடப்பெயர் ஆய்வினைத் தொடங்க வேண்டியிருந்தது. இவ்வாய்வில் வினாநிரல்பட்டியல், பேட்டி போன்ற சில முறைகளையும் கையாள வேண்டியிருந்தது.

இடப்பெயராய்வின் முறைகளைக் கீழ்க்கண்ட ஐந்து நிலைகளாகப் பகுத்துக்கொண்டு விளக்கலாம். அவைமுறையே 1. இடப்பெயர்களைத் திரட்டல், 2. சான்றுச்செய்திகளைத் திரட்டல், 3. அடையாளம் காணுதல், 4. விளக்கம் செய்தல், 5. வெளியிடுதல் என்பனவாம்.

## 1. பெயராய்வின் முதல்நிலை

திருப்புல்லாணி ஊராட்சி ஒன்றியப்பகுதியையும், சேதுபதிகளின் காலத்திற்கு முன்பும் பின்பும் உள்ள இடப்பெயர்களைத் திரட்டியவையாகும். இடப்பெயர்கள் என்னும்பொழுது சிற்றூர், பேரூர், நகரங்களுள்ளிட்ட ஊர்களில் பெயர்கள், மலை, ஆறு, குளம் ஆகியவற்றின் பெயர்கள் போன்ற பெரும் பெயர்களும் (Major names), தெரு, வீடு, பொதுவிடம், வயல், மேய்ச்சல் நிலம், ஏரி, கால்வாய் போன்ற சிறுபெயர்களும் (Minor names) அடங்கும். இவைகள்

1. வழக்கிலும், எழுத்துச்சான்றிலும் உள்ள பெயர்கள்
2. வழக்கில் மட்டும் உள்ளவை. எழுத்துச்சான்றில் இல்லாத பெயர்கள்
3. வழக்கில்லாமல் மறைந்துபோன, எழுத்துச்சான்றுகளில் மட்டும் உள்ள பெயர்கள்

என மூன்று வகையாக அமைந்திருந்தன.

மூன்றாம் வகைப்பெயர்களை, நடைமுறையிலுள்ள அரசுப் பதிவேடுகள், வரைபடங்கள், மற்றும் கல்வெட்டு, பட்டயம் போன்ற பழமைச்சான்றுகளிலிருந்து திரட்ட முதலில் வாய்ப்புக்கள் கிடைத்தன. இரண்டாம்வகைப் பெயர்கள் நேரடியாகச் சென்றும் உரிய ஆட்களை அமர்த்தியும் திரட்டப்பட்டவைகளாகும்.

## 2. இரண்டாம்நிலை

பெயர் விளக்கத்திற்குத் தேவையான செய்திகளைத் திரட்டியதாகும். பெயர்கள் தோன்றிய காலத்திலிருந்து ஒலித்-திரிபு போன்ற அகக்காரணங்களாலும், அரசியல் சமயம் போன்ற புறக்காரணங்களாலும் உருமாறிக்கொண்டே வருவன இயல் பெயராகும். இம்மாற்றங்களை விளக்குதற்குரிய பெயர்களில் திரிபு வடிவங்கள், மற்றும் உள்ளபிற சான்றுகள் முதலியவற்றைக் கல்வெட்டு, இலக்கியம், வரலாறு போன்றவைகளிலிருந்து திரட்ட வேண்டியிருந்தன. இப்படி எழுத்துச்சான்றுகளைத் திரட்டுவது போல, வாய்மொழிச் சான்றுகளையும் திரட்டுவது இன்றியமை-யாதவைாய் இருந்தன. பெயர்களில் தற்கால வழக்கு வடிவங்கள், மற்றும் கதைகள், பாமரச் சொற்பொருள் விளக்கங்கள் ஆகிய-வைகளையும் நேரில் சென்று திரட்டவேண்டியிருந்தன. மேலும் பெயர் விளக்கத்திற்குத் தேவையான இயற்கை அமைப்புப் போன்ற செய்திகளையும் நேரில் சுற்றிப்பார்த்துச் சேகரிக்க வேண்டியிருந்தன. திருப்புல்லாணி ஒன்றியப்பகுதியில் செய்திகள் சேகரிக்க, நேரடிச் சுற்றுப்பயணங்களும், ஒலிப்பதிவுக்கருவிகளும் மிகவும் உதவியாய் இருந்தன.

## 3. அடையாளம் காணுதல்

இப்பணி வரலாற்று உணர்வு உடையவர்கள் செயல்பட-வேண்டிய ஒன்று. பழைய எழுத்துச் சான்றுகளிலிருந்து திரட்டும் பெயர்களின் தற்கால வடிவையும், தற்கால வடிவத்தில் பழைய வடிவங்களையும் அடையாளம் கண்டுபிடித்தலும், இப்பணியில் முக்கியமாய்த் திகழ்வன என்பதைக் களஆய்வின் மூலம் கிடைத்த அனுபவத்தை வைத்துக்கூற முடியும். சான்றாக, இவ்வொன்றி-யத்திலுள்ள 'பெரியபட்டணம்' என்னும் ஊர் வரலாற்றுக் கருவூலமாக விளங்குகிறது.

4. பெயர்களின் உண்மைப்பொருளையும், அவை தோன்றியதன் காரணத்தையும் விளக்குதலே, இவ்வாய்வு நிலையின் இறுதியாகும். முதல் மூன்று நிலைகளும் இன்றிப் பொருள் விளக்கம் செய்ய முயல்வது, கதைசொல்வது அல்லது புராணம் கட்டுவது போன்றதாகும். விளக்குதல் என்பது உண்மையில் சொற்பொருள் விளக்கம் செய்தலேயாகும். இதற்கு எடுத்துக்காட்டாகத் திருப்புல்லணை என்ற சொல்லில் அமைந்த ஊர்ப்பெயரை எடுத்துக் கொண்டு ஆராயலாம்.

முதலாவதாக, இடப்பெயர்களின் உண்மையான மூல வடிவத்தை உறுதிப்படுத்துதல், காலவாரியாகத்திரட்டிய பெயரின் பல்வேறு வடிவங்களை அடிப்படையாகக் கொண்டு மீட்டுக் கொடுத்தல் ஆகிய இவ்விரு வேலைகளையும் செய்துகொண்டு, வரலாற்று மொழியியலின் விதிக்குட்பட்டே செயல்பட வேண்டியிருந்தது. இங்கு, ஓவியவியல், உருபவியல், பொருளவியல் மாற்றங்களைப் பற்றிய விதிகளே மேல்வரிச் சட்டங்களாகப் பயன்பட்டன. சான்றாகக் கீழக்கரை என்பது மொழியியல் அடிப்படையில் கிழக்கு + கரை = கிழக்குக்கரை > கீழ்க்கரை > கீழக்கரை என்று மாறி வழங்குவதைக் கூறலாம்.

சிலவகையான பெயர்களில், மூலவடிவங்களை அறிதலிலும் மூலவடிவங்கள் தெரிந்தாலும் அவற்றில் பல்வேறு பகுதிவிகுதி-களையும், பொருளையும் பிரித்து அறிதலிலும் சிக்கல் ஏற்படுவ-துண்டு. அப்பொழுது ஒத்த பல பெயர்களை ஒரேமொழியிலும், இனமொழியிலும் உள்ளவற்றை எடுத்து நோக்கும்போது தெளிவு பிறப்பதுண்டு.

மேலும் பெயர்களின் தோற்றத்தை அறிய மொழியியல் அல்லாத பிறதுறையறிவுகளும் தேவைப்பட்டன. பெயர்களின் பின்புலங்களை (பின்ஒட்டுக்கள்) அறிய அப்பகுதியில் வாழும் மக்கள் பேசும் மொழிகள், வழக்கியல்புகள் மட்டுமின்றி, அதன் வரலாறு, வாழும் இனங்கள், சாதி, சமயப்பிரிவுகள், பழக்க வழக்கங்கள், புராணக்கதைகள், மரபுக்கதைகள், செவிவழிச் செய்திகள் ஆகியவைகளையும் பயன்படுத்த வேண்டிய இன்றியமையாமை மிகுந்தன. சான்றாக, இப்பகுதியில் 'வலசை' என்ற பின்ஒட்டில் அதிகமான ஊர்கள் இருக்கின்றன. இவைகள்

எல்லாம் பெயர்பெற்ற காரணங்களை, துணுகி ஆராயும்பொழுது, மேற்குறிப்பிட்ட பல செய்திகளின் அடிப்படையாலேயே உணர்ந்து அறியமுடிந்தன.

பொருள் விளக்கம் செய்யும்பொழுது சான்றுகட்கு உட்பட்டு, காரணகாரிய முறையிலேயே செய்கிறோம். சான்றுகள் இல்லாத பொழுது வெற்று ஊகங்களில் ஈடுபடாது, விளங்கவில்லை என்றே கூறிவிடுகிறோம். இதுவே, இத்தகு ஆய்வில் நேர்மையான வழியாகும்; இல்லை என்றால், பிற்காலத்தில் ஆய்வு செய்பவர்களுக்குக் குழப்பத்தையும், தெளிவில்லாமையையும் செய்துவிடும்.

பொதுவாகப் பெயர்க்காரணங்களை ஆராயும்பொழுது நாம் கடைப்பிடிக்க வேண்டிய முதல்வேலை, அவைகளை வகைப்படுத்துதல் ஆகும். வகைப்படுத்துதல் என்பது, பெயர்களைக் காலவாரியாகவோ, இடவாரியாகவோ, பெயரமைப்பு முறை அல்லது பெயர்க்கூறுகளின் பகுதிவிகுதிகளின் அடிப்படையிலோ, இன்னும் இவைபோன்ற வேறு ஏதாவது அடிப்படையிலோ பெயர்களைப் பாகுபாடு செய்து பல்வகையாகப் பிரிக்கலாம். திருப்புல்லாணி ஊராட்சி ஒன்றியத்தின் ஊர்ப்பெயர்க் காரணங்களை ஆராயக் கீழ்க்கண்டவகையில் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

அவை முறையே,

(திருப்புல்லாணி ஒன்றியம்—ஓர் அறிமுகம்)

1. ஊராட்சியும் பெயராட்சியும்
2. கோவிலின் பெயரால் வழங்கும் ஊர்கள்
3. வணிக—வரலாற்றுச் சிறப்பு ஊடாடும் ஊர்கள்
4. கருப்பொருளால் சுட்டிய ஊர்ப்பெயர்கள்
5. சமூக அடிப்படையில் உருவான ஊர்ப்பெயர்கள்
6. 'வலசை' (பின்) ஒட்டில் ஊர்ப்பெயர்கள்

என்பனவாம்.

5. வெளியீடு என்பது தமிழியல் துறையில் மிகவும் குறைவு. எனவே, இனிவரும் காலங்களிலாவது, முறையான ஆய்வுகளைத்

தமிழ்ச்சமுதாயத்திற்குப் பயன்படும் வகையில் வெளியிடவேண்டும். குறிப்பாக, இப்புதிய முறையில் உருவாகிவரும் இப்பெயராய்வு-களின் முடிவாகப் பெரும் பெயர்களடங்கிய அகராதிகள் வெளியிடவேண்டும். மேலும் மதுரைப் பல்கலைக்கழக நூல் வெளியீட்டுத் துறையினரால், இத்தகுப் பெயராய்வு ஏட்டினை அச்சிட்டுத் தமிழ் உலகுக்கு அறிமுகம் செய்துவைத்தால் இத்துறை மேலும் வளரும்; வளம்பெறும் என்பதில் ஐயமில்லை.

ஆய்வுக்கு எடுத்துக்கொண்ட திருப்புல்லாணி ஊராட்சி ஒன்றியம், முகவை மாவட்டத்தில் அமைந்துள்ளது. இவ்வொன்றியம் 33 சிறிய ஊராட்சியுப், ஒரு பேரூராட்சியும் உடையது. இராமநாதபுரத்திலிருந்து 12 கி.மீ. தூரத்தில் இவ்வொன்றியம் அமைந்துள்ளது. இதன் தெற்கே வங்கக்கடல் உள்ளது. எழில்மிகு கோவில்களும், ஏற்றமிகும் சிம்மாமசூதியும், முத்தாய்ப்பாய் விளங்கும் முத்துப்பேட்டை தேவாலயமும் இவ்வொன்றியத்திற்கு மேலும் மெருகு ஊட்டுகின்றன. பண்டைய வரலாற்றை நினைவு கூரச்செய்யும் பெரியபட்டினமும், வாணிகத்தின் கொடுமுடியாக விளங்கும் கீழக்கரையும், இவ்வொன்றியத்தின் தலையாய இடத்தைப் பெறுகின்றன.

இத்தகு ஊர்களின் பெயர்கள், எக் காலகட்டங்சளில் எழுந்தன; அக்காலத்து வாழ்ந்து சிறந்த மன்னவர்கள் தாம் யாவர் என்டதை எல்லாம் அறிய வகைசெய்கிறது இவ்வாய்வு. ''மண்முந்தியதோ பெண்முந்தியதோ'' என்று இவ்வட்டாரத்தில் வழங்கும் பழமொழி, இங்குள்ள உத்தரகோசமங்கை என்றும் பழம் பெருமை வாய்ந்த இடத்தைக் குறிக்கிறது. இன்று, இவ்வூர் பாண்டிய மன்னர்கள் ஆட்சிபுரிந்து வாழ்ந்து சிறந்த செம்மையையும், பழமையையும் நினைவு கூரவைக்கிறது. இவற்றை எல்லாம் ஒருங்கே எண்ணி ஆராய இவ்வூர்ப்பெயர் ஆராய்ச்சி வகைசெய்கிறது.

இவ்வாராய்ச்சிக் கட்டுரையில், இடப்பெயர்க்காரணங்களைத் திரட்டல் மட்டுமன்றி, அதன் சுற்றுச்சூழலில் காணப்படும் முதற்-பொருள், கருப்பொருள் அடிப்படையில் மெய்ம்மைகளைத் தேடுதல் பற்றிய விவரங்களையும் கூறலாம். இத்தகு செய்திகளைக் கொண்டு முடிவுகாண எண்ணினால், இவ்வாராய்ச்சியின் நோக்கும், போக்கும் விளங்குவதோடு, ஆய்வுக்குப் பின்பற்றப்போகும் வழிமுறைகளும் தெளிவாகப் புலப்படும்.

# 1. திருப்புல்லாணி ஊராட்சி ஒன்றியம் - ஓர் அறிமுகம்

திருப்புல்லாணி ஒன்றியம் முகவை மாவட்டத்தில் அமைந்-துள்ளது. இவ்வொன்றியம் இராமநாதபுரத்திலிருந்து 12 கி. மீட்டர் தூரத்தில் உள்ளது. இதன் வடக்கே இராமநாதபுரம் ஒன்றியமும், வடமேற்கே போகலூர் ஒன்றியமும், தென்மேற்கே கடலாடி ஒன்றியமும், தெற்கே வங்கக்கடலும், கிழக்கே மண்டபம் ஒன்றியமும் உள்ளன. (இதைப்பற்றிய படவிளக்கத்தைப் பின்-னிணைப்பில் காணலாம்). முதன்முதலில் இப்பகுதியைத் திருப்-புல்லாணி 'பிளாக்கு' (Block) என்று 1.10.1958 முதல் அழைத்தனர்; பின்னர் ஊராட்சி ஒன்றியம் என்ற பெயரில் 2.10.1961இல் செயல்படத் தொடங்கியது. இவ்வொன்றியம் 'நான்காம் நிலை' என்ற தகுதியில் வரையறுக்கப்பட்டுள்ளது. இதன் மொத்தப்பரப்-பளவு 311 சதுர கி.மீட்டர் ஆகும். ஒன்றியத்தின் மக்கட்தொகை எண்ணிக்கை 75,728 எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இவ்-வொன்றியத்தில் 33 சிறிய ஊராட்சியும், ஒரு பேரூராட்சியும் உள்ளன. சிறப்பான 151 உட்கிடைகளைத் தன்னகத்தே கொண்டது. வருவாய்க்குரிய கிராமங்கள் (Revenue Villages) மொத்தம் 25 ஆகும். இவ்வொன்றியத்தில் ஆளில்லாக் கிராமங்கள் எனப் பல ஊர்கள் உள்ளன. அவற்றை எல்லாம் இவ்வாய்வுக்கு எடுத்துக்கொள்ளவில்லை.

இவ்வொன்றியத்திலுள்ள ஊராட்சிகள் பின்வருமாறு :

1. இரகுநாதபுரம்
2. சின்னாண்டிவலசை
3. முத்துப்பேட்டை
4. நயினாமரைக்கான்
5. பத்திராதரவை
6. பெரியபட்டணம்
7. வண்ணாங்குண்டு
8. களிமண்குண்டு
9. மேதலோடை
10. குதக்கோட்டை
11. உத்தரவை
12. திணைக்குளம்
13. சேதுக்கரை
14. திருப்புல்லாணி
15. தாதனேந்தல்
16. கோரைக்கூட்டம்
17. காஞ்சிரங்குடி
18. கீழக்கரை

19. தில்லேந்தல்
20. மாயாகுளம்
21. குளபதம்
22. கொம்பூதி
23. வேளாலூர்
24. மேலமடை
25. பனையடியேந்தல்
26. களரி
27. வெள்ளாமருச்சுகட்டி
28. உத்திரகோசமங்கை
29. நல்லிருக்கை
30. ஆலங்குளம்
31. மல்லல்
32. பனைக்குளம்
33. லாந்தை
34. எக்ககுடி

என 34 ஊராட்சிகள் உள்ளன.

இவ்வொன்றியத்திலுள்ள உட்கடைகளைப் பின்வருமாறு பகுத்துக்கூறலாம்.

1. 'வலசை' என்ற பின்ஒட்டில் வரும் ஊர்ப்பெயர்கள்.

1. சீனிவலசை
2. உப்புலாவலசை
3. பிச்சைவலசை
4. முத்துவீரப்பன் வலசை
5. காஞ்சிரங்குடி
6. உமையணன் வலசை
7. நம்பியான் வலசை
8. வள்ளிமாடன் வலசை
9. காடுகாவல்காரன் வலசை
10. கொட்டியக்காரன் வலசை
11. சின்னாண்டி வலசை
12. சங்கன்வலசை
13. வில்லிவலசை
14. துறையான் வலசை
15. மகுவி வலசை
16. சிலம்பன் வலசை
17. மோதி வலசை
18. மொங்கான் வலசை
19. கட்டையபிரான் வலசை
20. குத்துக்கல் வலசை
21. குப்பச்சி வலசை
22. மொட்டையன் வலசை
23. வெள்ளையன் வலசை
24. கட்டையன் வலசை
25. தோப்பு வலசை
26. பூச்சி வலசை
27. பருத்திக்காட்டு வலசை
28. வீரவேல் வலசை
29. மணியக்காரன் வலசை
30. ரெகுநாதபுரம் வலசை

31. ரெகுநாதபுரம் கீழ வலசை
32. சின்னரெகுநாத வலசை
33. வீரன் வலசை.

## 2. 'ஏந்தல்' என்ற பின் ஒட்டில் வரும் ஊர்ப்பெயர்கள் :

1. செட்டி ஏந்தல்
2. பனையடி ஏந்தல்
3. தில்லேந்தல்
4. கீழத்தில்லேந்தல்
5. மேலத்தில்லேந்தல்
6. பாலயனேந்தல்
7. சின்னப்பாலயனேந்தல்
8. தண்டனேந்தல்
9. தாதனேந்தல்
10. வலயனேந்தல்
11. பொக்கனரேந்தல்.

## 3. 'குளம்' என்ற பின்ஒட்டில் வரும் ஊர்ப்பெயர்கள் :

1. கருங்குளம்
2. பனைக்குளம்
3. புக்குளம்
4. பக்கிரிபுதுக்குளம்
5. கொத்தங்குளம்
6. கதைக்குளம்
7. கொடிக்குளம்
8. வெண்குளம்
9. ஆலங்குளம்
10. புதுக்குளம்
11. மாயாகுளம்
12. புதுமாயாகுளம்
13. சின்னமாயாகுளம்
14. பள்ளமோர்குளம்
15. தினைக்குளம்.

## 4. 'குடி' என்ற பின்ஒட்டில் வரும் ஊர்ப்பெயர்கள் :

1. பெருந்தாமரைக்குடி
2. கடம்பங்குடி
3. எக்ககுடி
4. அருகுடி
5. பெரியகண்ணன் குடி
6. ஆனைக்குடி
7. காஞ்சிரக்குடி
8. கீழப்புதுக்குடி
9. சிட்டாங்குடி
10. மாலங்குடி (மல்லல்)
11. மாலங்குடி (பனைக்குளம்).

5. 'ஊர்' என்ற பின்ஒட்டில் வரும் ஊர்ப்பெயர்கள் :

1. வித்தானூர்
2. தெய்வச்சிலை நல்லூர்
3. வேளாலூர் வடக்கு
4. வேளாலூர் தெற்கு
5. செல்வனூர்
6. புதூர் (வள்ளுவர் குண்டு)
7. மேலூர் (ரெகுநாத புரம்).

6. 'தோட்டம்' என்ற பின்ஒட்டில் வரும் ஊர்ப்பெயர்கள் :

1. சுண்டைக்காய்த் தோட்டம்
2. செட்டிதோட்டம்
3. மடுவிழந்தான் தோட்டம்
4. எ.எம்.ஆர்.தோட்டம்
5. புகாரித் தோட்டம்.

7. 'காடு' என்ற பின்ஒட்டில் வரும் ஊர்ப்பெயர்கள் :

1. தோப்புக்காடு (மாயாகுளம்)
2. தோப்புக்காடு (முத்துப்பேட்டை)
3. தோட்டக்காடு
4. நந்தக்காடு.

8. 'புரம்' என்று பின்ஒட்டில் வரும் ஊர்ப்பெயர்கள் :

1. லெட்சுமிபுரம்
2. குமாரபுரம்
3. ஆதியட்சபுரம்
4. நேருபுரம்
5. கிருஷ்ணாபுரம்
6. ரெகுநாதபரம்.

9. 'ஓடை' என்ற பின்ஒட்டில வரும் ஊர்ப்பெயர்கள் :

1. செங்கல் நீரோடை
2. மேதல் ஓடை (வடக்கு)
3. மேதல் ஓடை (தெற்கு)

10. 'மல்லல்' என்ற பின்ஒட்டில் வரும் ஊர்ப்பெயர்கள் :

1. மல்லல்
2. வடக்குமல்லல்
3. தெற்குமல்லல்.

11. 'தை' என்னும் பின்ஒட்டில்வரும் ஊர்ப்பெயர்கள் :

1. லாந்தை
2. கன்னந்தை
3. கீழச்சீத்தை
4. புல்லந்தை.

12. 'தாங்கி' எனும் விகுதிபெற்ற ஊர்ப்பெயர்கள் :

1. சுமைதாங்கி
2. பஞ்சந்தாங்கி.

13. 'கட்டம்' என்ற பின்ஒட்டில் வரும் ஊர்ப்பெயர்கள் :

1. ஆமைக்கட்டம்
2. கோரைக்கட்டம்.

14. 'தோப்பு' என முடியும் ஊர்ப்பெயர்கள் :

1. கடற்கரைத்தோப்பு
2. சாலைத்தோப்பு
3. கொள்ளந்தோப்பு.

15. 'கரை' என்னும் விகுதிபெற்ற ஊர்ப்பெயர்கள் :

1. கீழக்கரை
2. சேதுக்கரை
3. பன்னக்கரை

16. 'தரவை' எனும் பின்ஒட்டில் முடியும் ஊர்ப்பெயர்கள் :

1. உத்தரவை
2. பத்திராதரவை
3. பத்திராதரவைராசவெளி.

**17. 'வாடி' என்னும் பின்ஒட்டில் முடியும் ஊர்ப்பெயர்கள்:**

1. முள்ளுவாடி
2. அலவாக்கரைவாடி.

**18. 'குண்டு' எனும் விகுதியில் முடியும் ஊர்ப்பெயர்கள்:**

1. வண்ணாங்குண்டு
2. களிமண்குண்டு.

**19. 'கான்' எனும் விகுதி பெற்ற ஊர்ப்பெயர்கள்:**

1. நைனாமரைக்கான்
2. கொடைக்கான்.

**20. 'பல்வகையில் முடியும்' பின்ஒட்டுக்களின் அடிப்படையில் எழுந்த ஊர்ப்பெயர்கள்:**

1. உத்திரகோச மங்கை
2. வெள்ளாமருச்சுக்கட்டி
3. கைலாசமங்கலம்
4. நல்லிருக்கை
5. கோனேரி
6. களரி
7. மேலமடை
8. கருக்காத்தி
9. கொம்பூதி
10. குளபதம்
11. வைகை
12. கொம்பிடா மதுரை
13. பழஞ்சிராய்
14. நத்தம்
15. புதுநகர் (காஞ்சிரங்குடி)
16. அகஸ்தியர்தீர்த்தம்
17. திருப்புல்லாணி
18. பள்ளபச்சேரி
19. கைக்களர்மடம்
20. ரெட்டையூரணி
21. குதக்கோட்டை
22. புதுக்கோவில் (சின்னாண்டிவலசை)
23. பெரிய நிலம்
24. சிலப்பிநாடு
25. நாகநாதசமுத்திரம்
26. இளங்காமணி
27. புருக்கலன்பட்டி
28. முத்துப்பேட்டை
29. நடுத்தெரு
30. பெரியபட்டணம்
31. இளந்தொடை

என்ற மேற்கூறிய 20 வகையான பின்ஒட்டுக்களில் வைத்துப் பகுத்து, ஊர்ப்பெயர் காரணங்களை ஆராயலாம். இப்பகுப்புக்களில் 'வலசை' என்னும் பின்ஒட்டில் முடியும் ஊர்ப்பெயர்கள் முப்பத்து மூன்றாகும். குறிப்பாகக் கோவில், குளங்கள் இவ்வொன்றியத்தில் தொகையால் பலவாகவும், பெயர் வகையால் சிறப்பாகவும் உள்ளன எனலாம்.

இங்கு வாழும் மக்கள் பலர் கடலை நம்பித் தொழில்செய்து வாழ்கிறார்கள். சிலர் உப்புவணிகம் செய்கிறார்கள்; சிலர் கடலில் மீன்பிடித்து உண்டும் விற்றும் வாழ்கிறார்கள்: இன்னும் சிலர் பல்நோக்கு வாணிகம் நடத்துகிறார்கள்: வேறுசிலர் வேளாண் தொழில் செய்கிறார்கள். இப்பகுதியிலுள்ள நிலங்கள் களர், கரிசல் தன்மையைப் பெற்றுள்ளன. சிற்சில பகுதிகள் மணற்பாங்காகக் காட்சியளிக்கின்றன. அப்பகுதிகளில் பலவிடங்களில் பனை, தென்னை மரங்கள் பல்கித் தோப்பாக வளர்ந்து கண்ணுக்கினிய காட்சியை நல்குகின்றன.

இப்பகுதியில் இந்து சமயத்தவருக்கு அடுத்தபடியாக மகம்மதியர்கள் அதிகம். கிறித்தவர்கள் மிகக்குறைவு. கடற்கரையோரப் பகுதிகளில் எங்கும் மகம்மதியர்கள் ஆட்சிநிலவி வந்துள்ளமையை, இவ்வொன்றியத்திலும் அதனை அடுத்துள்ள பகுதியிலும் மகம்மதியர்களின் பள்ளிவாசல், தர்கா போன்றவைகள் இருப்பதால் உணரலாம். இங்குள்ள கீழக்கரையில் தான் ''செத்தும் கொடுத்தான் சீதக்காதி''யின் உடல் அடக்கம் செய்யப்பட்டுள்ளது. இங்குள்ள பள்ளிவாசல் 'சிம்மா மகுதி' என்ற பெயரால் அழைக்கப்படுகிறது. இங்குக் கடல் வாணிகம் நடத்திய காலத்தில் டச்சுக்காரர்கள் வந்து தங்கிச் சேதுபதிகளின் அனுமதியின்றிக் கட்டிய கட்டிடங்கள் கடற்கரையில் இன்றும் நின்று நிலவுவதைக் காணலாம்.

இவ்வொன்றியத்தில் வரலாற்றுப் புகழ்பெற்ற வாணிபச் சிறப்புடைய இரு ஊர்களைப் பார்க்கலாம். ஒன்று பெரியபட்டிணம், மற்றொன்று முத்துப்பேட்டை, பௌத்திரமாணிக்கப்பட்டின்மாகப் பன்னெடுங்காலத்திற்கு முன்பே வழங்கப்பெற்ற, சங்கப் புகழ்மிக்க நகரம்தான், இன்றைய பெரியபட்டிணமாகும்.

முகவை மாவட்டத்திலேயே 'வலசை' என்ற பின்ஒட்டுப் பெற்ற ஊர்கள் இவ்வொன்றியத்தில் மட்டுந்தாம் உள்ளன.

குறிப்பாக, இவ்வொன்றியத்தின் கிழக்குப் பகுதியில் உள்ள ஊர்களில் மட்டும்தாம் 'வலசை' என்று முடியும் ஊர்கள் உள்ளன. 'வலசை' என்று பெயர் ஏற்படக்காரணமும் உண்டு. இப்பெயர்கள் பெரும்பாலும் 16ஆம் நூற்றாண்டிற்குப் பின்னரே தமிழகத்திற்குள் நுழைந்திருக்க வேண்டும். இம்மாவட்டத்தைத் தவிர கோவையில் 'வல்சு' என்ற விகுதிகளில் முடியும் ஊர்கள் பற்பலவாகும்[1] கன்னட நாட்டில் ஆந்திராவிலும் 'வலசைகள்' என்ற அமைப்பில் வேறுவகையான பெயர்களில் பல ஊர்கள் அமைந்திருப்பதையும் காணலாம்.

இங்குள்ள ஊர்களில் பல சேதுபதி அரசு பரம்பரைக்குச் சொந்தமானவைகள். இவற்றையெல்லாம் பல கோவில்களுக்குக் கொடையாக வழங்கியுள்ளார்கள். இதற்குச்சேதுபதி அரண்மனையில் உள்ள செப்புப்பட்டங்கள் சான்று தருகின்றன. இத்துடன் அமைச்சர் நிலையிலுள்ளவர்களுக்கும் பிற்கால வாழ்வுக்கு வழிசெய்யும் வகையில், அவர்கள் வாழும் கிராமங்களை அவர்களுக்கே கொடையாக வழங்கியுள்ளார்கள்.

அமைப்பு :

இப்பகுதிகளில் வாழும் மக்கள் நல்வாழ்வுக்காக அமைக்கப்பட்ட நல்வாழ்வு மையங்கள் இருவகையில் செயல்படுகின்றன். ஒன்று மகப்பேறு இல்லங்களாகவும், மற்றொன்று புறநகர் மருத்துவ இல்லங்களாகவும் செயல்படுகின்றன. இந்த மையங்களில் மகப்பேறு இல்லங்கள் ஆறு உள்ளன. புறநகர் மருத்துவ இல்லங்கள் நான்கு உள்ளன. இதைத்தவிர வேளாண்மைக் கிடங்குகள் இரண்டு உள்ளன. இவற்றில் ஒன்று திருப்புல்லாணியிலும், மற்றொன்று உத்தரகோச மங்கையிலும் உள்ளன.

கால்நடைகளே ஒருநாட்டின் செல்வங்கள், இவைகளைக் காக்க, இவ்வொன்றியத்திலும் கால்நடை மருத்துவ நிலையங்களைக் கிராமங்களிலும் தொடங்கியுள்ளார்கள். முதன்முதலில் இம்மருத்துவமனை இப்போது கீழக்கரை என்ற ஊராட்சியில் மட்டுமே செயல்படத் தொடங்கியுள்ளது. மேலும் சந்தை கூடுதல், இவ்வொன்றியத்தில் இவ்வூரைத் தவிர (கீழக்கரை) வேறு எங்கும் இருப்பதாகத் தெரியவில்லை.

1. K. Nachimuthu, 'Internal Migrations and Place Names of Tamilakam' JDT Vol. I (1970), PP. 38-44

## வாய்ப்பும் வசதிகளும்

இவ்வொன்றியத்தில் அமைக்கப்பட்டுள்ள சாலைகளின் நீளம் 86.7 கி.மீட்டர் தூரமாகும். இங்குள்ள தொடக்கப்பள்ளிகள் 45; உயர்தொடக்கப்பள்ளி 6; இவற்றில் அரசுடைமையில் உள்ள பள்ளிகள் 41; வாடகையில் உள்ள பள்ளிகள் 3; இலவச கட்டிடங்களில் உள்ள பள்ளிகள் 7 ஆகும்.

இவ்வொன்றியத்தால் நடத்தப்படும் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் எண்ணிக்கை 7827. இவற்றில் 4551 சிறுவர்கள்; 3326 சிறுமியர்கள். இப்பள்ளிகளில் பயிற்றுவிக்கும் 'உயர்கல்வி பயிற்சிப்' பெற்றவர்கள் 129 பேர். 'இரண்டாம் நிலைக் கல்விப்பயிற்சி' பெற்றவர்கள் 123 பேர். ஆசிரியர் பயிற்சிப் பட்டம் பெற்றவர்கள் (B.T.) இருவர். இதைத்தவிர, தனியார் பள்ளிகள் 18 இருக்கின்றன. இவற்றில் எல்லாம் சேர்ந்து பயிலும் மாணவர்கள் 5817 + 3710 = 9527 பேர். பயிற்றுவிக்கும் ஆசிரியர்கள் 'உயர்கல்விப்பயிற்சி' பெற்றவர்கள் 68 பேர். 'இரண்டாம் நிலை கல்விப்பயிற்சி' பெற்றவர்கள் 102 பேர். ஆசிரியர் பயிற்சிப்பட்டம் பெற்ற (B.T.) ஆசிரியர் ஒருவர்.

மேலும் இவ்வொன்றியத்தில் ஆழ்கிணறுத்திட்டத்தில் 19 கிணறுகளும், திறந்த வெளிக்கிணறுகள் 184-ம், அடிகுழாய்கள் 71-ம், குடிநீர்த்தேக்கங்கள் 176-ம், அமைக்கப்பட்டுக் குடிநீர்ப்பிரச்சனையின்றி இவ்வொன்றியம் தன்னிறைவு பெற்றுத் திகழ்கின்றது. வேளாண்மையில் தன்னிறைவு பெறுவதற்காக இவ்வொன்றியம் பல வளர்ச்சித் திட்டங்களை வகுத்துள்ளது. இப்பகுதிகளில் உள்ள குளங்களில் பெரும் அளவு பாசனத்திற்குரியவை எட்டாகும். சிறிய அளவில் உதவக்கூடியவை 46. இவற்றோடு பொதுப்பணித்துறையைச் சார்ந்த குளங்கள் 22. சமுதாயக் கிணறுகள் ஒன்பதும் இருக்கின்றன. இப்பகுதியிலுள்ள நிலங்களில் பெரும்பாலானவை வைகைநீரை நம்பியே உள்ளன. சமுதாயத்தின் முன்னேற்றத்திற்காகப் பல நன்மையான மகிழ்ச்சியைத் தூண்டிவிடக்கூடிய சில நிலையங்களை இவ்வொன்றியத்தில் அமைத்துள்ளார்கள் இவற்றில் சமூக நல்வாழ்வு. மையங்கள் முதலிடம் வைக்கின்றன. இவை இவ்வொன்றியத்தில்

32 இடங்களில் உள்ளன. இவை தவிர கல்விக்கண் திறக்க, ஆறு நூலகங்களையும் திறந்துள்ளார்கள். அறிவுக்கண்களைத் திறக்க இரண்டு வானொலிச் செய்திகளைப் பரப்பும் மையங்களையும் ஏற்படுத்தியுள்ளார்கள்.

இவற்றோடு, நில்லாமல் பெண்கள் வாழ்வுக்காக மகளிர் நல்வாழ்வு மன்றங்கள் முப்பது இப்பகுதியில் திறக்கப்பட்டுள்ளன. இப்படி எல்லாவகையான வசதிகளையும் வாய்ப்புக்களையும் இவ்வொன்றியம் இங்குள்ள மக்களுக்கு அளித்து வருகிறது என்றால் மிகையாகாது.

இறுதியாக, இவ்வொன்றியத்திலுள்ள வரலாற்று, புராண அடிப்படையில் தோன்றிய ஊர்களைப் பற்றியும், கோவில் அமைப்பால் உண்டான ஊர்களைப் பற்றியும் விரிவாகவும் விளக்கமாகவும் அறிவதற்காகவே, இப்பெயர்க் காரண ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது; களஆய்வில் இவ்வாய்வாளர் நேரில் கண்டுத்திரட்டியச் செய்திகளைக்கொண்டு ஊர்ப்பெயர்க் காரணங்கள் சுட்டப்பட்டுள்ளன. அவற்றை வரும் இயல்களில் காணலாம்.

# 2. கோவிலின் பெயரால் வழங்கும் ஊர்கள்

திருக்கோவில்களினால் தமிழ்நாட்டிற்குப் பெருஞ்சிறப்பு உண்டு. பல பழமையான ஊர்களில் இன்றும் கோவில்கள் நடுநாயகமாக அமைந்திருக்கின்றன. கோவில்கொண்ட பெருமானது தேர் ஓடும் திருவீதிகள் சிறந்த தெருக்களாகத் திகழ்கின்றன. குறிப்பாகப் பழமைச்சிறப்பு வாய்ந்த திருப்புல்லாணி செகநாதர் கோவிலும், அங்குத் தேர் ஓடும் திருவீதிகளும் இன்றும் காணும்படியாகச் சீரான நிலையில் இருக்கின்றன. தமிழ்நாட்டில் பல ஊர்கள் இறைவனோடு (உத்தரகோச மங்கை) தொடர்புற்ற பெயரால் திகழ்தல் இயல்பேயாகும்.

பழங்காலத்தில் ஆண்டவனை மரங்களிலும் சோலைகளிலும் வைத்துத் தமிழ்நாட்டார் வழிபட்டார்கள். ஈசன் கல்லாலின் கீழிருந்து நல்லார் நால்வர்க்கு உறுதிப்பொருளை உணர்த்தினார் என்பர்.[2] முருகவேள் கடம்ப மரத்தில் விரும்பி உறைதவால் கடம்பன் என்று பெயர் பெற்றார்.[3] பிள்ளையார் அரசமரங்கள் இருக்குமிடங்களிலெல்லாம் அமர்ந்து காட்சியளிக்கின்றார்.

தமிழ்நாட்டில் வாழ்ந்த ஆன்றோர் பலர், மரங்களின் கீழிருந்து மெய்யுணர்வு பெற்றார்கள். திருவாசகம் பாடிய மணிவாசகர் குருந்தமரத்தடியில் ஈசன் திருவருளைப் பெற்றார். திருமால் அடியார்களில் சிறந்த நம்மாழ்வார் புளியமரத்தின்கீழ் அமர்த்து புனிதராயினார். இங்ஙனம் சிறந்து விளங்கிய மரங்களும் சோலைகளும் இறைவனை வழிபடுதற்குரிய கோயில்களாயின. குறிப்பாகத் திருப்புல்லாணித் தலத்திலுள்ள 'அரசமரம்' (தலவிருட்சம்) இறைவனாகக் கருதிப் போற்றுதற்குரிய ஒன்றாக விளங்குகிறது.

பழங்காலந்தொடங்கித் திருமால் வீற்றிருக்கும் கோவிலாயினும், சிவபெருமான் வீற்றிருக்கும் கோவிலாயினும், தலவிருட்சப் ஒன்றைத் தலபுராணங்களில் குறிப்பிடுவது வழக்கம். இதைச் சான்றாக வைந்துக்கொண்டு, குறிப்பிட்ட கோவில்கள் இருக்குமிடத்தில் எத்தகைய மரங்கள் அடர்ந்த காடுகள் இருந்தன என்பதை ஊகித்தறிவார்கள். அத்தகைய தலமரங்களின் தன்மையையும் அம்மரங்கள் குறித்து வழங்கும் பழங்கதைகளையும் கேட்கக்கேட்க, வியப்பாகவே இருக்கும். இராமநாதபுரம் தேவலாயத்தைச்

சேர்ந்ததும், பக்கத்தில் உள்ளதுமான "பார்மேல் சிவபுரம்போல் கொண்டாடும் உத்தரகோச மங்கை ஊர்" என்று சிறப்பித்துப் போற்றப்படும் ஆதி சிதம்பரமான உத்தரகோச மங்கை என்னும் ஊரில், சகசரலிங்கப் பெருமாள் கோவிலிலுள்ள தலவிருட்சமான "இலந்தை"யைப் பற்றியும், திருவரங்கம் பெரிய கோவில் எனப்-போற்றப்படும் திருவரங்கத்தில் சந்திர புசுகரிணிக்கரையில் உள்ள புன்னைமரத்தைப் பற்றியும் கூறப்படும் சிறப்பியல்புகள் சிந்தனையைத் தூண்டிவிடும். இவ்வண்ணமே திருப்புல்லாணி தலத்திலுள்ள அரசமரம் (அசுவத்த விருட்சம்) பற்றிய பழங்கதை-களையும் அம்மரத்தினால் கிடைக்கும் விளைவுகளையும் இவ்வூர் மக்கள் வியப்பாக எடுத்துரைக்கின்றார்கள்.

"மருமலர் பிறந்தகோதை மருவிமகிழும் புல்லாணி வளர் அரசு"[4] என்ற அரசமரப்பாட்டினால், இந்த மரத்தை, இக்கோவில் தாயார் மருவி மகிழ்ந்து வருகிறாள் என்ற சிறப்பையும் அறியலாம்.

நறுமணம் கமழும் செடி, கொடிகள் செழித்தோங்கி வளர்ந்த சூழல்களிலும் பண்டைத்தமிழர் ஆண்டவன் அருள் விளங்கக் கண்டார்கள். இத்தகு காட்சிகளில் ஒன்றினைத் தேவாரத்தில் உள்ள ஒரு பாடலால் அறியலாம்.[5] தேவாரத்தில் கொகுடிக்-கோவில் என்னும் பெயருடைய ஆலயம் ஒன்று பாடப்பெற்றுள்ளது. நிழல் அமைந்த சோலைகளும், நெடிய காடுகளும், இனிய பொழில்களும், வனங்களும் பாடப்பெற்ற பழம்பதிகளாகத் தமிழ் நாட்டில் விளங்கக்காணலாம். திருப்புல்லாணி ஊராட்சி ஒன்றியப்-பகுதியில் இத்தகு ஊர்கள் எவைஎவையுள்ளன என்பதையும், அவைகளுக்கு எப்படிப் பெயர்கள் அமைந்தன என்பதையும் இவ்வியலின்கண் நோக்குவோம்.

இவ்வியலில்,

| | | | |
|---|---|---|---|
| 1. | திருப்புல்லாணி | 7. | மாலங்குடி (மல்லல்) |
| 2. | உத்தரகோசமங்கை | 8. | மாலங்குடி (பனைக்குளம்) |
| 3. | சேதுக்கரை | 9. | புல்லந்தை |
| 4. | அகத்தியர் தீர்த்தம் | 10. | ஆதியட்சபுரம் |
| 5. | கண்ணந்தை | 11. | அருகுடி |
| 6. | கைலாசமங்கலம் | | |

எனும் இப்பதினொன்று ஊர்களுக்குப் பெயர் ஏற்படக் காரணங்களையும், அவ்வூரின் வளமையும், வனப்பும், வசதியும், வாழ்க்கைநெறி முறைகளையும் விளக்கக் காண்போம்.

## 1. திருப்புல்லாணி :

''ஈரொன்பதாம் பாண்டி'' என்றபடி, இப்பாண்டி நாட்டில் 18 திருப்பதிகள் உள்ளன. இப்பதினெட்டில் நான்காவது தேயமாகத் திருப்புல்லாணி விளங்குகிறது.[6] திருப்புல்லாணி, புல்லாரணியம், புல்லங்காடு, தருப்பசயனம் என்ற திருப்பெயர்களால் இப்பழம்பதி குறிக்கப்படுகின்றது. இச்சிறு நகரம் இராமநாதபுரத்திற்குத்தென்கிழக்கே 5½மைல் தொலைவிலும், தென் சமுத்திரக் கரைக்கு வடக்கே 2½மைல் தொலைவிலும் அமைந்துள்ளது. 72 சதுர்யுகங்களுக்கு முன் தோன்றிய தலம் இது என்றும் அதனால் இவ்வூர்ப் பெருமானுக்கு ஆதிசகநாதன் என்ற திருநாமம் ஏற்பட்டதென்றும் வைதீக நெறியாளர் கூறுவர்.

''புல்லங்காடர்'' என்ற பெயர்கொண்ட சங்கப்புலவர் இத்தலத்தினராகக் கருதப்படுதலாலும், தொல்காப்பிய உரையாசிரியர்களில் ஒருவரான பிற்காலத்துத் தெய்வச்சிலையார் என்பவருக்குத் திருப்புல்லாணித் தலத்துப்பெருமாள் திருநாமமிருந்ததாலும், இந்த ஊர் சங்ககாலத்தும் பிற்காலத்தும் பெரும்புகழ் பெற்ற ஊர் எனலாம்.

இராமநாதபுரம் சேதுபதிகளால் ஆட்சிசெய்யப்பட்ட சேதுநாடாகும். இச்சேதுநாடுதான் இராமன் பொன்னடிப்பட்டுச் சிறப்படைந்தது. இத்திருப்புல்லாணி மாபெரும் புனித இடமாகும். இவ்விடத்தை வடமொழியில் ''புல்லாரணியம்'' என்றும், தமிழ்மொழியில் ''புல்லணை'' என்றும் அழைக்கிறார்கள்.

''புல்லாரணியம்'' என்ற வடசொல்லிற்கு மலர்ந்த மலர்கள் அடர்ந்த காடு என்றும், புல்லர் என்ற முனிவர் தவம் செய்த காடு என்றும் இருவகைக் கருத்துக்கள் உண்டு. அவ்வண்ணமே ''திருப்புல்லணை'' என்ற தமிழ்ச்சொல்லிற்கு விளக்கம் கூறினால் திருப்புல்லாகிய தருப்பையைத் தலைஅணையாக இராமன் அணைந்து, இங்குச் சேதுக்கரையில் பள்ளியிருந்த இடம் என்பது

முதல் கருத்தாகும். எங்கும் தருப்பைப்புல் வளர்ந்து ஓங்கும் நாடு என்பது இரண்டாவது கருத்தாகும்.

இக்கல்வெட்டுக்கள் 1903-இல் படியெடுக்கப்பட்டவையாகும். இவ்வூரைப் பற்றிய குறிப்புக்களை மேலும் அறியவேண்டுமானால் சேதுபதிகளின் வாரிசுகள் வழங்கிய தாமிர சாசனங்களும் ஓலைச்சுவடிகளும் பயன்படுகின்றன. இவைகள் இன்று இராமநாதபுரம் அரண்மனையில் அமைந்துள்ள அரும்பொருட் காட்சியில் உள்ளன.

*சில பட்டயங்களில் காணப்படும் செய்திகள் வருமாறு :*

சேதுபதி பட்டயம் எண்-4இல் ''திருப்புல்லணை தெய்வச்சிலைப் பெருமாள் நயினார்க்குத் தர்பசயனம் ராமசாமி ஒரு தோணியும், அஞ்சுகல்லும் முத்துக்குளித்துக் கொள்ளச்சொல்லி'' ரெகுநாத சேதுபதி காத்தத்தேவர் எழுதிக்கொடுத்த பட்டயம்.[7]

பட்டயம் எண்-11இல் ''விசைய ரெகுநாதச் சேதுபதியின் பட்டாபிசேகத்தின்போது திருப்புல்லணை என்ற கிராமத்தைத் தெய்வச்சிலைப் பெருமாள் நயினாருக்குச் சர்வமான்யமாக'' ரெகுநாதச் சேதுபதி புத்திரன் ரகுநாதச் சேதுபதி தந்ததை இது குறிக்கிறது.[8]

இவ்விரு பட்டயங்களை வைத்துப் பார்க்கும்பொழுது சேதுபதிகளின் காலத்தில் (1605-1967) இக்கோவில் எங்ஙனம் போற்றி வளர்க்கப்பட்டுள்ளது என்பது புலனாகுவதுடன் இக்கோவிலின் தொன்மையையும், சிறப்பையும் அறியமுடிகிறது.

இவ்வூரில் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றாகிய 'கைந்நிலை' என்ற நூலைப் பாடிய புல்லங்காடர் என்பவர் பன்னெடுங் காலமாக இவ்வாலயத்திலேயே தங்கி இருந்தார்கள் என்ற ஒருசெய்தி இங்கு உண்டு.[9] இதைப்பற்றிய வேறுசில சான்றுகளை இவ்வாய்வாளர் தேடியும் அம்முயற்சி பயன் அளிக்கவில்லை.

இத்தலத்தைப் பற்றி இலக்கியச் சான்றுகள் சில உள. அவற்றைக் காணலாம்.

''இலங்கு முத்தும் பவளக்கொழுந்து எழில்தாமரைப்
புலங்கள் முற்றும் பொழில் சூழ்ந்து அழகாய புல்லாணிமேல்
கலங்கள் இல்லாப் புகழான் கலியன் நலிமாலை
வலங்கொள் தொண்டர்க்கு இடமாவது பாடுஇல்
வைகுந்தமே''[10]

என்ற பெரியதிருமொழியின் பாடலின், திருப்புல்லாணியின் புகழ் பேசப்படுகிறது.

மேலும்,

ஆவினம் உடையானைப்-பச்சையால்
அடையானை ஆழிப்படையானைத்
தேவர்க்கும் கிடையானைப் புல்லாணித்
தெய்வச்சிலை முகிலைக் கைதொழுதேன்
..........................................................

(திருப்புல்லாணி நொண்டி நாடகம் தருக்கள் 274 முதல் 279 முடிய)

என்ற திருப்புல்லாணி நொண்டி நாடகத்தின் வரிகளும்,

பெற்ற செல்வமும் பெருமையும் திறமையும்
பெருகிய பெருவாழ்வும்
கற்ற கல்வியும் பொறுமையும் ஞானமும்
கருணையும் அறிவாகு
மற்ற மாதவப்பயன்களும் பயங்களும்
மவுனமும் புல்லாணி
உற்றமால் பதம் பணிந்தவர்க்கு அலதுமற்று
ஒருவர்க்கும் கிடைக்காதே

(புல்லை அந்தாதி : 52)

என்ற புல்லை அந்தாதிப்பாடலும்,

சுழன்று இலங்கு வெம்கதிரோன் தேரோடும்போய்
மறைந்தான்
அழன்று கொடிதாகி அம்சுடர்இல்தான் அடுமால்
செழும் தடப்பூம் சோலை சூழ் புல்லாணி கைதொழுதேன்
இழந்திருந்தேன் என்தன் எழில் நிறமும் சங்குமே

என்ற 4 ஆம் திருமொழிப்பாடலும் திருப்புல்லாணியில் இருப்பையும் சிறப்பையும் விளங்க வைக்கின்ற இடங்களாகும். இத்தலத்துச் சிறப்பைக் குறிக்கும் வண்ணம் சங்கநூல் பாடல் ஒன்றுள்ளது.

"வெள்வேற் கவுரியிர் தொன்முதுகோடி
முழங்கிடும் பெளவம் இரங்கும் முன்னுறை
வெல்போர் இராமன் அருமறைக்கவித்த
பல்வீழ் ஆலம்போல
ஒலியவிந்தன்றிவ் வழுங்கலூரே". (அகம் : 70)

எனும் அகப்பாடலுக்கு உரையாசிரியர் வேங்கடசாமி நாட்டார் விளக்கமும் உரையும் உளது. இதனை அடிக்குறிப்புப் பகுதியில் காணலாம். (எண் : 9)

தலவிருட்சம் :

ஒவ்வொரு கோவிலுக்கும் தலவிருட்சம் ஒன்று உண்டு. தலபுராணங்களில் இதைப்பற்றிய குறிப்புக்கள் வருவது வழக்கம். இவ்வண்ணமே இத்தலத்திலுள்ள அரசமரம் (அசுவத்த விருட்சம்) பற்றிய பழங்காலக் கதையும், அதனுடையதாய் இன்று கர்ணப்பட்டு வரும் இயல்பும் வியக்கத்தக்கன. இம்மரத்தில் இலைகள், மற்றைய அரசமரங்களின் இலைகளைப்போல் அல்லாமற் காம்பு நீண்டும், இலை சிறுத்தும், அதே இலையின் நுனிப்பகுதி நீண்டும் இருக்கிறது.

இந்த அரசமரம் பெருமாள் சன்னதியில் மேற்கில் வெளிச்சுற்றில் நாச்சியார் சன்னிதிக்குப் பின்பக்கம் மிக மிடுக்குடன் தோற்றமளிக்கிறது. 'மருமலர் பிறந்த கோதை மருவி மகிழும் புல்லாணி வளர் அரசு' என்ற அரசமரப் பாட்டிருப்பது, இந்த மரத்தை, இக்கோவில் தாயார் மருவி மகிழ்ந்து வருகிறாள் என்ற சிறப்பையும் அறியலாம். இந்த மரம் பல யுகங்கள் கண்ட பெரியமரம் என்பர். பொதுவாகவே அரசமரத்தை இந்துக்களும் பௌத்தர்களும் தெய்வத்தன்மை பொருந்திய மரமாகப் போற்றுவார்கள். 'அச்வத்தம்' என்ற சொல்லிற்கு ( அ + ச்வ + ஸ்தம்) இப்புனித மரத்தை வணங்கியவர்களில் பாவங்கள் மறுநாள்கூட இருப்பதில்லை எனப் பொருளாகும். அல்லது இம்மரங்கள்

ஆற்றங்கரைகளில் வளர்வதால், இவைகளின் நிலை நாளைக்கும் இருக்கும் என்று கூறமுடியாத வகையில் உள்ளது எனவும் பொருளுண்டு. கபம், பித்தம் போன்ற நோய்களையும் பெண்களுக்கு ஏற்படும் தோலைப்பற்றிய கொடிய நோய்களையும் போக்கக்கூடிய, குளிர்ச்சி தரும் மரம் அரசமரமாகும் எனப் "பாவப்பிரகாசம்' என்னும் நூல் கூறுகிறது.

இங்கு, இப்பொழுதுள்ள அரசமரத்திற்குச் சற்று (வடக்கே) தூரத்தில் நாகப்பாம்புச் சிலைகளுடன் கூடிய பெரியமேடை போன்ற இடம் ஒன்று இருக்கிறது. 400 ஆண்டுகளுக்கு முன்புதான் மக்களின் கண்களுக்கு இவ்வரசமரம் தென்பட்டதாம். அதன்பின் இவ்வரசமரம் முன்பு இருந்த இடமிருந்து தானாகவே கிளைகளைத் தரையில் தாழ்த்திக்கொண்டு, மண்ணில் புதைந்து, புதிய மரங்களாக ஆகிப் பழைய இடத்தை விட்டு, ஆலமரங்கள் போல் நகர்ந்து வருகின்றதாம்.

அத்தகைய தலமரங்களின் தன்மையைக் கேட்கக்கேட்க வியப்பாகவே இருக்கும். இதே இராமநாதபுரம் தேவத்தானத்தைச் சேர்ந்ததும், பக்கத்தில் உள்ளதுமான "பார்மேல் சிவபுரம்போலக் கொண்டாடும் உத்தரகோச மங்கை ஊர்'' என்று சிறப்பித்துப் போற்றப்படுகிறது.

ஆதி சிதம்பரமான உத்தரகோச மங்கை என்னும் ஊரில் சகசுவரலிங்கப் பெருமாள் கோவிலுள்ள தலவிருட்சமான 'இலந்தை'யைப் பற்றியும், திருவரங்கப்பெரிய கோவில் எனப்போற்றப்படும் திருவரங்கத்தில் சந்திரபுசுகரிணிக் கரையில் உள்ள 'புன்னை' மரத்தைப் பற்றியும் கூறப்படும் சிறப்பியல்புகள் சிந்தனைக்குரியன.

### தருப்பைப்புல் :

புராணங்களில் துளசி, தருப்பை, வில்வம் முதலிய தாவரங்கள் வளர்ந்திருக்கும் இடங்களைப் பற்றியும் சிறப்பாக உரைக்கப்பட்டுள்ளன. ஆகவே ஈண்டுத் திருப்புல்லைப் பற்றிய சிறப்பைச் சுருக்கமாகக் குறிப்பிடுவாம். திருப்புல் என்ற சொல்லும், 'தூப்புல்' என்ற சொல்லும், நாணல் இனத்தைச் சேர்ந்த

ஒருவகைப்புல் அதாவது தருப்பையைக் குறிக்கும் சொற்களாகும். தூப்புல் என்பதற்குத் தூயபுல் எனப்பொருள். இந்தப் பதியிலுள்ள அத்தகைய சிறந்த புல்லிற்கு, இயல்பாக ஏற்பட்ட ஏற்றத்தைவிட இராமன் திருமேனி பட்டதால் பெற்ற ஏற்றம் பெரிது.

இராமன் சீதையைத் தேடிக்கொண்டு வந்தபொழுது, இங்கே மூன்றுநாட்கள் புல்லிட்ட படுக்கையில் பள்ளிகொண்டு, விபீடணன் சொல்லுக்கிணங்க, சமுத்திர அரசனிடம் வழிவிடச் சரணாகதி பண்ணினார். இன்னோரன்ன காரணங்களால் தாம் இவ்விடத்திற்குத் திருப்புல்லணை என்ற பெயர் ஏற்பட்டிருக்க இடமுண்டு. மேலும் இதனை உறுதிப்படுத்த வேண்டுமானால் வால்மீகியும்,

"தத:ஸாகர வேலாயாம், தர்ப்பா
ஸ்நாஸ் தீர்ய ராகவ:!
அஞ்சலிம், ப்ராய்முக:க்ருத்வா
ப்ரதிசிச்யே மஹோததே:"[11]

என்று கூறியபடியால் இக்காலத்தில் பெருமாள் பள்ளி-கொண்டுள்ளார் என்ற செய்தியும் பெறப்படுகிறது. எனவே இவ்விடத்திலுள்ள இப்பெருமானுக்குத் 'தருப்ப சயனராமன்' என்ற திருநாமம் ஏற்பட்டது. இதனால் இவ்விடம் 'தருப்பசயனம்' என்று வழங்கலாயிற்று.

இவ்வூருக்குப் புல்லங்காடு என்ற பெயர் வருவதற்கு ஒரு புராணக்கதையிலிருந்து சான்று தரலாம். முன்னொரு காலத்தில் 'தேவலர்' என்ற மாபெரும் முனிவர் தமது குடிசையில் தவம் செய்து கொண்டிருந்தார். அந்தக் குடிலுக்கு அருகில் பூக்கள் நிறைந்ததோர் பொய்கை இருந்தது. அப்பொய்கையில் மிகவும் அழகு பொருந்திய ஏழுகன்னிகள் அங்குள்ள பூஞ்சோலையில் ஆடிப்பாடி அகமகிழ்ந்து, கடைசியில் பொய்கையில் புகுந்து, நீராட்டம் புரிந்தனர். அவர்கள் மனம்போனபடி, ஆடை ஆபரணங்களைக் குளக்கரையில் வைத்துவிட்டு நீரில் விளையாடிக் கொண்டிருந்தனர். அந்நேரம் தேவலர் அக்குளத்துக்கு நீராட வந்தார். அம்முனிவரையும் அப்பெண்கள் மதியாது பிறந்த மேனியுடன் குளித்து விளையாடிக்கொண்டிருந்தனர்; முனிவர் சினம் கொண்டார். உடனே அவர்களை வெட்கமற்ற விஞ்சை

மகளிர்களாக மாறும்படி சபித்தார். தவற்றை உணர்ந்த அப்பெண்கள் முனிவரிடம் சரண்புகுந்து மன்னிப்பு வேண்டினர்.

"முனிவினும் நல்குவர் மூதறிஞர்" என்ற பழமொழிக்கிணங்க சினம் தணிந்த தேவலர் அப்பெண்களை நோக்கிப், 'பெண்களே! புல்லாரணியம் என்ற திருப்புல்லாணித் தலத்தில் மாமுனிவரும், சிறந்த திருமால் அடியாருமான புல்லர் என்ற முனிவர் தவம் செய்து வருகிறார். அவரைச் சரண் அடைந்தால் நான் உங்களுக்கிட்ட சாபம் நீங்கும்' என்றார். உடனே அந்த ஏழு சன்னியர்களும் பிரமரிக்ஷியான புல்லர் அமர்ந்திருந்த ஆசிரமத்திற்குச் சென்று, தங்களுக்கு ஏற்பட்ட நிகழ்வுகளை விண்ணப்பித்து, தங்களுக்கு ஏற்பட்ட சாபத்தை நீக்கும்படி வேண்டிக்கொண்டனர். அப்பெண்களில் வருத்தம் தோய்ந்த மொழிகளைக்கேட்ட புல்லமுனிவர் மனம் இரங்கினார். மேலும் "பெண்களே! இராமன் சில நாட்கள் கடந்து இங்கு எழுந்தருளப் போகிறார். அவருடைய திருக்கண்பட்டு உங்களது சாபம் நீங்கும். அவர் வரும்வரை இந்தத் திருப்புல்லாணியில் இருந்து கொண்டு இங்குக் கோவில் கொண்டிருக்கும் பரந்தாமன் அருள்மிகு ஆதி செகநாதனையும், பதுமாசனித்தாயாரையும் (வைகாசை) முறைப்படி வழிபட்டு வாருங்கள்" என்றும் அறிவுறுத்தினார்.

நாட்கள் சில சென்றன. புல்லமுனிவரும் தாம் பரமபதம் அடையவேண்டிய நாள் நெருங்கிவிட்டதை உணர்ந்தார். உடனே அவர் ஆசிரமத்தை விட்டுப் புறப்பட்டு, ஆதிசகநாதன் திருக்கோவிலுக்குச் சென்றார். இறைவனை வணங்கிப் பிறகு பிராணுயாமத்தால் வாயுவை உள்ளடக்கி அந்த வாயுவைப் பிறகு, சுகம்னை' என்ற நாடியின் சிறுதுவாரத்தின் வழியாக உயரக்கிளம்பி உச்சந்தலையிலுள்ள 'பிர்மரந்திரம் என்ற துவாரத்தைத் திறக்கவைத்துக் கடமையை முடித்தவராய், அருச்சிராதி மார்க்கமாய் யாவரும் காணப் பரமபதம் அடைந்தார். அவர்களுடைய சீடர்களும் மிக வருந்திப் பிறகு புல்லர் இட்ட ஆணைப்படிக்குத் "திவ்வியசாபர்" என்ற திருநாமம் பூண்ட அருள்மிகு ஆதிசகநாதனை வைகாசை ஆகம முறைப்படி பூசித்துக்கொண்டு அருள்மிகு சக்கரவர்த்தித்திருமகன் எழுந்தருளும் நந்நாளை எதிர்பார்த்திருந்தனர்.

இப்புராணக் கதையில் காணலாகும் செய்திகளை வைத்து எண்ணுங்கால் புல்லர் என்ற முனிவர் தவம் செய்த காடு என்ற

காரணத்தால் இவ்வூர் புல்லங்காடு என்று வழங்கியிருக்கலாம் எனக்கருத இடமுண்டு.[12]

**புல்லின் மகிமை :**

''திருப்புல்'' என்ற சொல்லும், ''தூப்புல்'' என்ற சொல்லும், நாணல் இனத்தைச் சேர்ந்த ஒருவகைப் புல்லாகிய தருப்பையைக் குறிக்கும் சொற்களாகும்.[13] தூப்புல் என்பதற்குத் தூயபுல் (இதைப்பற்றிய விரிவான விளக்கத்தைப் பின்னிணைப்பில் காணலாம்) எனப்பொருள்படும். இப்புல்லினை ''அக்கினிகர்பம்'' என்று வடமொழியில் கூறுவர். இப்புல்லில் காரமும் புளிப்பும் இருப்பதால், செப்பு முதலிய உலோகத்தாலான விக்கிரகங்களை, தேய்க்கப் பயன்படுத்துகிறார்கள். அதனால் உலோகச் சிலைகள் ஒளிமங்காமல் இருக்கும் என்பர். இன்றும் ஊரின் கிழக்குப் பகுதியிலுள்ள புல்லாரணியம்மன் கோவில் அருகில் தருப்பைப்புல் அடர்ந்த இடம் ஒன்று உள்ளது. இப்புல் பட்ட நீரைத்தெளித்த இடத்தில் தொத்துநோய் பரவாது என்பதையும், நீர்க்கரையில் உள்ள தருப்பைப்புல்லில் பட்டு வீசும் காற்றினால் உடலின் நலம் வளரும் என்பதையும் இன்னபிற செய்திகளையும் அபிதான சிந்தாமணியில் (பக்கம் 786-787 இல்) காணலாம்.

**தீர்த்தம் தரும் தீர்ப்பு :**

கோவிலின் முன்பு ''சக்கரதீர்த்தம்'' என்றும், முந்நீர், புனிதநீர் என்றும் வழங்கப்பெறும் வியத்தகு குளம் ஒன்றுள்ளது. இக்குளத்தின் மண்ணிலும், நீரிலும், இரசாயனப்பொருள் கலந்திருப்பதாகவும், இதில் நீராடுவதால் சில தீராத நோய்கள் விரைவில் குணமடைவதாகவும், இக்குளத்தின் மண்ணை ஆராய்ச்சி செய்வதனால், பெரும் நன்மை ஏற்படலாம் என்று இங்குள்ளோர் கூறுகின்றனர். மற்றும் இக்குளத்தின் நீரில் அவ்வப்பொழுது காணும் சில நிறமாறுபாடுகளால் எதிர்காலத்தில் தேசத்தின் அளவில் நடக்க இருக்கும் நிகழ்ச்சிகளையும் அறியலாம், என்று அவ்வூர் பெரியோர்கள் நம்புகிறார்கள். இக்கோவில் பற்றிய செய்திகளை, இங்குள்ள கல்வெட்டுக்களில் காணலாம். இங்குள்ள அருள்மிகு செகநாதர் கோவிலில் இரண்டாவது கோபுரத்தின் உள்ளே சென்றதும், இடதுபக்கத்தில் இரு கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன.[14] இவற்றைப் பின்னிணைப்பில் காணலாம்.

மேலும் இத்திருப்புல்லாணிக் கோவிலுக்குப் பல சேதுபதிகளின் இறையிலி நிலங்கள் விடுத்த செய்திகளைத் "திருப்புல்லாணி என்னும் புல்லாரண்ய மான்மியம்"[15] என்ற நூலில் உள்ள அனுபந்தக் குறிப்பில் காணலாம்.

## 2. உத்தரகோசமங்கை :

"தட்சணகைலாயம்" எனப்பெயர் பெற்ற இத்தலத்தில் மரகத நடராசர் மக்களுக்குத் தன்னருளை வாரிவழங்கிக் கொண்டிருப்பதாக இங்கு வாழும் மக்கள் நம்புகிறார்கள். மணிவாசகப்பெருமானுடன் நெருங்கிய தொடர்புகொண்ட இத்தலம், திருவாசகத்தில் 38 இடங்களில் பாராட்டப் பெற்றுள்ளது.[16] உத்தரகோச மங்கை மிகப்பழமையான சிவத்தவம் என்பது "மண்முந்தியோ மங்கைமுந்தியோ" என்று தொன்றுதொட்டு வழங்கிவரும் பழஞ்சொல்லிலிருந்து அறியக்கிடக்கிறது. இவ்வூர் முற்காலத்தில் பச்சைப்பசேலென்ற பழங்களையும் நறுமணப் பூஞ்சோலைகளையும், வானளாவிய மரங்களையும், பசுமடங்களையும் வானுயர்ந்த மாடவரிசைகளையும், பல அறநிலையங்களையும் கொண்டு திகழ்ந்திருந்தது. இவ்வூர் இராமநாதபுரத்திலிருந்து தென்மேற்கில் பத்துக்கல் தொலைவில் உள்ளது. இதனை உத்தரகோச மங்கை, ஆதிசிதம்பரம், வெதிரிகாரண்யம் என்று பலவகையில் அழைக்கின்றார்கள். இதனைப் பற்றிக் கீழ்க்காண்போம்.

### புராணத்தில் பெயர்க்காரணம் :

அருள்மிகு சொக்கலிங்கப் பெருமான் அம்பிகையைப் பரதவர் மகளாகச் சபித்துப் பின் சாபவிமோசனம் செய்து, மணந்து இத்தலத்திலேயே தங்கி, வேதப் பொருளைப் பிராட்டிக்கு உபதேசம் செய்து, அங்கயற்கண்ணி நங்கையோடு மதுரை சார்ந்ததாகப் பாடல்களில் சான்றுகள் உள. குறிப்பாகத் திருவிளையாடற் புராணத்தில் வலைவீசிய படலம் 62, 63, 64ஆவது பாடல்கள் சான்று தருகின்றன (இவற்றைப் பின்னிணைப்பில் காணலாம்).

உத்திரம் என்பது — உபதேசம் (உப-இரண்டு ; தேசம்-உலகம்)
கோசம் என்பது — இரகசியம்
மங்கை என்பது — மங்களநாயகி

உபதேசமாக, பிரணவ இரகசியப் பொருளை உத்தரகோசமங்கை என்ற மங்களேசுவரிக்கு இறையனார் அருளிச் செய்த இடம் எனப்பொருள் விரிந்து இவ்வூர்க்குப் பெயராய் அமைந்துள்ளது.[17]

இத்தலம் பாண்டிய நாட்டுப்பழம் பெருந்தலைங்களில் ஒன்று இராவணன் காலத்திற்கு முன்னரே இக்கோவில் இருந்து வருவதாக வரலாறு பேசுகிறது.[18] இராவணன் இல்லக்கிழத்தி நல்லறப்பெண்டு-தவமகள் வண்டோதரியின் தவச்செயல் புரிந்த செய்தியும் இவ்வூர்த் தலபுராணத்தின் எட்டாவது இயலில் பேசப்படுகிறது. மேலும் வண்டோதரியின் பெயர் திருவாசகத்தில் காணப்படுகிறது.

''ஆர்கலிசூழ் தென்னிலங்கை அழகமர் வண்டோதரிக்குப்
பேரருள் இன்பம் அளித்த பெருந்துறைமேயே பிரானை[19]
(குயிற்பத்து-ஆத்துமவிரக்கம்-பாடல் 2: வரி 2-3)

என்பது திருவாசகம். இதுவும் அன்றி உத்தரகோசமங்கை கோவிலில், மங்களநாதன் அகநாழிகைத் திரு மதிலில் பொறிக்கப்பெற்றிருக்கும் கல்வெட்டுக்களிலும், வண்டோதரியின் பெயர் காணப்படுகிறது. இதனால் இவ்வூரின் தொன்மை புலனாகும்.

### இலக்கியத்தில் பெயர்க்காரணம் :

இலவந்திகைப்பள்ளி என்ற சொல் சங்க இலக்கியமாகிய புறநானூற்றில் இடம் பெற்றுள்ளது. ''இலவந்திகை'' எனும் சொல் மருவி ''இலந்தை'' என்றாயிற்று என்பர்.[20] இப்பழம்பெருந் நாட்டில் எந்த ஒரு கோணத்திலாவது பிறிதொரு தலத்திற்கு இப்பெயர் அமைந்திருப்பதாய்ப் புலப்படவில்லை. மேலும் இதுபோல் இலந்தையைத் தலவிருட்சமாக உடைய ஒரு பெருந்தலம் இருப்பதாகவும் தெரியவில்லை. இலவந்திகை என்பது வாவிகள் சூழ்ந்த வசந்த சோலைகள் என்பதை மணிமேகலை (3, 45)யும் சிலப்பதிகாரமு (10, 31)ம் எடுத்துரைப்பதைக் காணலாம். எனவே சங்ககால இலக்கியங்கள் கூறும் இலவந்திகைப்பள்ளி என்பது இவ்வுத்தரகோச மங்கையைக் குறிக்கும் எனக்கருத இடமுண்டு. கீழ்வரும் சான்றுகள் இக்கருத்தை வன்மை உடையதாக்குகிறது. இலவந்திகைப்பள்ளி பாண்டிய மன்னர்களது அரசிருக்கையாக இருந்து வந்திருக்கிறது. இதற்குச் சான்றாக எண் 55, 56, 57, 196, 198-ஆம் புறப்பாடல்களில் இலவந்திகைப்பள்ளி[21] துஞ்சிய

நன்மாறன் பேசப்படுவதைக் காணலாம். இவன் உத்தரகோச மங்கையில் இருக்கும்போது வெள்ளியம்பலத்துத்துஞ்சிய பெருவழுதி என்ற பாண்டியமன்னன் வெள்ளியம்பலமாம் மதுரையிலிருந்து அரசாண்டமை தெரிகிறது. இலவந்திகைப்பள்ளித் துஞ்சிய நன்மாறனை நக்கீரர், மருதனிளநாகனர், காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார் முதலிய சங்கப்புலவர்கள் பாடியுள்ளார்கள்.

இக்கருத்தை அரண்செய்யும் வகையில் மங்களநாதனது அகநாழிகைச் சுவரில் வண்டோதரியின் பெயர் பொறிக்கப்பட்டிருத்தல் போன்றே இலவந்திகைப்பள்ளித்துஞ்சிய நன்மாறன் பெயரும் எழுதப்பட்டுள்ளது; இதை இன்றும் காணலாம். இவ்வாறு சுவாமி சந்நிதானத் திருமதில்களில் செதுக்கப்பெற்றிருக்கும் கல்வெட்டுக்களைக் கல்வெட்டாய்வாளர் நோக்கினால் இத்தலத் தொடர்பாக மறைந்து கிடக்கும் அரிய பல செய்திகள் வெளிப்பட வாய்ப்புண்டு. இத்தலத்திற்கு உத்தரகோச மங்கையென்று பெயர் ஏற்பட்ட காரணத்தை, இத்தலத்திற்குரிய தலபுராணத்தின் இறுதியில் உள்ள வலைவீசிய படலம் கூறுகிறது.[22]

இராமநாதபுரம் வட்டாரத்திற்குச் சிரிம்பிளி நாடு என்று ஆதிப்பெயர் இருந்திருப்பதாகத் தெரியவருகிறது. இதன் நான்கு எல்லைகள் யாவை என அறிய முடியவில்லை. ஆகவே, சிரிம்பிளி நாடு என்ற பெயர்தான், பின்னர்ச் செம்பிநாடு என்று மரூஉப் பெயராக மருவி வந்திருக்கலாம் என்று அனுமானிக்க இடந்தருகிறது. ஆனால் அதன் ஆதிப்பெயர்க்காரணம் - யாதெனச் சற்றும் புலப்படவில்லை. அதனால்தான் செம்பிநாட்டு மக்கள் செம்பிநாடர் என்று அழைக்கப்பெற்றார்கள். இந்நாட்டில் ஆட்சி செலுத்தியவர்களில் சேதுபதி பரம்பரையினரும் இடம்பெறுகின்றனர். இவர்கள் காலத்தில் உத்தரகோச மங்கைக் கோவிலுக்கும், ஊருக்கும் செய்திருக்கும் நலங்கள் பலவாகும். உத்தரகோச மங்கை கோவிலைச் சிறப்பிக்கும் ஏழுநிலை இராசகோபுரம், சுவாமி சன்னதி முன் ஐந்துநிலைக் கோபுரம், அம்மன் சன்னதி முன் மொட்டைக்கோபுரம், அக்கினித் தீர்த்தம். 'பதரி' என்ற பழம்பெரும் இலந்தை மரம் உள்ளடக்கிய சகத்திரலிங்க கோவில் எனப்பல உண்டு. பாசுகரசேதுபதி அவர்களாலும், அவர்களுடைய முதன்மைப் பத்தினியார் இராணிமங்களேஸ்வரி

நாச்சியார் அவர்களாலும் இக்கோவில்களுக்குக் காணிக்கையாகப், பொன் அணிகளும் பல வாய்ப்பு வசதிகளும் வழங்கப்பட்டன.[23] இதற்குச் சான்றாக, ஒன்றினைக் கூறலாம். சேதுபதிகளின் செப்பேட்டுச் செய்திகளில், இரகுநாதத் திருமலைச் சேதுபதி காத்தத்தேவர் மகன் இரகுநாதத் திருமலைச் சேதுபதி காத்தத்-தேவர் மகன் இரகுநாதத் திருமலை சேதுபதி காத்தத்தேவர் திருவுத்தரகோச மங்கையில் எழுந்தருளியிருக்கும் மங்கைநாத சுவாமிக்குத் திருவிளையாட்டாகத் திருவுத்தரகோச மங்கை முதலான கிராமங்களை இறையிலியாகக் கொடுத்ததைப் பற்றிய குறிப்பு வருகிறது.[24]

இதைப்போலவே, பிறிதொரு பட்டயத்தில்,[25] முத்து இரகுநாதச் சேதுபதி காத்தத்தேவர் அவர்கள் புத்திரன் முத்து-குமார விசயரெகுநாதச் சேதுபதி காத்ததேவரவர்கள் மாதர் வருக்கத்துக்கும், பிதாவருக்கத்திற்கும் புண்ணியமாகத் திருவுத்தர கோச மங்கை நயினார் மங்கைநாத சுவாமி சன்னதியில் சகத்திரலிங்க சுவாமிக்கு அபிசேக நெய் வேத்தியம் செய்யவும், திருமாலை சாத்தவும், திருவிக்கு ஏற்றவும், பாலையேந்தல் என்னும் கிராமத்தைத் தானம் கொடுத்ததைப் பற்றிய செய்திகள் கிடைக்கின்றன.

## தலவிருட்சம் :

இப்பகுதியின் தலவிருட்சம் இலந்தையாகும். இதற்கு வடமொழில் பதிரி என்ற பெயருண்டு. பழங்காலத்தில் இலந்தைக், காடாக இருந்தபடியால் இவ்வூர் ''வெதிரிகாரணியம்'' என்ற பெயரைப் பெற்றது. இதற்கு இலக்காக, ஆங்குள்ள ஆயிரம் லிங்கமூர்த்தங்களுள்ள (சகத்திரலிங்க) சன்னிதியில், பல ஆண்டு-களாய் வளர்ந்து வரும் பழம்பொருள் இலந்தை இன்றும் நின்று நிலைப்பதைக் காணலாம். இவ்விலந்தை மரம் நெடுங்காலமாய் இருப்பதாக வாழையடி வாழையாய், வழங்குகிற செய்தி இங்குண்டு. இப்பதி 'வெதிரிகாரணியம்' என்ற பெயரோடு பன்னிரு பெயர்-களைக் கொண்டதாய்த் திகழ்கிறது.[26] அவை முறையே, மங்களபுரி, பிரமபுரம், சாத்துவீகத்தானம், வியாக்கிரபுரம், ஆதி-சிதம்பரம், வைதிரிகாரணியம், பார்ப்பதிபுரம், சித்தகேந்திரம், தெக்கணகாசி, பிரதிகோசபுரம், சதுர்வேதபுரி, கல்யாணபுரம் என்பனவாம்.

## இலக்கியத்தில் உத்தரகோசமங்கை

அருள்மிகு சொக்கலிங்கப் பெருமாள் அம்பிகையைப் பரதவர் மகளாகச் சபித்துப் பின் சாபவிலக்கு அளித்து அவளை மணந்து, இத்தலத்திலேயே தங்கி வேதப் பொருளைப் பிராட்டிக்கு உபதேசம் செய்தும், அத்தலத்திலிருந்த சிவனடியார்கள் சிவயோகிகள் அறுபதினாயிரவருக்கு ஞானோபதேசம் .செய்து வீடுதங்கியும், அங்கயற்கண்ணி நங்கையோடு மதுரை சேர்ந்ததாகப் புராணம் கூறுவதைத் திருவிளையாடற்புராணம் வலைவீசின படலப்பாடல் ஒன்று,

"பெண்ணினை வதுவைக் கீந்த பெருந்துறைச்சேர்ப்பற்கன்று
தண்ணளி சுரந்து நல்கித் தருமமால்விடைமேற்றோன்றி
விண்ணிடை நின்றாள் சென்றாள் வேத்திரப்படையானோடும்
உண்ணிறையன்பரோடு முத்தரகோச மங்கை"

(பாடல் ; 62)

சான்று பகர்கிறது.

மேலும், இத்தலத்தைப்பற்றி,

"அணி பொழில் உத்தரகோசமங்கைக்கரசே" என்றும்,
"வெறிவாய் அதுகால் உழுகின்ற பூம்பொழில் உத்தரகோச மங்கைச்கரசே" எனவும் திருவாசகத்தில்
"தெங்குருவு சோலைத்திருவுத்தரகோசமங்கை"யாகவும்,
"பத்தரெல்லாம் பார்மேல் சிவபுரம்போல் கொண்டாடும் உத்தரகோசமங்கையூர்" எனவும்

மணிவாசகப்பெருமாள் பாவார நாவாரப் பாடுகின்றார். எனவே இப்பிறவிப் பெரும் ஞானி இங்கு வாழ்ந்த காலத்து அதாவது கி.பி. 3ஆம் நூற்றாண்டில் இவ்வூர் அத்தகைய வளமுடையதாய்த் திகழ்ந்திருக்கின்றது எனலாம்.

## 3. சேதுக்கரை :

திருப்புல்லாணியிலிருந்து 2½மைல் தூரத்தில் சேதுக்கரை என்ற புண்ணியத்தலம் உள்ளது. இத்தலத்தையும் "ஆதிசேது" என அழைப்பதுண்டு. இத்தலத்திற்கு "ரத்தினாகரம்" எனவும்

பெயர் உண்டு. சேது என்ற வடமொழிச் சொல்லிற்குத் தமிழில் ''அணை'' என்று பொருளானதால், இத்தலத்தை வைணவர்கள் ''திரு அணை'' என்று அழைப்பார்கள். தற்காலத்தில் இந்தியாவின் எல்லைகளைக் கூறும்பொழுது வடக்கே இமயமலையையும், தெற்கே குமரிமுனையையும் எல்லைகளாகச் சொல்வதுண்டானாலும், பழங்கால நூல்களில் ''ஆசேது ஹைமாசலம்'' என்றும், ''ஹிமவந்தனஸேது மத்யபாஜாம்'' என்றும் உபநிசத்துக்கள் கூறியிருப்பதால், முற்காலத்தில் சேதுவை இந்தியாவின் தெற்கு எல்லையாகக் கூறினார்கள் என்பதை அறியலாம்.

திருமாலையும் உபநிசத்துக்கள் ''அம்ருதஸ்யைஷஸேது'' என்றும் ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாமம்'' ஔஷதம் ஜகதஸேது'' என்றும் இந்தச் சேதுவின் பெருமையைப் பெரியோர்கள் மேலே கூறப்பட்ட பனுவல்களுடன் ஒருமைப்படுத்தி மிகவும் சிறப்பித்துக் கூறுவார்கள். கண்ணன் திருவடித் தொடர்புபெற்றுப் பிருந்தாவனம் என்ற நெறிஞ்சிக்காடு புனிதம் பெற்றதென்றால் இராமன் திருமேனித் தொடர்பு பெற்றதால் இத்தலம் அதனினும் அதிகம் பெருமை பெற்றது என்பார்கள்.

இராமனைப் பற்றிய கதை எந்த நூலில் எம்மொழியில் எழுதப்பட்டிருப்பினும் அங்குச் சேதுவின் பெருமை விடாமல் பரக்கப் பேசப்படுகிறது. இந்த இடத்தில்தான் வீடணனின் சரணாகதியை ஏற்றுக்கொண்டு

'ஸக்ருதேவப் ரபன்றாய தவாஸ்மீதிசயாதே! அபயம் ஸர்வ
பூதேப்யோ ததாமி ஏதத்வ்ரதம்மம! l''

(இராமனே நான் உன்னைத் தஞ்சம் புகுந்தேன் என ஒருக்கால் கூறியவர் யாராயினும் அவர்கள் யாவருக்கும் அபயம் அளிப்பது என் கொள்கை) என்று முன்பு சக்கரவர்த்தித் திருமகன் அருள் வாக்கிட்டது. அதனால் இத்தலத்தைச் சரணாகதி இரகசியம் விளைந்த இடம் என்றும் கூறுவார்கள்.[27]

இந்தச் சேதுக்கரைக்குப் பக்கத்தில் கிழக்கே சற்றுத்தள்ளி இராமர் கட்டிய அணை என்று கூறப்படும் நீண்டதொரு கல் அரண் தென்படும். [இராகவன் இலங்கையிலிருந்து அயோத்திக்குத் திரும்புகையில், வீடணனின் வேண்டுகோளுக்கிணங்கி, மனிதர்கள்

நடமாடாத வகையில் இவ்வணையின் வரிசையை இடையிடையே பத்துப்பத்துப் பாகங்களாகக் கலைந்து விட்டதால், இன்று நீருக்கு மேல் இவ்வணை விட்டுவிட்டுத் தெரியும் வகையில் நீண்டு இருக்கும்.

இராமாவதாரத்தின் பொழுது நளன் என்ற பெயருடன் குரங்குச் சிற்பியாகத் தோன்றிய விசுவகருமானின் பிள்ளையே இராமனின் ஆணைகொண்டு சமுத்திரராசன் இசைய, இந்த அணையைக் கட்டினபடியால் இதற்கு ''நளசேது'' என்று பெயர் ஏற்பட்டது. இராமனே இந்த அணையின் பெருமையை இலங்கையிலிருந்து மீண்டும் வருகையில் சீதைக்கு எடுத்துக் கூறியிருக்கிறார்.[28] இதைப்பற்றிய பிற புராண, காப்பியச் சான்றுகளைப் பின்னிணைப்பில் காணலாம்.[29]

இங்குள்ள கடற்கரையில் இராம தூதனான அனுமான் கம்பர் வருணித்த வகையிலேயே, தென்திசை நோக்கிக் குவிந்த திருக்கைகளுடனும் இராமதியானத்தில் ஆழ்ந்திருக்கும் காட்சியுடனும் ஓர் அழகிய சிற்றடக்கமான திருக்கோவிலே எழுந்தருளி இருக்கிறார். இந்த அனுமான் மக்களால் கண்கண்ட தெய்வமாகக் கருதப்படுகிறார். ஒவ்வொரு புதன், சனிக்கிழமைகளிலும் ஏராளமான அடியார்கள் இவரை நீராட்டி, வடமாலை முதலிய சாற்றி அணிசெய்வித்துப் போற்றி வருகிறார்கள். இக்கோவிலுக்கு அண்மையில் ஒரு பெரிய சத்திரம் உள்ளது. இங்குள்ள சத்திரக்கிணற்றில் முதலில் நீராடி, மடி உடுத்திக்கொண்ட பிறகு தான் கடலில் நீராட்டம் செய்வது வழக்கமாகுமாம்.

இச்சேதுக்கரை ஊராட்சியிலுள்ள உட்கடைக் கிராமந்தான் ''கீழப்புதுக்குடி''. இவ்வூர் சேதுவின் கிழக்குப்பகுதியில் புதியதாகக் குடியேறிய பகுதியானதால் இப்பெயர் பெற்றது. இதேபோல ஒவ்வோர் ஊரிலும் கிழக்கிலும், மேற்கிலும், புதியதாகவும் ஊர்கள் தோன்றினால் அவைகள் கீழ, மேல, புது என்ற அடைமொழிகளைப் பெறுகின்றன.

## 4. அகத்தியர் தீர்த்தம்:

இவ்வூர் சேதுக்கரை ஊராட்சியின்கீழ் இருக்கும் உட்கடை கிராமங்களில் ஒன்றாகும். ஆதிமுதல் இவ்வூருக்கு இப்பெயரே வழங்கிவந்திருக்கிறது. ஆனால் இடையில் மக்கள் இவ்விடத்தைச்

''சின்னக்கோயில்'' என்று அழைத்திருக்கிறார்கள். இங்குள்ள அகத்தியர் கோவிலின் பின்புறத்தில் ஒரு குளமுள்ளது. அதுவே 'அகத்தியர் தீர்த்தம்' என்று அழைக்கப்படுகிறது. ஆதிசேதுவின் கடற்கரையிலிருந்து புறப்பட்டுத் திருப்புல்லாணிக்குத் திரும்பும் வழியில் இடையில் சுமார் 3 பர்லாங்கு வடக்கில் அகத்தியர் தீர்த்தம் (சின்னக்கோயில்) என்றதோரிடம் உள்ளது. இங்கு அருள்மிகு. சீனிவாசகப்பெருமாள் அர்த்தமண்டபம், மகாமண்டபம், வெளிமண்டபம் இவைகளுடன் கூடியதாய்ச் சிற்பக்கலை திகழ விளங்கும் ஒரு சிறுகோவிலில் எழுந்தருளியுள்ளார்.

இப்பெருமாள் கடலில் இருந்து கிடைத்தவர் எனக் கூறப்படுகிறது. இக்கருத்தைக்கொண்டு சிலையின் தன்மையை நோக்கினால் இவர் சுவயம்வியக்த மூர்த்திதான் எனப்புலப்படும். இச்சிலை நம் இந்திய அரசின் புதைப்பொருள் ஆராய்ச்சி நிறுவனத்தின் பாராட்டுப் பெற்றதாகும். பெருமாள் சன்னதிக்குப் புறத்தே வடக்குட்பக்கத்தில் ஒரு பிள்ளையாரும், அகத்தியரும் காட்சி தருகிறார்கள். அகத்தியர் சிலை ஒரு மரத்தடியில் சிறு-கொட்டகையில் வைக்கப்பட்டுள்ளது.

இங்குள்ள அகத்தியர் சிலை, வெள்ளை நிறமுடையதாக, நின்ற கோலத்தில் இருக்கிறது. ஒரு பக்தரின் கனவிலே இவர் தமது இருப்பைக்கூறவே, மக்கள் கடலில் இருந்த இந்த வடிவத்தை எடுத்தார்களாம். முதலில் கடல் கடந்த வெளிநாட்டில் உள்ள இச்சிலை, அயல்நாட்டினரால் கடலில் எறியப்படவே, பின்பு கடலில் இருந்து இங்குள்ள மக்களால் எடுக்கப்பட்டிருக்கலாம், எனவும் பெரியோர்கள் கருதுகிறார்கள்.

அகத்தியர் சிலையில் இரு முழங்கால்களின் பகுதிகளில், அலைமோதிய அடையாள வரிகளை இன்றும் காணலாம். பக்கத்தில் பிள்ளையார் அமர்ந்துள்ளார். அப்பிள்ளையாரையும் அகத்தியரையும் நன்றாக வழிபட்டு வந்ததன் பயனாகப்போலும், இந்த அகத்தியரை ''வெள்ளைப்பிள்ளையார்'' என்று கிராம-மக்கள் கூறிவருகிறார்கள். இங்குள்ள அகத்தியர் சிலை மிக வெண்மையான தோற்றத்துடன் இருப்பதாலும், தூரத்திலிருந்து பார்ப்பதற்குப் பிள்ளையார்போல் காட்சியளிப்பதாலும் இன்றும் இவ்வூர்மக்கள் இவ்விடத்தை வெள்ளைப்பிள்ளையார் கோவில் என்றே அழைக்கின்றனர்.

முற்காலத்தில் ''காலரா'' என்ற கொடியநோய் ஒரு கொடிய தேவதை உருக்கொண்டு, ஆட்களை விழுங்கிக்கொண்டிருந்ததாம். அக்கொடுந்தெய்வம், நாரதரையும் கூடத் தாக்கிற்றாம். நாரதர் வாயிலாய் அதைக்கேள்வியுற்ற அகத்தியர், 'மந்திரோச்சாடனம்' பண்ணி அதைவிரட்டினாராம். உடனே அது காற்றுவடிவம் எடுத்து ஓடத்துவங்கியது. அகத்தியரை வேண்டிக்கொள்பவர்களிடமும் அக்கொடிய நோய் என்றும் அணுகுவதில்லையாம். இத்தகையதொரு கதையை, இங்குள்ளோர் கூறுகிறார்கள்.[30]

இங்குள்ள சீனிவாசகப்பெருமாள் கோவில் கட்டப்பட்ட ஆண்டு, 18ஆம் நூற்றாண்டு என்பதற்கும், முத்துவிசய ரகுநாத-சேதுபதியின் மகள் சேசம்மாள் பிரதிட்டை செய்ததற்கும் செப்பேட்டுச் சான்று உள்ளது. இன்று திருப்புல்லாணியில் உள்ள அருள்மிகு செகநாதர் கோவில் பெரிய அளவில் புகழப்பட்டு வருவதால், அன்று பெரியகோவிலாய் விளங்கிய சீனிவாசகப்பெருமாள் கோவில் நாளடைவில் போற்றுதல் குறைந்து, 'சின்னக்கோயில்' என்று இடைக்காலத்தில் வழங்கி வந்திருக்கலாம். இவ்விடத்திற்கு இப்பெயரும் இருந்தது பற்றி அரசுக்குறிப்பு ஒன்றுமில்லை.

### 5. கண்ணந்தை :

தொண்டைநாட்டுத் திருப்பதிகளுள் ஒன்று திருவிடவெந்தை என்று பெயர் பெற்றது அங்குள்ள பெருமாள் திருமங்கையாழ்வாரால் மங்களாசாசனம் செய்யப்பெற்றவர். இடஎந்தை என்பது அவர் திருநாமம். அருள்மிகு வராகமூர்த்தி வடிவாகவுள்ள அப்பெருமாள் தமது இடப்பக்கத்தில் நிலமகளைக் கோலமாகக் கொண்டு காட்சி தருவதால் இடஎந்தை எனப்பெயர் பெற்றார் என்பர்.[31]

திருஉத்திரகோச மங்கையின் அருகில் 'லாந்தை' என்ற சிற்றூர் உள்ளது. அதன் உட்கடையாக விளங்குவது கண்ணந்தை என்பது. கண்ணன்+எந்தை=கண்ணெந்தை என்பது கண்ணந்தை என்று மாற்றி ஒலிக்கிறது. ஒலிக்குறிப்பின்படி, பேச்சுவழக்கில் ஒலிகுறைந்தும், சிதைந்தும் வழங்குதல் இயல்பே. இவ்வூரில் வைணர்கள் அதிகம்; இங்குத் திருமால் வழிபாடு சிறப்பாக நிகழ்வதால் இவ்வூருக்குக் கண்ணன் திருநாமத்தால் பெயர்சூட்ட

எண்ணினர். அதனாலேயே இவ்வூருக்குக் கண்ணந்தை என்ற பெயர் வழங்கலாயிற்று.

## 6. கைலாசமங்கலம் :

'தவம் பயக்கும் வினையை' மங்கலம் என்னும் சொல் குறிக்கும். மங்கலம் என்னும் பின்ஒட்டில் முடியும் இவ்வூர், மங்களகரமான ஊர் என்பதைத் தன் பெயரிலேயே உணர்த்தி நிற்கிறது. அதிலும் கைலாசத்தைப் பெயர்முன் நிறுத்தி உறுதி செய்கிறது. விண்ணளாவி நிற்கும் இமயமலையில் வெள்ளியங்கிரியாக விளங்குவது திருக்கயிலாயம். கைலாசம் என்று வழங்குவது, கயிலாயத்தின் திரிபேயாகும்.

உத்திரகோசமங்கையின் அருகில் வெள்ளா என்ற கிராமத்தின் உட்கடையாக விளங்கும் இக்கைலாசமங்கலம், இறைவன் திருநாமத்திலேயே வழங்கப்பெறட்டும் என்ற உயரிய நோக்கத்தால் எழுந்தது எனலாம். இத்தகைய செம்மை சான்ற கயிலாச மலையின் இயற்கைக்கோலத்தையே தென்னாட்டுத் திருத்தலங்களும் சுருக்கிக்காட்டும் என்ற எண்ணத்தில் தாம் இவ்வூருக்கு இப்பெயர் எழுந்தது; என்றால் மிகையாகாது. இதன் வரிசையிலேயே உத்தரகோசமங்கைக்கும் 'தெட்சண கயிலாயம்' என்ற பெயர் வழங்கப்படுகிறது போலும்.

## 7. மாலங்குடி :

இப்பெயரில் இவ்வொன்றியத்திலேயே இரு ஊர்கள் அமைந்துள்ளன. ஒன்று மல்லல் கிராமத்தின் உட்கடையாகவும், மற்றொன்று, பனைக்குளத்தின் உட்கடையாகவும் விளங்குகின்றன. இவ்வூர்ப்பெயர், மால் + அம் + குடி என விரியும். திருமால் வீற்றிருக்கும் திருத்தலம், திருமால் குடிகொண்ட இடம் எனப்பொருள் கொள்வதலால் இக்கிராமத்திற்கு மால்அம்குடி (மாலங்குடி) எனப்பெயர் வரலாயிற்று. 'குடி' என்னும் சொல் ஊர்ப்பெயர்களில் அமைந்து குடியிருப்பை உணர்த்துவதாகும். உறவு முறையுடைய பல குடும்பத்தார் ஒரு குடியினராகக் கருதப்படுவர். இத்தகைய குடியினர் சேர்ந்து வாழுமிடம் குடியிருப்பு என்றும், குடி என்றும் சொல்லப்படும். தேவாரத்தில் கற்குடி, கருக்குடி, விற்குடி, வேள்விக்குடி முதலிய குடியிருப்புக்கள் பாடப்-

பெற்றுள்ளன. நெல்லையில் திருக்குறுங்குடி என்னும் வைணவத்திருப்பதி ஒன்று உண்டு. இதேபோல் இவ்விடத்திற்கும் இறைவன் திருமால் திருநாமத்தால் பெயர் நாட்டப்பெற்றிருக்க வேண்டும்.

## 8. புல்லந்தை :

பாரதநாட்டின் தெற்குக்கோடியில் (முன் காலத்தில் "இமயம் தொடங்கி சேதுவரை'' என்ற வழக்கிற்கிணங்க இந்தச் சேதுக்கரையும் இந்தியாவின் தெற்கு எல்லையாக இருந்தது.) மங்களகரமான புல்லாரணியம் என்ற காடு உளது. அக்காட்டில் திருமாலையே வழிபட்டுக்கொண்டு விளங்கும் முறைகொள் முனிவர்கள் குடில் அமைத்துத் தங்கியிருக்கிறார்கள். இம்முனிவர்களுக்குள் சிறந்த ''புல்லர்'' என்பவர் இங்குத் தங்கினார். இவர் நினைவாகவே மாயாகுளம் கிராமத்தைச் சார்ந்த புல்லந்தை என்ற உட்கடைக் கிராமம் பெயர்பெற்றிருக்க வேண்டும்.

புல்லர் + எந்தை = புல்லெந்தை என்று மருவி வழங்கி வருகிறது. எனவே தவம் செய்யும் முனிவர் பெயரால் தலத்தின் பெயர் இடுதலைத் தமிழகத்தில் பரக்கக் காணலாம்.

## 9. ஆதியட்சபுரம் :

'புரம்' என்ற சொல்லும் சிறந்த ஊர்களைக் குறிப்பதாகும். தொண்டை நாட்டின் தலைநகரம் ஆதியில் கச்சி என்றும், காஞ்சி என்றும் பெயர் பெற்றிருந்தது. பிற்காலத்தில் புரம் என்பது காஞ்சியொடு சேர்ந்தமையால் அது காஞ்சிபுரமாயிற்று. இவ்வொன்றியத்திலும் திணைக்குளம் என்னும் ஊராட்சியில் ஆதியட்சபுரம் என்ற உட்கடை கிராமம், பண்டைச்சிறப்பு மிக்கதாய் விளங்குகிறது. இவ்வூரில் பெரும்பாலோர் கிறித்துவர்கள் ஆவர். இது டச்சுக்காரர்கள், பிரஞ்சுக்காரர் ஆகியவர்களின் வாணிபச்சந்தை கூடும் இடமாக இருந்தது. அவர்களால் கிறித்துவிற்கு அன்றே ஆலயம் எடுக்கப்பட்டுள்ளது. இவ்வழிப்பாட்டுச் சிறப்பினால், திருமறையில் காணப்படும் ''ஆதியட்சபுரம்'' என்ற பெயரை இவ்விடத்திற்குச் சூட்டினர் போலும். இது கடற்கரையின் பகுதியில் அமைந்துள்ள ஊராகும்.

## 10. அருகுடி:

'குடி' என்னும் சொல் ஊர்ப்பெயர்களில் அமைந்து குடி-யிருப்பை உணர்த்துவதாயிற்று. உறவுமுறையுடைய பல குடும்பத்-தார் ஒரு குடியினராகக் கருதப்படுவர். இத்தகைய குடியினர் சேர்ந்து வாழுமிடம் குடியிருப்பு என்றும், குடி என்றும் சொல்லப்படும்.

அருகன் திருநாமத்தின் பெயரால் அமைந்த அருகன்குடி அருங்குடி என்றாகிப் பின்னர் அருகுடி என்று குறுகிற்றென்று கொள்ளுதல் பொருந்தும். இதேபோலத் திருத்தணிகை மலைக்குக் கிழக்கே எட்டுமைல் தூரத்தில் அருங்குளம் என்னும் சிற்றூர் ஒன்று உள்ளது. அவ்வூரில் சமண் சமயத்தார்க்குரிய கோவில் இன்றும் காணப்படுகின்றது. ஆதியில் அருகன்குளம் என்று பெயர்பெற்ற ஊர், இப்போது அருங்குளம் என வழங்குகின்றது. இதை ஒப்புநோக்குமிடத்து முகவை மாவட்டத்திலும் சமணர்களின் பள்ளிகள், வருகைகள் அதிகமிருந்தன. அதனால் இதன் அடிப்-படையில் இப்பெயர் அமைந்தது பொருத்தமுடையதேயாகும்.

## குறிப்புக்கள்

2. திருவாசம் - திருப்பூவல்லி 13. ''அன்றால் நிழற்கீழ் அருமறைகள் தானருளி''

3. திருநாவுக்கரசர் தேவாரம் - திருக்கடம்பூர் பதிப்பகம், 9.

4. என்.எஸ். தாதாசாரியார், திருப்புல்லாணி வரலாறு, பக். 58-59.

5. கொகுகுடி என்பது ஒருவகை முல்லைக்கொடி - தேவாரம் (திருநாவுக்கரசர் அடைவு திருத்தாண்டகம் - 5).

6. என்.எஸ். தாதாசாரியார், திருப்புல்லாணித்தலவரலாறு, முன்னுரைப்பகுதி, வரிகள் 6-10.

7. சேதுபதிகளின் செப்பேட்டுச் செய்திகள், இராமேஸ்வர குட-முழுக்கு மலர், 4வது பட்டயம், வரிகள் 38-44, பக். 21.

8. சேதுபதிகளின் செப்பேட்டுச் செய்திகள், இராமேஸ்வர குட-முழுக்கு மலர், 11ஆவது பட்டயம், வரிகள் 23-37, பக், 36.

9. என்.எஸ். தாதாசாரியார், திருப்புல்லாணி வரலாறு, ப. 15.

இத்தலத்துச் சிறப்பைக் குறிக்கும் வண்ணம் சங்கநூல் பாடல் ஒன்று உள்ளது.

''வெள்வேற் கவுரியிர் தொன் முதுகோடி
முழங்கிடும் பௌவம் இரங்கும் முன்துறை
வெல் போர் இராமன் அருமறைக்கவித்த
பல் வீழ் ஆலம் போல
ஒலியவிந்தன்றிவ்வழுங்கலூ ரே'' (அகம்:70)

என்பது—உரையாசிரியர் வேங்கடசாமிநாட்டார் ''வேலினை உடைய பாண்டியரது மிக்க பழமையுடைய திருவணைக்கரையின் அருகில், முழங்கும் இயல்பினதான பெரிய கடலின் ஒலிக்கின்ற துறை முற்றத்தில் வெல்லும் போரினில் வல்ல இராமன் அரிய மறையினை ஆய்தற் பொருட்டாகப் புட்களின் ஒலி இல்லையாகச் செய்த பல விழுதுகளையுடைய ஆலமரம் போல இவ்வூரில் எழும் ஒலி அவிந்து அடங்கியது'' என்று உவமைகாட்டி, உரை எழுதி-யுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

பழங்காலத்தில் திருவணை என்ற சேதுக்கரை தேவிபட்டினம் வரை பரவி இருந்ததால், இராமநாதபுரம் மகாவித்துவான் ஸ்ரீ உ.வே.ரா. ராகவையங்கார் சுவாமி, இவ்வருணையை நவபாஷாணம் என்ற தேவிபட்டினத்தைச் சார்ந்தது எனச் 'சேதுநாடும் தமிழும்'' என்னும் நூலில் பக்கம் 3ல் குறிப்பிடுகிறார்.

10. பெரியதிருமொழி : 9ஆம் பத்து, 3ஆவது பதிகம் (பாடல் எண் : 10).

11. பொருள் : பின்பு கடலின் கரையில் தருப்பைகளைப் பரப்பி, அதில் கைகளைக்கூப்பிக்கொண்டு கிழக்குமுகமாக நோக்கிக் கடல் எதிரே இராமன் படுத்திருந்தான்,

(தேசிகன் தசாவதாரத் துதியில் : 8ஆவது செய்யுள்).

12. என்.எஸ். தாதாசாரியார். திருப்புல்லாணி வரலாறு, பக். 77-78.

13. அபிதான சிந்தாமணி, பக். 786-787.

தருப்பை :

இது பிரமனது மூக்கிற் பிறந்த பரப்பிரம்மத்தினிடத்துப் பிறந்தது. இதனைத்தர்ப்பையே, சுபத்தைத் தருவதே, எனது எல்லாப்பாவங்களையும் போக்குக என்றுகூறி 'உறீம்பட்' என்கிற மந்திரத்தால், ஒருமுறை போதித்து மேலெடுக்க வேண்டும்.

இத்தருப்பையில் பெண்தர்ப்பை அக்கிரஸ் தூலமுடையது. மூலஸ்தூலம் உடையது. நபும்ஸக தர்ப்பை.

அடிமுதல் நுனிவரை ஒரே சமகனம் உள்ளது. புருஷ தர்ப்பையாம். இவ்வகைத் தருப்பையில் அடியில் பிரமனும், இடையில் விஷ்ணுவும், முனையில் சங்கரனும், ஆகிய திரிமூர்த்தி, களும் வசிக்கின்றனர். தருப்பை, நாணல், யவைப்புல், அறுகு, நெற்புல், விழல்மற்ற தானியங்களின் புல், மருள்மட்டை, சவட்டைக் கோரை, கோசமைப்புல் இவை பத்துவித தருப்பைகள் எனப்படும்.

இத்தருப்பையினைத் தேவதைகளை உத்தேசித்து நுனியாலும், மனிதர்களை உத்தேசித்து மத்தியிலும், பிதுர்க்களை

உத்தேசித்துத் தருப்பைபயினை, மடித்து நுனியாலும் தர்ப்பணஞ் செய்ய வேண்டும்.

இத்தருப்பைபயினை ஆதிவாரத்தில் கொய்வனேல் அதனை மற்ற ஆதிவாரம் வரையில் உபயோகிக்கலாம். பௌர்ணமியில் அறுப்பனேல் ஒருவருஷம் உபயோகிக்கலாம். பாத்திரபத மாதத்தில் கிரகிப்பனேல் ஆறுமாதம் வரையில் உபயோகிக்கலாம். சிராவண மாதத்தில் கிரக்கின ஒருவருஷம் உபயோகிக்கலாம். சிரார்த்த காலத்தில் கிரகித்தது அன்றைக்கு மாத்திரம் உதவும். ஐம்பது குசைப்புற்களால் பிரம்ம கர்ச்சம் செய்தல் வேண்டும். அதிற்பாதியால் ஆசனம் விதிக்கப்பட்டு உள்ளது. (விதிகள் மிகுதி).

தெர்ப்பை : (வின்சுலோவின் தமிழ்-ஆங்கில அகராதி, பக். 553). Kusa, a Sacrifical grars, much use in Hindu Worship,

தர்ப்பசயனம் : The bed or couch of Vishnu, a Rama, which was made of his grars.

14. A.R. No. 106 of 1903 and A.R. No. 107 of 1903.

15. திருப்புல்லாணி தலவரலாறு, பக். 69—70.

திருப்புல்லாணிக் கோயில் பர ராஜ சேகர ராஜா ராஜ்ய பரிபாலனம் பண்ணும்பொழுது, கோயில் கட்டிடம் கட்டப்பட்டதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இக்கோயிலுக்குப் பல சேதுபதிகள் நிலம் விட்டுள்ளார்கள். அவர்களின் பெயர்க் குறிப்புக் கீழே தரப்பட்டுள்ளது.

(1) VII கிழவன் சேதுபதியாகிய ரகுநாதசேதுபதி அவர்கள். (A.D. 1688-89) (A.D. 1692-93).

(2) VIII திருவுடையாத் தேவராகிய விஜயரகுநாத சேதுபதி அவர்கள் (A.D. 1716-17)

(3) XV முத்துராமலிங்க சேதுபதி அவர்கள் (A.D. 1780-81) (A.D. 1788-89) (A.D. 1777-78) (A.D. 1765-66).

(4) ரகுநாதசேதுபதி அவர்கள்
(ஜய — ஆனி மாதம்-28 தேதி)

(5) XIV செல்லமுத்து விஜயரகுநாத சேதுபதி அவர்கள் (A.D. 1759-60)

(6) விஜயரகுநாத சேதுபதி அவர்கள் (A.D. ? ? ) சாலி வாகன சகாப்தம் 1619 வெகுதானிய பங்குனி மாதம்-26 ஆம் தேதி மன்னார் முத்துச் சலாபத்திற் சிலாசாஸனம் செய்து கொடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

This is in A.D. 1759-60 in the reign of XIV Sella muthu Vijaya Raghunatha Sethupathi Avergal at the time of the Dutch settlement at Keelakkarai when the Sethupathi gave to the English two settlements on the Tuticorin in and Tirunelvelly coasts.

Muthu Ramalinga Sethupathi Avergal made a treaty with the Dutch.

In the Pearl-Fishery of Mannar one boat with stones is allowed by the Sethupathy (Reghunatha Sethupathi Katha Thevar Avergal) to Thiruppullani Temple (Vide Ramnad Manual Page 203)

The temple has owned Salt pans also as per cropper plate grant dated Salivahana Sakabdam 1749.

(சுபகிருது ஆனி மாதம்).

The temple now called Jagannath was in ancient times known as Devaccilaiyar temple. Thiruppullani is said to be in Kilcembil nadu. Record from 13th century A.D. are avilable from the reigan of Maravarman Sundara Pandya. In the reign of Kulasekhara, certain Aryacakravarti gifted sheperds. Aryacakravartins played important role in Ceylonese history. Three Aryacakarvartins gifted a number of villages to this temple. Ther names are :

1. Deivaccilayam Alagan Aryacakkaravarti.
2. Raman Aryacakravarti uncle of Parakrama Pandya.
3. Merutungan Narayana Cakravarti.

The Vijayanagara ruler Kampana, who brought Tamil country under the control of Vijayanagar, paid personel attention to this temple, Kampana instituted a special worship in his name called Kampana udaiyar sandhi in 1371. Three years later, under his reign the taxes due to the royal treasury were apportioned to the temple by the territorial assembly Nadu. The taxes were on all adults above the age of 12 in the following rules.

One panam per Brahmin

One panam per Vellala

One panam per Chetti

One panam per Tapasvi

One panam per Kaikkolas

One panam per other castes

Half a panam per Vellan pillai

Half a panam per Idaiyar

Half a panam per Kanmalas

Half a panam per Sanar

These should be collected or forcibly extracted by Velaikkaras annually and made over to the temple. It is interesting to see taxes levied on individual heads, of course giving concessions to socially and economically backward classes.

In the year 1515, the Bana chief Irandakalam Edutta Sundarattoludaiyan Mabali Banadarayan, instituted a spceial worship in his name. Three years later, another chief, gifted a village in the name of this Mahabali Bana, who is now called a Nayakar under the Vijayanagar influence. In 1778 a certain Anantalvan erected a number of mandapas in the temple. The mandapas were called :

1. Battar Pillai Vilasa
2. Lakshmi Vilasa

3. Jagannatha Vilasa
4. Puviruntaval Vilasa
5. Jagannatha Gangeya Vilasa

Among the Sethupathis, Kilavan Sethupathi, Kattaiyadeva and Marudu brothers are said to have added to the temple.

16. இராமநாதபிள்ளை, திருவாசக விளக்கஉரை.

17. கு. ஆறுமுகம்பிள்ளை, திருவுத்தரகோசமங்கைத் தலபுராணம் ப-19.

18. மேலது., பக். 80-89.

19 இராமநாதபிள்ளை, திருவாசக விளக்கஉரை.

20. அபிதான சிந்தாமணி.

'இலந்தை' பற்றிய குறிப்பு :

1) Ilantal (K. Elaci; M.ilanda) : Jujube-tree-முள்மரவகை.

2) Ilantai (நீர்நிலை) இலஞ்சி (N).

3) Ilavanti இலவந்தி > இலவந்திகை (சிலம்பு 25,4)

A Big tank provided with Machinary for filling as well as emptying.

மணிமேகலை 3,45 யந்திரவாவி என்கிறது.
சிலம்பு 10,31 வாவியைச் சூழ்ந்த வசந்தச்சோலை.

21. பள்ளி = இடம்; துஞ்சிய = சிறந்த; மாறன் = பாண்டியன்; புறநானூறு :

"இலவந்திகைப்பள்ளி" இடம்பெறுமிடங்கள் :

1) பாண்டியன் இலவந்திகைப் பள்ளித்துஞ்சிய நன்மாறனை மதுரை மருதன் இளநாகனார் பாடியது. பாடாண்திணை.

செவியறிவு றூஉத்துறை, 'இலவந்திகைப்பள்ளி' என்பது நீராவியை உடைய வசந்தச்சோலை மாளிகை என்று கூறுவர்.

ஓங்குமலைப் பெருவில் பாம்புஞாண் கொளீஇ
ஒருகணை கொண்டு மூவெயில் உடற்றிப்
....................
....................
....................
வடுவாழ் எக்கர் மணலிலும் பலவே. (புறநானூறு :55)

2) பாண்டியன் இலவந்திகைப் பள்ளித்துஞ்சிய நன்மாறனை, மதுரைக்கணக்காயனார் மகன் நக்கீரனார் பாடியது.

ஏற்றுவலன் உயரிய எரிமருள் அவிர்சடை
மாற்றருங் கணிச்சி மணிமிடற்றோனும்
....................
....................
....................
தண்கதிர் மதியம் போலவும்
நின்றுநிலை இயர் உலகமோடு உடனே. (புறநானூறு:56)

3) பாண்டியன் இலவந்திகைப்பள்ளித் துஞ்சிய நன்மாறனைக், காவிரிப்பூம்பட்டினத்துக்காரிக்கண்ணனார் பாடியது. வஞ்சித்-திணை; துணைவஞ்சித்துறை, சோழபாண்டிய மன்னர்களை இப்புலவர் பாடியுள்ளார்.

"வல்லார் ஆயினும் வல்லுநர் ஆயினும்
புகழ்தல் உற்றோர்க்கு மாயோன் அன்ன
....................................
....................................
கடிமரம் தடிதல் ஓம்பு நின்
நெடுநல் யானைக்குக்கந்து ஆற்றாவே"
(புறநானூறு: 57)

4) பாண்டியன் இலவந்திகைப்பள்ளித் துஞ்சிய நன்மாறன் பரிசில் நீட்டித்தானை ஆவூர்மூலங்கிழார் பாடியது.

"ஒல்லுவதும் ஒல்லும் யாவர்க்கும்
....................................
....................................
மெல்லியல் குறுமகள் உள்ளிச்
செல்லல் அத்தை சிறக்கநின்நாளே" (புறம் : 196)

5) பாண்டியன் இலவந்திகைப்பள்ளித் துஞ்சிய நன்மாறனை வடமவண்ணக்கன்பேரி சாத்தனார் பாடியது.

''அருவித்தாழ்ந்த பெருவரைபோல
ஆரமொடு பொலிந்த மார்பின் தண்டாக்
..........................................................
..........................................................
..........................................................
அடிநிழல் பழகிய வடியுறை
கடுமான்மாற! மறவாதீமே'' (புறம் : 198)

22. கு. ஆறுமுகம், உத்தரகோசமங்கை தலபுரானம், வலைவீசிய படலம், பக். 172—176.

23. Dr. R Nagasamy, 'Ramanathapuram', P. 133.

24. சேதுபதி பட்டயம் எண் 8, வரி 7—18.

25. மேலது., எண். 28, வரி 21—31.

26. உத்தரகோசமங்கைத் தலபுராணம், ப. 111.
திருவிளையாடற் புராணம் :

(வலைவீசின படலம் 62, 63, 64, 64-ம் பாடல்கள்)

பெண்ணினை வதுவைக்கீந்த பெருந்துறைச் சேர்ப்பற் கன்று
தண்ணளி சுரந்து நல்கித் தருமமால் விடைமேற் றோன்றி
விண்ணிடை நின்றான் சென்றான் வேத்திரப்படையானோடும்
உண்ணிறை யன்பரோடு முத்தர கோச மங்கை

அங்கிருந் தநாதிமூர்த்தி யாதிநான் மறை ளேத்துக்
கொங்கிருங் கமலச் செல்விக் குரைகவழ் வணங்கிக் கேட்பப்
பங்கிருந் தவட்கு வேதப் பயனெலாந் திரட்டி முந்நீர்ப்
பொங்கிருஞ் கதைபோ வட்டிப் புகட்டினால் செவிக ளார

அவ்வேலை யல்புடையா ரதுபதினா யிரவர்க்கு மளித்துப் பாச
வெவ்வேலை கடப்பித்து விடாத பரானந்த வீடு நல்கி
மைவேலை யன் யவிழி யங்கயற்க ணங்கையொடு மதுரை சார்ந்தாள்
இவ்வேலை நிலம்புரக்க முடிகவித்து பாண்டியனென் றிருதந் மூர்த்தி

27. என். எஸ். தாதாச்சாரியார், திருப்புல்லாணி தலபுராணம், ப.41.

28. கம்பர், கம்பராமாயணம்.

சேதுபதிச் செப்பேட்டு முன்னுரைப்பகுதி :

சேது என்பது இராமபிராமன் கடல் மேலிட்ட அணை. இது கன்னியாகுமரி முதல் தொடங்குகிறது என்பதைக்,

''குரங்குசெய் கடற் குமரியம் பெருந்துறை''
(மணிமேகலை 5:39)

என்பதனால் அறியலாம். இச்சேதுவைச் சேர்ந்த நாடு சேதுநாடு என வழங்கப்பெறுகிறது.

சங்கரசோழனுலாவில், 'சேதுக்கும் தஞ்சைக்கும் கோழிக்கும் தாமப்புகாருக்கும்' என்று இந்நாடு குறிக்கப்பெறுகிறது.

சேதுபதிகளின் மரபு பற்றிக் கூறும்போது, ''சேது கட்டிய காலத்தில் தம்மை வழிபட்ட நிஷாதத்தலைவன் ஒருவனைச் சேதுவைக் காத்துவரும்படி இராமன் ஆணையிட்டதாகவும், அவன் வழிவந்தோரே சேதுபதிகள்'' என்றும் கூறுவர்.

இச்சேதுபதிகள் மறவர்சீமை என்றும், சேதுநாடு என்றும் வழங்கப்பெறும் இராமநாதபுரத்தை ஆட்சிசெய்து வந்தவர்களாவர். (சேதுபதிகளின் செப்பேட்டுச் செய்திகள்; முன்னுரைப்பகுதி; இராமேஸ்வரம் திருப்பணிமலர் 1975இல்; பிற்சேர்க்கை -6 இல் இடம் பெற்றுள்ளது).

29. என். எஸ். தாதாசாரியார், திருப்புல்லாணி தலவரலாறு, பக். 46-49.

1. வால்மீகி இராமாயணம் :

இராமன் அயோத்திக்குச் சீதையுடன் புஷ்பக விமானத்தில் திரும்புகையில், இந்தச் சேதுவைப் பார்த்துச் சீதையிடம் கூறுவது:

மூவுலகும் கொண்டாடும் இவ்வணையைச் ''சேதுப்பந்தம்'' என்பார்கள். இதனைக் கண்ணுற்றவர்களின் எல்லாப் பாதகங்களையும், போக்கும் புனிதமான அணை இதுவே.

2. ஆத்யாத்ம ராமாயணம் :

எவன் இவ்வணையைப் பயபக்தியுடன் வணங்குகிறானோ, என் (ராமன்) அருளால் அவன் எல்லாப் பாதகங்களிலிருந்தும் விடுபடுகிறான்.

3. ஆனந்த ராமாயணம் :

பின்பு சமுத்திரராசன் இராமரை வணங்கி நின்று நளன் என்ற வானரத்தைச்சுட்டிக்காட்டி "இந்த நளனைக் கொண்டு" என்மீது அணைகட்டச் செய்யுங்கள். இவன் விசுவகருமான்னுடைய புதல்வன். இவன் முன்னொரு காலத்தில் கங்கைக்கரையில் பூசை-செய்து கொண்டிருந்த, ஒரு வேதியனுடைய சாளக் கிராமத்தை எடுத்துக் கங்கையில் எறியவே, அவர் உடனே அவனைப்பார்த்து 'உன்கையால் எறியப்பட்ட கல் முதலியவைகள் தண்ணீரில் மிதக்கவேண்டும்'' எனச் சாபம் இட்டார் என்று கூறினான். பிறகுதான் சேதுவைக் கட்டத்தொடங்கும் பொழுது நளன் அவ்விடத்தில் பிள்ளையாரை வழிபட்டு நவக்கிரகங்களைப் பூசித்துப் பின், கடலில் ஒன்பது கற்களை (பாஷாணங்களை) நளனும் தன்கையால் நட்டுவித்துப் பூசித்தான்'' என்பது ஆனந்த ராமாயணக்குறிப்பு.

(குறிப்பு:- இவ்வாறு ஒன்பது கற்களை வைத்துப் பூசித்த நவபாஷாணம் என்ற இடம் இன்றைக்குத் தேவிபட்டினம் என்ற பெயரால் அழைக்கப்படுகிறது.)

4. கம்ப ராமாயணம் :

1. நன்னூல் நெறி அடுக்கிய புல்லில் கருணை அம்கடல் துயின்ற னன் கருங்கடல் நோக்கி "என்றும்

2. ஓடும் என்முதுகு இட்டு என ஓங்கிய சேடல் எனப்பொலிந்தது சேதுவே":

என்றும் கூறி மேலும் கம்பன் இந்தச் சேதுக்கரை யண்ணையை ஓர் அருமையான கற்பனையின் வாயிலாய்ப் புகழ்ந்திருக்கிறார்.

மெய்யின் ஈட்டத்து இலங்கையர் மேன்மகன்
பொய்யின் ஈட்டிய தீமை பொறுக்கலாது
ஐயன் ஈட்டிய சேனை கண்டு அன்பினால்
கையை நீட்டிய தன்மையும் காட்டுமால்

ஐயனே! குபேரனுடைய புண்ணியப் பேற்றால் முதலில் நான் அழகாகப் படைக்கப்பெற்றேன். பின்பு தனது தவமகிமை-யால், இராவணன் வந்து குடியேறினான். நெடிது வாழ்ந்து வந்தான். நாளடைவில் அரக்கர்கள் கொடிய பாவங்களைச் செய்தனர். பாபச்சுமை பெருகி உள்ளது. இனிமேல் என்னால் பொறுக்க முடியாது. நீ விரைவில் வந்து தீமையை நீக்கி என்னைப் புனித மாக்கியருள்'' என்று இராமனை நோக்கி இலங்காதேவி கையை நீட்டி நின்றது போல், (சேது) இவ்-வணைக்காட்சி மாட்சிமையோடு விளங்குகிறது என்பது இச்-செய்யுளின் கருத்தாகும்.

5. மணிமேகலை :

குரங்கு செய்கடற்குமரியம் பெருந்துறைப் பரந்து சென்-மாக்களோடு தேடினேன் பெயர்வோன் (சேது என்ற இடம் கன்னியாகுமரி வரை பரந்துள்ளது'' என்ற கருத்தைச் சேரக்-கொள்வது).

6. துளஸீராமாயணம் :

எவராலும், மிகவும் இன்பந் தரும் உத்தமமான இந்தப் பெருந்தலத்தின் பெருமையை எடுத்துரைக்க இயலாது.

7. சம்பந்தர் :- (இராமேசுவரப்பதிகம்)

''அணையில் சூழ்கடல் அன்றடைத்து வழிசெய்தவன்''.

8. திருநாவுக்கரசர் :- (இராமேச்வரப்பதிகம்)

''கடலிடை மலைகள் தம்மால் அடைந்த மால்களும் முற்றி''

9. தியாகராஜ சுவாமி :-

கரகரப்ரியா

பல்லவி

ஸேதுவாரச்ருங்காரமுஜேனி ஜூதுனு ஸ்ரீராமா
(அது) ஸேதுபந்தன ரைஸீருஹ பாவதுநு பொகடநா

10 பவபூதி (மஹாவீர சரிதம்)

கல்பம் கல்பம் தோறும் வணங்கிப் போற்ற வேண்டிய பெருமை உடைய இந்தச் சேதுவானது, ராமனுடைய புகழுக்-கோர் கட்டிய சின்னமாக உள்ளது.

11. ஹநுமந் நாடகம் :

இத்தலத்தில் உள்ள சித்திரகடம் என்ற அணைப்பெட்டியில் வைத்த, ராமரத்திலத்தை வணங்குகிறேன்.

12. சம்பூரராமாயணம் :

மக்களை எடுப்பதையும், அவைகளை நீரில் போகுவதையும் எளிதில் கண்டறியமுடியாதவாறு விரைவில் வியப்பாக, நளனால் கட்டப்பட்ட சேதுவின் அமைப்பைக் கண்ட வானரவீரர்கள், "பூமியானவள் தன் மகளான சிதைக்கு இனிப்பயம் வேண்டாம்" எனத் திருக்கையை நீட்டி அபயம் அளிப்பதுபோல் இருந்தது. இத்தலம் அபயம் அருளும் தலம் என்பதும் அறியத்தக்கது. உடனே அச்சேதுவின் மேல், படையில் உள்ள குரங்குகள் ஒரு யோகியாவைக் எளிதில் வாழ்க்கைக் கடலைத் தாண்டுவது போல், சென்று கடலைக்கடந்தனர்.

13. ரகுவமிசம்:

"மத்ஸேதுனா பேனிலம் அம்புராசிம்" (என்னுடைய சேதுவினால் நுரை தங்கிய கடல்) என இராமன் சீதையிடம் கூறினார். இவ்வணையைத் தரிசித்த மக்களின் பாபக்களறுகளே நுரையிட்டுக் காண்கிறது என்பது நயம்.

2. பகவானான ராமன் சயனித்துக்கொள்ளவே, வானரப் படைகள், பாதாளத்திலிருந்து மேலே எழும்ப வந்த ஆதிஷேன் உருவம் போன்றதொரு அழகிய அணையைக் கட்டினார்கள்.

## 14. ஆழ்வார்கள்:

இராமன் புகழைப் பலபடியில், கிட்டத்தட்ட 320 இடங்களில் தமது திவ்வியப் பிரபந்தங்களில் பேசிவரும் வகையில், ஆழ்வார்கள் சுமார் 30 இடங்களில், இத்தலத்து நிகழ்ச்சியுடன் தொடர்பு படுத்தி இராவணனைப் புகழ்ந்து அருளிச் செய்துள்ளார்கள்.

(குறிப்பு: திருமங்கையாழ்வார் தமக்கே உரிய நாநலத்தால் இத்தலத்தையும், தலப்பெருமாளையும், இராமனையும், தமது பிரபந்தத்தில் இசைந்து அருளி இருப்பது தனிச்சிறப்பு வாய்ந்த-தாகும்).

இவ்வாறு மற்றும் பல தமிழ் நூல்களிலும் சேதுவின் சிறப்புப் பேசப்பட்டுள்ளது.

30. என்.எஸ். தாதாசாரியார், திருப்புல்லாணித் தலவரலாறு, பக். 43-45.

31. ரா.பி. சேதுப்பிள்ளை, ஊரும் பேரும், பக். 324-325.

# 3. வணிக-வரலாற்றுச் சிறப்புள்ள ஊர்ப்பெயர்கள்

முன்னுரை :

தமிழர்தம் வரலாற்றுச் சிறப்புமிக்க ஊர்களைப் பற்றியும், அவர்தம் பழக்கவழக்கம், நாகரிகம், பண்பாடு பற்றியும் பழந்தமிழ் இலக்கியங்களில் பரக்கக் காணலாம். வாழ்வும் தாழ்வும் நாடு நகரங்களுக்கு உண்டு. முன்னாளில் சீரும் சிறப்பும் பெற்று விளங்கிய சில நகரங்கள் இக்காலத்தில் பெயரும் பெருமையும் இழந்து காணப்படுகின்றன; பின்னாளில் தோன்றிய சில ஊர்கள் உலகறிய வளர்கின்றன.

தமிழகத்தில் முன்னாளில் கோட்டை கொத்தளங்கள் இருந்தன. அரசனுக்குரிய மனை அரண்மனையென்று அழைக்கப்பட்டது. அரண் அமைந்த சில ஊர்களின் தன்மையை அவற்றின் பெயர்களால் அறியலாம். எயில் என்னும் சொல் கோட்டைக் குறிக்கும். வான்வழியாகச் செல்லும் கோட்டை போன்றவை 'தூங்கு எயில்' என்று மணிமேகலை (6,22) குறிக்கிறது.[32] காஞ்சியை 'எயிற்பதி' என்று சேக்கிழார் திருக்குறிப்புத்தொண்டர் புராணம் ஐந்தில் குறித்துப் போந்தார்.

கோட்டையில் மதிற்சுவர் 'இஞ்சி' என்ற சொல்லாற் குறிக்கப்படும். பாண்டிநாட்டில் மதுரைக்கு அண்மையில் வடபழஞ்சி, தென்பழஞ்சி என்றும் ஊர்கள் உள்ளன.

''பாளையம்'' படைவீரர்களுக்குரிய ஊராகும். தமிழகம் முழுவதும் பல பாளையங்கள் காணப்படினும் சிறப்பாகக் கொங்கு-நாடே பாளையத்திற்குப் பேர்பெற்ற நாடாகும். ''வல்லம்'' என்ற சொல்லும் அரணுடைய ஊரைக்குறிப்பதாகத் தெரிகின்றது. திருவல்லம் வடஆர்க்காட்டிலுள்ளது. அஃது ஒரு சிறந்து படை-வீடாக 10ஆம் நூற்றாண்டில் விளங்கிய பான்மை சாசனங்களால் அறியப்படும்.

பத்தாம் நூற்றாண்டுக்குப்பின்பு, சோழநாட்டின் பெருமை நின்று நிலவியது. அறிவும் ஆற்றலும் வாழ்ந்த பெருமன்னர்

வாழையடி வாழையெனத்தோன்றி, அந்நாட்டின் பெருமையை நிலைநாட்டினர். அன்னார் தம் பெயர் விளங்குமாறு (கங்கை கொண்ட சோழபுரம்) புதிய நகரங்களை உண்டாக்கினர்.

பழந்தமிழ் நாட்டில் பல வகுப்பார் வாழ்ந்திருந்தார்கள். பல குல மன்னர்களும் ஆட்சிபுரிந்தார்கள். அன்னார் வரலாறு இன்னும் முறையாக எழுதப்படவில்லை. ஆயினும் அவர்கள் பெயரும் பெருமையும் ஊர்ப்பெயர்களால் விளங்குகின்றன. சிறப்பாக, இவ்வியலில் வரலாற்று அடிப்படையிலும், வாணிப அடிப்படையிலும் சிறப்பும் மேன்மையும் பெற்ற பெரியபட்டணம், முத்துப்பேட்டை, கீழக்கரை, ரெகுநாதபுரம், கொம்பூதி, களரி, வெள்ளாமருச்சுக்கட்டி, காஞ்சிரங்குடி, நல்லிருக்கை, மல்லல், குதக்கோட்டை, தெய்வச்சிலை நல்லூர், கோனேரி, வித்தானூர், களைக்குளம், பெரியகண்ணாங்குடி, கருக்காத்தி, வைகை போன்ற 18 ஊர்களைப் பற்றியும், ஊர்ப்பெயர்க் காரணங்களையும் இங்கு ஆய்வோம்.

## 1. பெரியபட்டணம்:

கடற்கரை ஊராதலால் 'பட்டினம்' எனும் சொல்லே, இவ்வூருக்குப் பொருத்தமுடைய சொல்லாகும். காலத்தின் போக்கில் பட்டினம் பட்டணம் என்றாகி இருத்தல் கூடும். 'பெரிய', 'சிறிய' எனும் அடைமொழிகள் சில ஊர்ப்பெயர்களிலே பொருந்தி நிற்கக்காணலாம். கொங்கு நாட்டில் முற்காலத்தில் பெரியதோர் ஊராக விளங்கியது பேரூர் ஆகும். தஞ்சை நாட்டிலுள்ள பேரளம் என்னும் ஊரும், திருச்சிராப்பள்ளியைச் சேர்ந்த பெரும்புளியூரும் பெரிய ஊர்களாக இருந்திருக்க வேண்டும் என்று தெரிகின்றன.

திருப்புல்லாணியின் கிழக்கில் 12 மைல் தொலைவில் உள்ளதும், பண்டைச் சிறப்பு மிக்கதும். வாணிபச் செல்வாக்கு மிக்கதுமான ஊராக விளங்குவது இப்பெரிய பட்டணம். இன்று இங்கு முகம்மதியர்கள் தாம் அதிகம் வாழ்கிறார்கள். கடல்கடந்து வணிகமும். கடற்படுபொருள் வணிகமும் செய்து வாழ்க்கையை நடத்துகிறார்கள். பழங்கால நாணயங்கள், இடைக்கால நாணயங்கள், பிற்கால நாணயங்கள் எனப் பல காலங்களில் செய்த நாணயங்கள் இன்றும் இவ்விடங்களில் அகழ்வராய்ச்சியில் கிடைக்கின்றன. இவைகளை வகைப்படுத்தித், தொகுத்த மதுரைத்

தொல்பொருட் காட்சியில் (மஹால்) வைத்துள்ளார்கள். இப்பட்டணம் மேலும் அகழ் ஆய்விற்குரிய இடமாகும். பாண்டியன் காலத்து அரண்மனை மண்ணினுள் புதைந்து கிடைப்பதைக் காணலாம் என இங்குள்ள மக்களும், வரலாற்றுச் சிந்தனையுள்ளவர்களும் ஆர்வமாகக் கூறுகிறார்கள்.

13ஆம் நூற்றாண்டில் தமிழகத்தைச் சுற்றிப்பார்க்க வந்த, இபன்பட்டுடா என்பவர், இப்பகுதிக்கும் வந்துள்ளனார். அவர் தம் குறிப்பில் இவ்விடங்களை "மாபார் எல்லை" என்றே அழைத்திருக்கிறார். இதைப்பற்றிய குறிப்புக்களை அண்ணாமலைப்பல்கலைக்கழக வரலாற்று வரிசையில் காணலாம்.[33] இவ்வூருக்குப் பௌத்திர மாணிக்கப்பட்டினம் என்ற பெயர் வழங்கியுள்ளமைக்குத் தக்க சான்றுகள் உள்ளன. இவ்வூரைப் பற்றிய குறிப்பு திருப்புல்லாணி கோவில் கல்வெட்டில் (அரசு (எண் 402இல்) காணலாம். சுந்தரப்பாண்டித்தேவர் காலத்தில் 13ஆம் நூற்றாண்டு) எழுதப்பட்ட கல்வெட்டு ஒன்று திருப்புல்லாணி முதல் கோபுரத்தில் காணப்படுகிறது.

கடற்கோளுக்கும், அடற்புயலுக்கும் இலக்காகிக் காலத்தின் கரங்களால் கவரப்பட்ட பிறகும் மறைந்த அந்த மாநகரங்களை மனத்திரையில் நினைவுபடுத்த, பெயரளவில் எஞ்சிநிற்கும் சில பட்டினங்கள் இன்றும் உள்ளன.[34] குறிப்பாகக் காவேரிப்பூம்பட்டினம், தொண்டிப்பட்டினம், காயல்பட்டினம் ஆகியவைகளுடன் இணைத்து எண்ணத்தக்கவைதாம் பாண்டியநாட்டுப் பராக்கிரமப்பட்டினமாகும்.

கடற்கரையில் உண்டாகும் நகரங்கள் பட்டினம் என்று பெயர்பெறும். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே தமிழ்நாட்டில் காவிரிப்பூம்பட்டினம் தலைசிறந்த பட்டினமாகத் திகழ்ந்தது. இந்நாளில் பட்டினம் என்ற சொல் சிறப்புவகையில் சென்னைப்பட்டினத்தைக் குறித்தல் போன்றது. அந்நாளில் பட்டினம் என்பது காவிரிப்பூம்பட்டினத்தையே குறித்தது.[35] அந்நகரத்தைப்பற்றிப் பண்டைக்கவிஞர் ஒருவர் இயற்றிய பாட்டு பட்டினப்பாலை என்ற பெயர் பெற்றிருந்தது. காவிரிபூம்பட்டினமே என்பது இனிது விளங்குவதாகும்.

அக்காலத்தில் சிறந்திருந்த கடற்கரை நகரங்களின் அமைப்பைப் பண்டை இலக்கியங்கள் ஒருவாறு காட்டுகின்றன. ஒவ்வொரு பெரிய கடற்கரை நகரமும் இரு பாகங்களையுடைதாய் இருந்தது. அவற்றுள் நடுபாகம் ஊர் என்றும், மற்றொரு பாகம் பட்டினம் என்றும் அழைக்கப்பட்டன. பூம்புகார் நகரத்தின் ஒரு பாகம் மருவூர்ப்பாக்கம் என்றும், மற்றெரு பாகம் பட்டினப்பாக்கம் என்றும் பெயர்பெற்றன. இரண்டு சேர்ந்தது காவிரிப்பூம்பட்டினம் எனப்பட்டது.[36] இதேபோலவே பாண்டியநாட்டுக் கடற்கரையிலும் வரலாற்றுச் சிறப்புமிக்க பட்டினம் ஒன்று காணப்படுகிறது. இந்தப் பட்டினம் பராக்கிரயப்பட்டினமாகும். இப்பட்டினம் இராமநாதபுரம் நகருக்குத் தென்கிழக்கே பத்துமைல் தொலைவில் மன்னர் வளைகுடாவில் அமைந்துள்ளது. பராக்கிரமப்பட்டினம் காலப்போக்கில் பௌத்திரமாணிக்கப்பட்டினமாகி, இன்று பெரியபட்டணம் என வழக்கில் இருந்து வருகிறது. பாண்டிய மன்னர்களில் ஒருவரான பராக்கிரமன் என்பவரது நினைவாக எழுந்த ஊரே இந்தப் பட்டணம். பாண்டியர் வரலாற்றிலே பல பராக்கிரமபாண்டியர்கள் குறிப்பிடப்படுகின்றனர்.

> ''பாண்டியன் கடாவர்மன் என்ற பராக்கிரம பாண்டிய தேவர்''[37]
>
> ''திருபுவனச்சக்கரவர்த்தி பராக்கிரம பாண்டிய தேவன்''[38]
> ''பராக்கிரம பாண்டியன் கல்லணை''[39]
>
> ''பராக்கிரம பாண்டியன் கட்டளை''
>
> ''தென்னன் பராக்கிரம பாண்டிய தேவனது ஒன்பதாவது ஆண்டு''[41]
>
> ''பரராசர் நாளும் பனியும் பாரக்கிரமம பாண்டியனே''[42]

என்ற பராக்கிரம பாண்டியனது பெயரில் எப்போது எழுந்தது என்பதை அறுதியிட்டுச் சொல்ல இயலவில்லை.

வரலாற்றில் :

வரலாற்றின்குறிப்புக்களை வகைப்படுத்தி நுணுகி நோக்கும் பொழுது முதன் முறையாகத் தமிழகத்தில் பாண்டியன் உரிமைப் போரில் சடையவர்மன் குலசேகரப் பாண்டியனுக்கு எதிராகப்

பராக்கிரம பாண்டியன் பக்கலில் போரிட ஈழப்படைகள் இலங்கைத் தண்டநாயகன் தலைமையில் கி. பி. 1170இல் நுழைந்தன. கடல் வழியாக இராமேசுவரத் தீவைக் கைப்பற்றி எதிர்க்கரையில் கரை இறங்கியபொழுது, இந்தப் பட்டினம் மூன்று சுற்றுக்கோட்டை மதில்களையும், 12 வாயில்களையும் பெற்ற பெருநகராக விளங்கியதாகவும் அதைக் கைப்பற்றிப் பலப்படுத்தியதாகவும், இலங்கை நாட்டு வரலாறு விவரிக்கிறது.[43] அடுத்து சீனா, ஈழம் வழியாக கி. பி. 1293 இல் இந்தியா போந்த உலகப்பயணி மார்க்கோபோலோவும், இபுன்பதூதாவும் இந்தக் கடற்கரையில்தான் கரை இறங்கினர் என்பதற்கான சான்று உள்ளன.[44]

ஆனால் தமிழகத்தின் வரலாற்றில் இந்தப் பெருநகரம் அரேபிய நாட்டுப் பயணியான திலிஷ்கி, பராசிக நாட்டு வள்ளல் தூனிஷிய நாட்டு இபுன்பதூதா போன்ற உலகப்பயணிகளாலும் இந்திய வரலாற்று ஆசிரியர்களான மேர்குஸ்ரு, பரிஷ்தா ஆகியவர்களாலும் ''பக்தன்''[45] ''பத்னி'' எனவும் அரபி வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ளது. பட்டினம் என்ற தமிழ்ச்சொல்லின் மாற்று வடிவம் பத்தன் ஆகும். அதே சொல் விகாரமடைந்து விரிந்து தமிழில் பெரியபட்டினமாகியுள்ளது. இங்ஙனம் பராக்கிரமபட்டினமாகவும், பௌத்திரமாணிக்கப் பட்டினமாகவும், பத்தனாகவும் குறிக்கப்பட்டுள்ள பெருநகரம் இன்றைய சிற்றூரான பெரியபட்டணந்தானா என்ற வியப்பூட்டும் வினாவிற்கு விளக்கம் பெறுவதுதான் இந்த ஆய்வு.

''தென்னகமும் முஸ்லீம் ஆட்சியாளர்களும்'' என்ற ஆங்கில நூலில்[46] இலங்கைத் தண்டநாயக்கன் ஜகத்விசயன் தலைமையில் ஈழத்துப் பெரும்படையானது மாந்தோட்டம் என்ற ஊரின்கண் அணி சேர்க்கப்பட்டு கி. பி. 1170இல் இராமேஸ்வரத்திற்கு வடகிழக்கே இரண்டுகல் தொலைவில் கரை இறங்கியதாகவும் அங்கிருந்து பாம்பன், குத்துக்கால் ஆகிய ஊர்களைக் கைப்பற்றி எதிர்க்கரையில் உள்ள பராக்கிரமபட்டின கோட்டையைப் பலப்படுத்தியதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த வட்டாரத்தில் உள்ள ஈரக்காடு, இளங்காமணி, இலங்கையர்மேடு, ஈழம்படல், ஈழவனூர், ஈழவன்கோட்டை

ஆகிய சிற்றூர்கள் அந்த ஈழப்படையெடுப்பை இன்னும் நினை-வூட்டுவனவாக அமைந்துள்ளன.[47]

பெரியபட்டணத்தின் தென்மேற்குப் பகுதியில் இன்றும் கோட்டைச் சுவரில் அழிமானம் தென்பகுதியில் தென்படுகிறது. வேறு கோட்டைகள் இந்தப் பகுதியில் இருந்ததாக வரலாறு இல்லையாதலின் ''மூன்று சுற்று மதிலுடன் அமைந்த நகரம்'' என இலங்கை மகாவம்சம் குறிப்பிடுவது இந்தப் பட்டணத்தையே எனலாம்.

திருநெல்வேலி மாவட்ட மாறமங்கலம் சந்திரசேகர ஈஸ்வரசுவரமி கோவிலில் இருந்து பௌத்திர மாணிக்கப்பட்டினம் பற்றிய தொடர்கள் உள்ள நடுகல்வெட்டிலிருந்து படியெடுக்சப்-பட்டுள்ளது.[48] இக்கல்வெட்டு பாண்டியன் முடித்தலைக் கொண்ட மூன்றாம் குலோத்துங்க சோழதேவரது இருபத்து எட்டாவது ஆட்சிக்காலத்தில் பொறிக்கப்பட்டது. இராமமேசுவரம் கோவில் ஸத்தி விளக்கு தர்மத்திற்காக அங்குச்சென்று இருந்த பவித்திர மாணிக்கப்பட்டின வியாபாரிகளது கொடை தொடர்பான குறிப்பு இக்கல்வெட்டில் உள்ளது.

தஞ்சை மாவட்ட திட்டைக்குடி சுகாஷனைப் பெருமாள் கோவிலுக்குக் கீரனூர் கிராமத்தைத் திருவிடையாட்டக் காணி-யாகக் காமன் சொக்கன் என்பவன் குலோத்துங்க சோழதேவரது முப்பதாவது ஆண்டு ஆட்சிக்காலத்தில் நீர்வார்த்துக் கொடுத்து அதனைப் பவித்திரமாணிக்க நல்லூர்[49] எனப்பெயரிட்டு வழங்கிய செய்தியைப் படிக்கும்பொழுது பவித்திரமாணிக்கப்பட்டினம் ''பவித்திர மாணிக்க நல்லூர்'' என்ற பெயர்கள் அதே காலத்தில் வழக்கில் இருந்தமையும் தெரியவருகின்றன.

மேலும் பவித்திரம் என்ற சொல்லுக்குப் பேரரகாதி (பக். 2543) இல் ''தருப்பை'' என்ற பொருள் சுட்டப்பட்டுச் சீவக-சிந்தாமணியும், சூடாமணி நிகண்டும் மேற்கோள்களாக எடுத்-தாளப்பட்டுள்ளன. இராமாயணக்காலந்தொட்டு இப்பகுதியில் தருப்பைப்புல் நிறைந்து இருந்ததைப் 'புல்லாரண்யம்' 'திருப்-புல்லணை' என்ற பெயரும் இந்தத் திருப்புல்லணைத் தலத்தில்

பள்ளிகொண்டுள்ள பெருமானது தருப்பாசன அழகியார்' என்ற திருப்பெயரும் இன்றளவும் நினைவூட்டுவனவாக உள்ளன.

அத்துடன் திருப்புல்லணைக்குப் பக்கத்தில் உள்ள "கோரைக் குட்டம்" என்ற சிற்றூரும் இதற்குச் சான்று வழங்குவதாக அமைந்துள்ளது.

மற்றும் வீரமாமுனிவரது சதுரகராதியில் பௌத்திகம் என்ற சொல்லுக்கு முத்து, நித்தியம் எனப்பொருள் விவரிக்கப்பட்டுள்ளது. திருப்புல்லணையிலிருந்து இராமேசுவரம் வரையான கடற்கரை-யில் பவளம் மட்டுமின்றி முத்தும், சங்கும் வளங்கொழித்து விளங்கியதை இலக்கியச் சான்றுகளும் எடுத்து இயம்புகின்றன. இந்தப் பகுதியில் ஏகசக்கரவர்த்தியாக விளங்கிய இரகுநாத சேதுபதியை ஏட்டில் போற்றிய அழகிய சிற்றம்பலக்கவிராயர் வாக்கில்,

"முந்நீர் சொரிமுத்த மாணிக்க ராசிமுகந்தருளி
தண்ணீர் சொரிகந்தமா தனத்தான் ரகுநாதன்...
திரைவந்தமுத்தும் வளரளந்த பொன்னும் தென்வேந்தகர் தந்து
நிரைவந்து போற்றும் ரகுநாதன்..."[50]

(ஒருதுறைக்கோவை)

எனப் பாராட்டியிருப்பதிலிருந்தும் சேதுபதிக்குரிய விருதாவளியில் "சொரிமுத்து வண்ணியன்" என்ற தொடர் பயன்படுத்தப்பட்ட-திலிருந்தும் இப்பகுதியில் முத்து மிகுந்து இருந்த செய்தி புலப்-படுகிறது. அத்துடன் முத்துமாணிக்கப்பட்டினமான, பௌத்திக மாணிக்கம் மருவி பௌத்திரமாணிக்கப் பட்டினமாக வழங்கி இருந்திருக்கலாம் எனத்துணியவும் இடமுள்ளது. இங்கு முத்து மிகுதியாக விளைந்ததாக வரலாறு கூறுகிறது. பவளமும்[51] ஒரு-வகையான மாணிக்கம் என 'உத்பலபரிமளம்' என்ற நூலிலும் 'அக்கினிபுராணத்திலும்' வரையறுக்கப்பட்டுள்ளது. இந்தக் காரணங்களினால் காரண விடுகுறிப் பெயராக இந்த ஊரின் பெயர் அமைந்திருக்கவேண்டும்.

இராமநாதபுரத்திற்கு அண்மையில் உள்ள திருப்புல்லாணித் திருக்கோயில் கல்வெட்டு[52] ஒன்று இந்தப் பவித்திரமாணிக்கப்பட்டினம் எங்கு உள்ளது என்பதைச் சற்று விளக்கமாகச் சுட்டுகிறது. கி.பி.1251 முதல் 1271 வரை மதுரையை ஆண்ட கோனேரின்மை கொண்டான். திரிபுவனச் சக்கரவர்த்தி முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியத்தேவன் பவித்திர மாணிக்கப்பட்டினத்தில் உள்ள சோகை சாமந்திப் பள்ளிக்கு இறையிலியாக மருதூர், ஆம்புத்தூர் என்ற கிராமங்களை வழங்கி உத்திரவிடுவதாகும். அந்தக் கல்வெட்டில் "கீழ்ச்செம்பி நாட்டுப் பவித்திர மாணிக்கப்பட்டின கீழ்பால்" ... என்ற வாசகம் பொறிக்கப்பட்டிருப்பதிலிருந்தும் திருபுல்லாணி கோவில் கீழ்ச்செம்பி நாட்டில் இருப்பதாலும் இன்றைய பெரியபட்டனம் அந்தக் கோவிலிருந்து கிழக்கே நான்கு மைல் தொலைவில் இருப்பதாலும் பவித்திர மாணிக்கப்பட்டினம் திருப்புல்லாணிக்கு வெகு அண்மையில் அமைந்து இருத்தல் வேண்டும் என்பதும் உறுதியாகிறது.

குறிப்பாக மார்க்கோபோலோ[53] விவரிக்கின்ற முத்துக்குளித்தல், மன்னார் வளைகுடாவில் இலங்கைக் கரையில் அல்லாமல் பாண்டிநாட்டுக் கரையில் பத்தளிப்பகுதியில் தான் நடைபெற்றது என்பதற்கு முக்கியமான ஆதாரம் மார்க்கோபோலோவிற்கு முந்தைய நூற்றாண்டில் வந்த ஆல்பருணி என்பவரது பயணக்குறிப்புக்களேயாகும். மார்க்கோபோலோவின் காலத்திலேயே பாண்டிய நாட்டிற்கு வருகை தந்த வஸ்ஸாப்[54] என்ற பாரசீக வரலாற்றாசிரியர், "இந்தத் துறைகளில் வந்து இறங்கிய அரபிக் குதிரை வணிகத்தை மேற்பார்வையிடத் தனியாக அமைப்பு ஒன்று சுல்தான் ஜாக்கியத்தின் தலைமையில் இயங்கியதாக வரைந்துள்ளனர்." கி.பி. 1318இல் தென்னாட்டில் படையெடுத்து வந்த டில்லி சுல்தான் தளபதி குஸ்ருகான் பத்தன் நகரில் இருந்த அரபிச்செல்வர் சுல்தான் சபராஜீதீனைக் கைது செய்தும் அவரது உடமைகளைக் கொள்ளையிட்டு அவ்வரையும் கொன்றதாகத் தெரியவருகிறது.[55] மேலும் அந்தப் பெரும் வணிகரது பேரழகியான மகளைத் திருமணம் செய்து வைக்குமாறு கட்டாயப்படுத்தியதாகவும் அதனால் மனமுடைந்த அந்தச் செல்வர் நஞ்சினை உண்டு தற்கொலை செய்து கொண்டதாகவும் கவிதையாத்துள்ளார் உருதுக்கவிஞர் இஷாமி.[56]

இதே பத்தனை பற்றி கி.பி 1344-ல் உலகப்பணி கிஷன்பதூதா, மதுரை மன்னன் சுல்தான் அஹ்ஷன் ஷாவின் அதிதியாக மூன்று மாதங்கள் ''பத்தனில்'' தங்கியிருந்ததாகவும் அங்கிருந்து ஏமன் நாட்டுக்குப் புறப்பட்ட கப்பல் ஒன்றில் கொல்லம் சென்றதாகப் பயணக் குறிப்புக்களில் வரைந்துள்ளனர்.[57] பட்டினம் என்ற தமிழ்ச்சொல்லுக்குரிய இந்தப் பத்தன் அவருடைய குறிப்புகளில் இருந்து மதுரையிலிருந்து எளிதாகச் சென்றடையக் கூடிய தொலைவிலிருந்து இருப்பதால் இந்தத் துறைமுகம் சோழ-நாட்டிக் கடற்கரையில் உள்ளது அன்று என்பதை உறுதிப்படுத்து-கிறது. அப்படியானால் அப்பொழுது யாவரும் அறிந்த தேவி பட்டினமாக (மாலிபத்தன்) அல்லது இராமேசுவர பட்டினமாக இந்தப் பத்தன் இருக்கலாமோ என்ற ஐயத்திற்கு இல்லை என்ற விடைதான் உள்ளது. இவனது பதூதா வருணனைசெய்யும் அளவிற்கு அந்தத் துறைமுகங்கள் பதினான்காம் நூற்றாண்டில் சிறப்புற்று விளங்கியதற்கான செய்திகள் எதுவும் இல்லை. இந்தக் காரணத்தினால்தான் இன்றைய கீழக்கரையும் அன்றைய பத்தன் இல்லையென உறுதியாகச் சொல்ல முடிகிறது. மேலும் மார்க்கோபோலின் பயணக் குறிப்புக்களைத் பதித்துள்ள ஆசிரியர் டயூல், பத்தன் இராமநாதபுரத்திற்கு மிக அண்மையில் இருந்து இருக்க வேண்டுமென்ற முடிவிற்கு வந்துள்ளார்.

ஆசிரியர் எஸ். கிருஷ்ணசாமி ஐயங்கார், வஸ்ஸஸ். இஷன்-பதூதா ஆகியோர்களது குறிப்புகளைத் தொடர்புபடுத்திப் படித்தால் பத்தன் மதுரை அரசின் துறைமுகம் என்பதும், மதுரைச் சீமைக்குள் நுழைபவர்களோ அங்கிருந்து வெளியேறுபவர்களோ இந்தத் துறைமுகத்தின் வழியாகத்தான் செல்லவேண்டும் என்பதும் புலனாகும். மார்க்கோபோலோவும் இங்குத்தான் கரையிறங்கி இருக்க வேண்டும் என்பதில் ஐயமில்லை என்று அறுதியிட்டுக் கூறி யுள்ளார்.[58] மேலும் அவர் பத்தன் இன்றைய தேவாளைமரக்-காயர் பட்டினம், பெரியபட்டணம் என்ற ஊர்களில் ஒன்றாக இருக்கவேண்டும் என 1928இல் ஊகித்துள்ளார். அவரது ஊகம் மார்க்கோபோலோ இபுன்பதூதா ஆகியோர்களின் பயணக்-குறிப்புக்களை மட்டும் சான்றாகக் கொண்டது. அவைகளுடன் பிற உண்மைகளையும் அகழ்வராய்வுத் தடையங்களையும் ஒருங்-கிணைந்து சிந்திக்கும் பொழுதுதான் பெரியபட்டணத்தின் தொன்மையும் வரலாற்றுத் தொடர்பும் உறுதிப்படுகிறது.

இன்றைய பெரியபட்டணம் எனும் கிராமம் மன்னார் வளைகுடாவில் கடற்கரையிலிருந்து ஒருகல் தொலைவில் உள்ளது. கடற்கரையையும் கிராமத்தையும் தென்பகுதியில் கப்பலாறு இணைக்கிறது. மழைக்காலங்களில் மட்டும் கடலுடன் இணைந்து காட்சியளிக்கிறது. பத்தனின் பெருமைக்கு நிலைக்களனாக இருந்த இந்தப்பகுதியைக் கற்பனையில்தான் சித்திரித்துப் பார்க்க வேண்டியதாக இருக்கிறது. பட்டினப்பாலையைப் படித்துவிட்டுப் பூம்புகாரை நினைவுகொள்வதுபோல உலகப்பயணி இபுன்பதூ-தாவின் குறிப்புக்களைப் படித்துவிட்டுக் கப்பலாறைப் பற்றிய கற்பனையில் ஈடுபடலாம்.

''கடற்கரையில் அமைந்துள்ள அழகிய பெரியநகரம். புகழத்தக்க துறைமுகம். மரத்திலான அரங்கம் ஒன்று அமைக்கப்-பட்டிருந்தது உறுதியான தூண்களினால் தாங்கிநின்ற இந்த அரங்கத்திற்குச் செல்வதற்கு மூடுவழி ஒன்று இருந்தது. அதுவும் மரத்திலானது. எதிரி நுழைந்தால் துறைமுகத்தில் உள்ள கப்பல்கள் அனைத்தும் இந்த அரங்கத்துடன் பிணைக்கப்பட்டு விடும். வில்லேந்திய வீரர்கள் இந்த அரங்கத்தின்மேல் நின்று தாக்குதலுக்குத் தயாராகி விடுவர். இதனால் எதிரியினால் இந்த வீரர்களைத் தாக்கி எவ்விதக்காயமும் ஏற்படுத்துவதற்கு வாய்ப்பே இல்லை. ஏமன் நாட்டுக்குச் செல்லக்கூடிய எட்டுக்கப்பல்களும் நின்றுகொண்டிருந்தன.''

அடுத்து இந்த ஊரில் உள்ள கல்லாலான பள்ளி ஒன்று உள்ளது. இதனைப் பற்றி இபின்பதூதா குறிப்பிடுகிறார். இந்த ஊரில் அழகிய தொழுகைப்பள்ளி ஒன்று உள்ளது. முழுவதும் கல்லாலானது. இங்கே பூஜ்யர், ஷேக்முகம்மது மஜ்தூபி என்ற புனிதரைச் சந்தித்தேன். அவருடன் முப்பது இறையடியார்களும் இருந்தனர். அவர்களில் மோனநிலையில் இருந்த ஒருவர் தன்னுடன் சிங்கம் ஒன்றை வைத்திருந்தார். மற்றொருவர் புள்ளிமான் ஒன்றும் வைத்திருந்தார். இவை இரண்டும் ஒரே இடத்திலிருந்தன. எவ்வித முரண்பாடும் இல்லாமல் தற்பொழுது முகப்பு மட்டும் மாற்றம் பெற்று அப்படியே இருக்கிறது இந்தப் பள்ளிவாசல்.[59]

இந்தப் பள்ளிவாசலில் முகப்பில் இரண்டு கபிறுஸ்தானில் களும் (புதைகுழிகள்) உள்ளன. இவைகளில் தலைப்புக் கற்களில்

(ப்ஸான்) ஒன்றில் கடையும், பிறிதில் நான்கு இதழ்கள் கொண்ட மலரின் வடிவம் பொறிக்கப்பட்டு அரபி எழுத்துக்களுடன் காணப்படுகின்றன. கி.பி.1921இல் இவைகளை ஆய்ந்து அரபி ஆராய்ச்சியாளர் ஒருவர் திருக்குரானின் திருவசனங்கள் 56:26ல் ஒரு பெண்ணின் தியாகத்தைக் குறிப்பிடுவதாகவும் வரைந்துள்ளார்.[60]

அடுத்து இந்தப்பள்ளியிலிருந்து கடற்கரை செல்லும் வழியில் புஞ்சை ஒன்றில் நீண்ட கற்தூண்கள் பூமியில் புதையுண்டு இருக்கின்றன. இந்த இடத்தைக் கோட்டைவாசல் என இந்த ஊர் மக்கள் வழங்குகின்ற கற்கள் ஆய்தப்புள்ளிபோல நடப்பட்டு உள்ளன. மார்க்கோபோலோ பற்றிய சீனநாட்டு வரலாற்றுக் குறிப்பில், மார்க்கோபோலோ கரையிறங்கிய பட்டினத்தின் ஒரு ஸ்தூபி நாட்டப்பட்டு இருந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.[61] மற்றும் கி.பி.1340இல் ஹொய்சாள மன்னனான வீரபல்லான தேவர் மதுரை சுல்தான்களை வெற்றிகொண்ட நினைவாகச் சேதுமூலத்தில் வெற்றித்தூண் ஒன்றை எழுப்பியதாக வரலாற்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.[62] இங்கிருந்து சேதுஅணை இரண்டு கல் தொலைவிலுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இந்த இரண்டு வெற்றிகளின் நினைவாக இந்தக் கல்தூண்கள் இருக்கலாம் என்பதற்கு வாய்ப்பு இருக்கிறது முழுமையான அகழ்வு ஒன்றினால் தான் இதனை மெய்ப்பிக்கமுடியும். மேலும் இந்தக் கிராமத்தின் தெற்கு, தென்மேற்குப் பகுதிகள் மேடாக உள்ளன. கிராமத்திற்கும், கிராமத்தையொட்டியும் அறுபதுக்கு மேற்பட்ட குளங்கள் உள்ளன. வேறு எந்தக் கிராமத்தில் இந்த அளவில் குளங்கள் இருப்பதில்லை. காலப்போக்கில் மண்மேடிட்டு நிலைகுலைந்த பேரூரின் தாழ்வான பகுதிகள் இங்ஙனம் குளங்களாக அமைந்து விட்டன போலும். பொதுவாக இந்த ஊரில் பெரும்பாலான இடங்களின் தோப்பு, கிணறு அமைப்பதற்கு நிலத்தைத் தோண்டுப்பொழுது நல்ல கற்களிலான கட்டுமானம் தென்படுகிறது. அவைகளை உடைத்துக் கற்களை வீடுகள் கட்டுவதற்கு இன்றளவும் இந்த ஊர்மக்கள் பயன்படுத்தி வருகின்றனர். அத்துடன் அப்பொழுதைக்கப் பொழுது பழங்கால நாணயங்களும் கிடைக்கின்றன.

கடந்த பத்தாண்டுகளுக்கு மேலாக இந்தக் கிராமத்தில் அகழ்ந்து எடுக்கப்பட்ட பலவகையான நாணயங்களைப் பற்றிய விவரங்கள் ஈண்டுக்கொடுக்கப்பட்டுள்ளன. அந்த நாணயங்களை

வகைப்படுத்தி ஆய்வு செய்வதில் மிகவும் பழமையான சங்ககாலச் செப்பு நாணயம் ஒன்றும், எந்த ஆட்சியாளர்களால் வழங்கப் பட்டது என இனம் கண்டுகொள்ள இயலாத மூன்று சிறிய தங்கக் காசுகளும் கிடைத்துள்ளன. சங்ககாலச் செப்புக்காசு நீண்ட சதுர வடிவில் ஒருபுறம் மட்டும் யானை இலச்சினையுளனும் திரிசூலத்துடனும் சந்திரனுடனும் காணப்படுகிறது.[63] தங்கக் காசுகளில் ஒருபுறம் மூன்று வரிசைகளிம் பதினொரு புள்ளிகளைத் தாங்கிய இரண்டு வளைந்த கோடுகளும் மறுபுறத்தில் ஒன்பது புள்ளிகள் தொகுதியாகவும் அதற்குமேல் ஆரம்போன்ற கோடும் அதற்குள்ளாக அழுத்தமான தனிப்புள்ளியொன்று அதனையடுத்த வளைகோடும் புள்ளியொன்றுமாகக் காட்சியளிக்கிறது.

பல்லவர் காசு :

இங்குக் கிடைத்துள்ள ஒரே ஒரு காசு பல்லவர் ஆட்சியைக் குறிப்பது ஒருபுறம் எழுத்தும், சந்திரனும் குறிக்கப்பட்டவை.

சோழர்காலக் காசு :

இங்குக் கிடைத்துள்ள காசுகளையும் செப்புக்காசுகள். இவைகள் பெரும்பாலும் நின்றநிலையில் மனிதன் ஒருவன் நிற்பது போன்றும், அருகில் திரிசூலம், தண்டம் ஆகியவை ஒரு புறமும் மறுபுறத்தில் அர்த்த நிலையிலிள்ள மனிதனது உருவமும் உடையதாக இருக்கின்றன. இந்தக் காசுகளைக் ''காலக்காசு'' என இங்குள்ள மக்கள் சொல்லுகின்றனர். பன்னிரெண்டாம் நூற்றாண்டில் பாண்டிய நாட்டைப் பராமரித்த இலங்கைத் தண்டநாயகன் கொற்கை அது. காலையிலிருந்து வெளியிட்ட ஈழக்காசுகள்தாம் அவை. மீண்டும் பாண்டியநாடு, சோழர் பிடியில் வந்தபொழுது இதே காசுகளைச் சிறுமாற்றங்களுடன் வெளிட்ட தாகத் தெரிகிறது. ''ராஜராஜ'' ''ஸ்ரீ'' என்ற சொற்கள் தேவ நாகரி லிபியுடன் காணப்படுகின்றன. அவைகளில் ராஜராஜ சோழனது மீன்களும் புலியும் ஒருசேர பொறிக்கப்பட்ட செப்புக் காசு ஒன்று கிடைத்துள்ளது.

பாண்டியர்காலக் காசுகள் ;

இந்தக் காசுகன் அனைத்தும் பன்னிரெண்டாம், பதிமூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்தவைகள். சோழர்களது காசுகளைவிடச்

சிறியதாகவும் நிறையில் குறைவாகவும் உள்ளன. இவைகளில் சுந்தரபாண்டியனது செப்புக்காசுகள் நிறைய உள்ளன. அவனது "எல்லாந்ததலையானான" "பூதல்" "கச்சிவழங்கிய பெருமாள்" "சுப" என்ற தொடர்களும் வெளியிடப்பட்டவை. இவைகளைத் தவிர, பிற்காலப் பாண்டியர்களது "புவனேகவீரன்" "சமர கோலாகலன்" ஆகியோர்களது காசுகளும் இங்கே கிடைத்துள்ளன. இவைகள் அனைத்திலும் இரண்டு மீன்களும் அமர்ந்த நிலையிலுள்ள மனிதஉருவம் பொறிக்கப்பட்டுள்ளன. சில காசுகளில் மட்டும் சிறுசிறு மாற்றங்கள் உள்ளன.

மதுரைச் சுல்தானிகள் :

டில்லிப்பேரரசிலிருந்து தன்னுரிமை பெற்று 1333முதல் 1378வரை மதுரையைக் கோநகராகக்கொண்டு மதுரை இராமநாதபுரம் சீமைகளையும், தஞ்சை, திருச்சி மாவட்டப்பகுதிகளையும் ஆண்ட மதுரைச் சுல்தான்கள் அறுவரில் மூவருடைய காசுகள் கிடைத்துள்ளன. முகம்மது உறஹன்ஷா, சுல்தான் மூபாரக்ஷா, பகத்தலை அஹமது ஆகியோர் வெளியிட்டவை. இவைதவிர இவர்களது காலத்தில் டில்லியில் ஆட்சிபுரிந்த முகம்மதுபின் துக்ளக்கின் வெள்ளிக்காசு ஒன்றும், செப்புக்காசுகளும் பதினாறாம் நூற்றாண்டைச் சேர்ந்த அக்பர் மாமன்னரின் சமசதுர வடிவத்திலான வெள்ளிக்காசு ஒன்றும் (வேலைப்பாடு மிக்கவை) கிடைத்துள்ளன.

பிற மன்னர் காசுகள் :

இந்தக் காசுகளைத் தவிர பிற்கால விஜயநகர மன்னர்கள் தளவாய்களது 16வது 17வது நூற்றாண்டைச் சேர்ந்தவையும், வடிவில் மிகவும் சிறியவையுமான செப்புக்காசுகள் பலவும் இங்கு அகழ்ந்து எடுக்கப்பட்டு இருக்கின்றன இவைகளில் கிருஷ்ணன், அனுமன் ஆகிய கடவுள் வடிவங்களும், ஸ்ரீசக்கரம்போன்ற பிற சின்னங்களும் உள்ளன. மற்றும் இந்தப் பகுதியை ஆண்ட சேதுமன்னர்களது செப்புக்காசுகளும் கிடைத்துள்ளன. இவைகளில் ஒருபுறம் "சேதுபதி" என்ற எழுத்துக்களும், மறுபுறத்தில் கணபதியின் வடிவம் பொறிக்கப்பட்டுள்ளன. தொடர்ந்து இந்தப் பகுதியில் 16வது நூற்றாண்டின் இறுதியில் வணிகச்செல்வாக்-

குடன் விளங்கிய டச்சுக்காரர்கள் தங்கள் அரசு இலச்சினையுடன் கி.பி.1704, 1750, 1760 வருடங்களில் வெளியிடப்பட்ட செப்புக்காசுகளும் ஆங்கிலேய கிழக்கிந்தியக் கம்பெனியில் தராசுச் சின்னத்துடன் அரபி, ஆங்கிலச் சொற்களுடன் வெளியிட்ட செப்புக் காசுகள் சிலவும் அகழ்ந்து எடுக்கப்பட்டு இருக்கின்றன. மேலும் இந்தச் சிற்றூரைக் கடந்துவிட்ட பல நூற்றாண்டுகளுக்கு முன்னர்த் தொடர்புபடுத்தி நினைபடுத்தும் ராஜபாட்டையும் அதில் அமைந்துள்ள பழமையான வட்டக்கிணறும் உள்ளன. இந்தக் கிணறு "சோழவளநாட்டுப் புலியூர்க் கூற்றத்தைச் சேர்ந்த சிறுத்தொண்டன்" என்பவரால் அமைக்கப்பட்ட தர்மம் என்பதை அந்தக் கிணற்றில் உட்புறத்திலுள்ள சிதைந்த கல்வெட்டு சுட்டுகிறது. கல்வெட்டில் கையாளப்பட்டுள்ள எழுத்துக்களின் வடிவத்திலிருந்து இந்தக் கல்வெட்டுக் கிணறு பன்னிரெண்டாவது நூற்றாண்டைச் சேர்ந்தது என்பதை அறுதியிட முடிகிறது. வலுவிழந்த பாண்டியநாடு பத்து, பதினொன்று, பன்னிரெண்டாவது நூற்றாண்டுகளில் சோழர்களது நேரடியான ஆட்சியிலும், படிப்பிலும் இருந்துவந்தகாலை, சோழர்நாட்டுப் பிரதிநிதியான சிறுத்தொண்டன் என்பவர் இந்தக் கிணற்றையும், இந்தக் கிணற்றை ஒட்டிய இடத்திலிருந்து அழிந்துவிட்ட அன்னசத்திரத்தையும் அமைத்திருந்தார் எனக்கொள்வது பொருத்தமுடையதாக இருக்கிறது, இதனைத் தொடர்ந்து கோவில் ஒன்று அமைத்திருந்து, அழிந்துவிட்டதாகவும் அதனை ஈஸ்வரன் கோவில் என இன்றும் மக்களால் வழங்கப்பட்டு வருகிறது.

இங்ஙனம் தொன்மையைத் தொடர்புபடுத்திச் சொல்லும் நூல்களுக்குச் சான்றாக நாணயங்களும் கல்வெட்டு போன்ற தடயங்களும் மன்னார்வளைகுடாவிலுள்ள தொண்டி, தேவிப்பட்டினம், வேதாளை, மரைக்காயர்பட்டினம். கீழக்கரை ஆகிய பழம்பகுதிகளில் இதுவரை அகழ்ந்து எடுக்கப்படவில்லை. ஆதலின் மேலே சுட்டிக்காட்டப்பட்ட சான்றுகளைப் பொறுத்தமுடைய சாரியான சான்றுகளாக்க என்னும்போது பன்னிரெண்டாம் நூற்றாண்டில் "பராக்கிரமபட்டினமாகவும்" "பவித்திரமாணிக்கப் பட்டிணமாகவும்" 13, 14ஆம் நூற்றாண்டுகளில் "பத்தன்", "பத்னி", எனவும் வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடப்பட்டுள்ள பெருநகர். இன்றைய "பெரியபட்டணம்" என்றும் உறுதியான முடிவிற்கு வரலாம்.

முத்துப்பேட்டை :

கடலில் சென்று முத்துக் குளித்தும், மீன்பிடித்தல், வாணிபம் செய்தும் மக்கள் வாழ்ந்துவந்த இவ்விடத்திற்கு வாணிபத்தின் பொருட்டு இப்பெயர் வரலாயிற்று. இங்குள்ள மக்கள் முதன் முதலில் பெரியபட்டிணத்திற்குச் சிறிது தூரத்தில் கிழக்கில் கரையோரத்தில் அமைந்திருந்த "காரையார்குளம்" என்ற பழைய கிராமத்திலிருந்து வந்தவர்கள். இவர்கள் இடம் பெயர்ந்ததற்கு இங்குள்ள யாகுலசாமி என்ற முதுமையான ஆசிரியர், ஒரு வரலாற்றுக் குறிப்பு (கைப்பிரதி) எழுதி வைத்துள்ளார்.

ஊரின் வடகிழக்கின் பகுதியில் டச்சுக்காரர்களால் அமைக்கப்பட்ட 'சர்வேஸ்வரன்' தேவாலயம் முத்துப்பேட்டை என்ற பகுதியிலுள்ளது. சேதுமன்னரது தன்னளயில் வளர்ந்த அந்தக் கோவில் இன்று நன்கு பராமரிக்கப்பட்டு வருகிறது. முந்தைய நாளங்காடியாக (முத்து விற்பனைக்குப் பெயர்போன இடம்) விளங்கிய இந்தப் பகுதியில் இந்துக்களும், கிறித்தவர்களும் வாழ்ந்து வருகின்றனர். இக்கோவில் பற்றிச் செப்பேட்டுப் பிரதியொன்று உள்ளது (இச்செப்பேடு மதுரைப் பேராயரிடம் உள்ளது). அதில்,

"முத்துவிஜயரகுநாத சேதுபதி 1781இல் இக்கிறித்துவ ஆலயத்திற்கு முத்துப்பேட்டை, தெஞ்சியேந்தல் என்ற இரு கிராமங்களையுமே மானியமாக வழங்கினார்" என்றுள்ளது.

இக்கோவில் இந்த இடத்தில் உருவாகுவதற்கு மற்றொரு காரணமும் உண்டு. திரு. அந்தோணி பிரேரா என்ற போர்த்துக்கீசியர் இவ்வழியாகக் கடல்பயணம் மேற்கொண்டபோது கப்பல் உடைந்து உயிர்தப்பினார். இவ்விடத்தில் நினைவாக அன்று குடிசையிருந்த மாதாவைக் கோபுரத்தில் இருக்கச்செய்தார். இச்செய்தியைச் சென்னை "டேரைக்டிரி" யில் காணமுடியும். 1950இல் இங்கிருந்த பாதிரியார் என். எம். அந்தோணி ஒரு கையெழுத்துப் பிரதி எழுதிவைத்துள்ளார். அதில் "அந்தோணி பிரேரா என்பவரின் நினைவாக ஒவ்வொரு வருடமும் நவம்பர் 19 ஆம் நாள் சிறப்புப் பிரார்த்தனை நடத்தப்பட்டு வருகிறது" என்று குறிப்பிட்டுள்ளார். இங்கு முத்து வாணிபம் செய்து வந்துள்ளார்கள் என்பதையறிய ஒரு வாய்ப்பு உள்ளது. இன்றும்

வீடு கட்ட கிணறுவெட்டத் தோண்டும்போது உடைந்த முத்துச்-சிப்பிகளை நிரம்பக்காணலாம்.

அடுத்து மார்க்கோபோலோவின் குறிப்புகளில்தாம் இந்தத் தீவிலிருந்து மேற்குத் திசையில் அறுபது மைலுக்கு மேல் கடற் பயணம் செய்து மாபார் பாண்டிய நாட்டுக்கான மாநிலத்தை அமைத்ததாகவும், இதனை ஐந்த அரசர்கள் (சகோதரர்கள்) ஆட்சிபுரிந்து வந்தனர் என்றும். இந்த மாநிலம் உலகிலேயே மிகவும் சிறந்ததும் பெருமையுடையதும் ஆகும் எனவும் குறிப்பிடு-கிறார். மேலும் இந்த மாநிலத்தின் கடைசிப்பகுதியை ஐந்து சகோதரர்களில் ஒருவரான சுந்தரபாண்டியதேவர் ஆட்சி புரிந்தார். இந்த அரசரது ஆட்சியில் மிகவும் நேர்த்தியான பெரியமுத்துக்கள் கிடைக்கின்றன. இலங்கைத் தீவிற்கும் இந்த நாட்டிற்கும் இடையில் வளைகுடா ஒன்று உள்ளது. ஆழமற்ற அந்தக் குடாவில் 10 அல்லது 12 பாதப்ஸ் (கஜங்கள்) மேல் ஆழம் இல்லை முத்துக்குவிப்பவர்கள் பெரிதும், சிறிதுமான கப்பல்களில் இந்தக் குடாப்பகுதிக்குச் சென்று ஏப்பிரல் துவக்கத்திலிருந்து மே மாத முதற்பகுதிவரை முத்துக் குளிக்கின்றனர்.

முத்துக்குளிக்கச் செல்லும் படகுகள் முதலில் பத்தலாறு (Battalar) என்ற இடத்தில் ஒன்றுசேர்ந்து அங்கிருந்து 60 மைல் தொலைவுவரை கடலில் முத்துக் குளிக்கின்றன அன்றைய நாளில் முத்துக்குளித்தலைப் பற்றி மிகவும் விவரமாக மார்க்கோபோலோ குறித்துள்ளார். நமது ஆய்வுக்குரிய பொருளுக்கு வரும்போது மார்க்கோபோலோ கரையிறங்கிய இடம் பாண்டிமண்டலத்தின் (மாபாரில்) கீழ்க்கோடி என்பதும் இலங்கைக்கு மேற்கே அறுபதுமைல் தொலைவிலுள்ள வளைகுடாப் பகுதியென்பதும் பலனாகிறது. மார்க்கோபோலோ, காயலைப்பற்றியும் அதனை ஆட்சிபுரிந்த பாண்டிய சகோதரர்களின் மூத்தவரான குலசேகர பாண்டியனையும் தனது குறிப்புகளில் தனியாகக் குறிப்பிடுவதால் அவர் கரையிறங்கிய காயல்பட்டினம் பகுதியன்று என்பது தெளிவு.

மற்றும் அவர் குறிப்பிட்ட பத்தலாறு என்ற இடம் இன்றும் பெரிய பட்டணக் கிராமத்தின் தென்கிழக்கே கடற்கரையொட்டிய நீண்ட கழிப்பகுதியாக உள்ளது. அதனைக் ''கப்பலாறு'' என மக்கள் வழங்கி வருகின்றனர். அத்துடன் மன்னார்வளைகுடா-வில் பாம்பனுக்குத் தெற்கே பெரியபட்டணத்திற்கு வடகிழக்கு

வரை கடல் ஆழமற்று இருப்பதைக் காணலாம். இதற்கெல்லாம் மேலாக மன்னார்வளைகுடாவில் இலங்கைக் கரையிலும், பாண்டியநாட்டுக் கரையிலும், தான் பன்னூற்றாண்டுக்காலமாக முத்துக்குளித்தல் நடைபெற்றன என்பதற்குப் பல சான்றுகள் உள்ளன. குறிப்பாக மார்க்கோபோலோ விவரிக்கின்ற முத்துக்குளித்தல் மன்னார்வளைகுடாவில் இலங்கைக்கரையில் அல்லாமல் பாண்டியநாட்டுக் கரையில் 'பத்தளிம்' பகுதியில்தான் நடைபெற்றது என்பதற்கு முக்கியமான சான்று மார்க்கோபோலோவிற்கு முந்தைய நூற்றாண்டில் வந்த ஆல்பருணி என்பவரது பயணக் குறிப்புகள் எனலாம்.[64] இலங்கைக்கரையில் முத்துக் குளிப்பது இலாபகரமாக இல்லையாதலால் அங்கு முத்துக் குளித்தல் எடுக்கப்பட்டதாக அவர் குறித்துள்ளார். மார்க்கோபோலோவின் காலத்திற்குப் பிந்தைய நாளில் இந்த முத்துக் குளிப்பில் இராமேசுவரம், திருப்புல்லணை திருக்கோயில்களுக்கும் முதல் உரிமை இருந்து வந்துள்ள செய்திகள் பட்டயங்களும் உள்ளன. சேதுபதிகளுக்கும், நாயக்க மன்னர்களுக்கும், சேதுபதிகளுக்கும் டச்சுக்காரர்களுக்குமிடையில் நிறைவேறிய உடன்படிக்கைகள் இந்தப் பகுதியில் தொடர்ந்து முத்துக்குளிக்கப்பட்ட உண்மைகளை உணர்த்துகின்றன.[65]

இராமேஸ்வரத்தில் இன்னும் முத்துச்சுவடி என்ற பகுதியிலிருந்து வருவதும், பெரியபட்டணத்தின் ஒருபகுதியாக முத்துப்பேட்டை என்ற ஊர் இன்றளவும் இருந்து வருவதும், மன்னார்வளைகுடாவில் குளிக்கப்பட்ட முத்துக்களில் விற்பனை நிலையம் அங்கு அமைந்து இருந்ததை நினைவூட்டுகின்றன. கள்ளிக்கோட்டை துறைமுகத்திலிருந்து மேல்நாட்டுகளுக்குக் கப்பலில் அனுப்பப்பட்ட பலவகையான பொருட்களில் பட்டியலில், "இராமேசுவரம் நன்முத்துக்கள்" இடம்பெற்றிருந்ததை ஆசிரியர் கொர் என்பவர் சுட்டிக் காட்டியுள்ளார்.[66]

இந்தக் கடற்கரை ஊர்களில் வாழும் முகம்மதிய முதியவர்கள் 'முத்து வாப்பர்' என்று (பாட்டனார் என்ற பொருளில்) செல்லமாக அழைத்து வருவதிலிருந்து இந்தப் பகுதி முகம்மதியர்கள் முத்து வணிகத்தில் ஈடுபட்டிருந்ததைச் சான்று பகர்கின்றன. தமிழகத்தில் வேறு எந்தப் பகுதியிலும் இல்லாத அளவு

இம்முத்துப்பேட்டையில் வாணிபம் நடைபெற்றதால் இவ்வூருக்கு இப்பெயர் பொருத்தமாய் அமைந்துள்ளது.

## முத்துப்பேட்டை நடுத்தெரு :

பண்டைக்காலத்து, கொற்கைமுதூரின் அருகே அக்கசாலையொன்று அமைக்கப்பெற்றது. நாணயம் அடிக்குமிடைமாகிய அக்கசாலையை உடைய ஊரும் அக்கசாலை என்ற பெயரைப்பெற்றது. இதைப்போலத் தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களில் பரக்கக் காணலாம். முத்துப்பேட்டை கிராமத்தின் ஒரு பகுதியாக நடுத்தெரு என்ற ஓர் உட்கிடைக்கிராமம் இருக்கிறது. தெருவின் பெயரே ஊரின் பெயராக வழங்குகிறது.

## கீழக்கரை :

'செத்தும் கொடுத்தான்' சீதக்காதி தோன்றி மறைந்த வாணிகச் சிறப்புடையது கீழக்கரை ஆகும். இவ்வூரின்கண் உள்ள நிலங்களைக் கருப்புமண் (Black soil) என்று கூறுகிறார்கள். வங்கக்கடலின் கிழக்குகரையில் இருப்பதால், கிழக்குக்கரை > கீழ்க் கரை > கீழக்கரை என்று மருவி வந்திருக்கக் கூடும். இதற்குக் குணகரை, கீழவணை என்று பல பெயர்களையும் சூட்டி வழங்கு கிறார்கள். மேலும் அரேபியர்கள் வாணிபத்தின் பொருட்டு இங்கு வந்ததால் இவர்கள் இந்த இடத்தை அரேபியச்சொல்லால் (''கீழக்கரை'' எனப்பொருள்படும்) ''கிர்கரா'' என்றே அழைத்தார்களாம்.

இங்குப் பள்ளிவாசல் மட்டுமின்றிச் சிவாலயம் சொக்கநாத சாமி கோயில்களும் உள்ளன. இச்சொக்கநாதசாமி கோவிலில் வரகுணபாண்டியன் கல்வெட்டு ஒன்றுள்ளது. 15, 16 ஆம் நூற்றாண்டில் 'நினைத்ததை முடித்த விநாயகன் என்ற கோவில் ஒன்று இங்குக் கட்டப்பட்டது. இக்கோவிலின் பெயரில் இவ்வூரில் ஒருபகுதி நினைத்ததை முடித்த விநாயகப்பட்டினம் என்று வழங்கி வருகிறது. இதைப் பற்றிய கல்வெட்டுக்கள் இரண்டு காணப்படுகின்றன.

16ஆம் நூற்றாண்டில் அச்சுதராயனும், தும்முச்சி நாயக்கரும் இக்கிராமத்திற்கு நன்கொடை கொடுத்திருப்பதற்கும் இதே

நூற்றாண்டில் இங்கு முத்துக்குளித்தது குறித்தும் இரு கல்வெட்டுக்கள் (அரசு எண் : 396, 397) காணப்படுகின்றன. 1759இல் சேதுபதியின் அனுமதியோடு டச்சுக்காரர்கள் வாணிபம் செய்ய இங்கு வந்தனர் எனவும், உடன்பாட்டை மீறிப் பல கட்டிடங்களைக் காட்டினாகள் என்பதையும் வரலாற்றுச் சான்றுகளோடு நாம் இன்னும் காணலாம். இதைத் தமிழக அரசு தொல்பொருள் ஆராய்ச்சி நிறுவன இயக்குநர் டாக்டர் நாகசாமி[67] அவர்கள் வெளியிட்ட நூல் ஒன்றின் மூலம் நன்கு அறிய வாய்ப்பு இருக்கிறது.

## இரகுநாதபுரம் :

முத்துவிஜய ரெகுநாத சேதுபதி இவ்வூரில் குடியிருந்தார். எனவே அவர் நினைவாக இவ்வூர் மக்கள் இதற்கு இரகுநாதபுரம் என்று பெயரிட்டனர். இச்சேதுபதி இங்குத்தான் முதன்முதலில் அரண்மனைக் கட்டிடத்தின் குடியிருப்பைத் தொடங்கியிருக்கக்கூடும் என்பதற்கு இங்குள்ள இடிபாடுடைய கோட்டைகளே சான்றாக உள்ளது. இவர் கட்டிய முத்துநாச்சியம்மன் கோவிலும் இங்குத்தான் இருந்தது; அது இடிபட்டுப் பாழடைந்த நிலையில் இருந்ததால், இவ்வூர் மக்கள் இடிபாடுகளை அகற்றி அதே இடத்தில் மிகப் புதுப்பொலிவுடன் கோவில் கட்டியுள்ளார்கள். இக்கோவிலிலுள்ள முத்து நாச்சியம்மன், சேதுபதி அவர்களின் பரம்பரைக்குக் குலதெய்வமாகும் என்று இங்குக் குறிப்பிடத்தக்கது.

இங்கிருந்து சேதுபதிகள் குடிபெயர்ந்து இராமநாதபுரம் சென்ற போது இக்கோவிலின் பிடிமண்ணையும் உடன்எடுத்துச் சென்று அரண்மனையில் இன்றுள்ள 'இராசராசேசுவரி' கோவில் எடுத்தார்கள் என்று இவ்வூர் மக்கள் கருத்துத் தெரிவித்தார்கள்.

இக்கோவிலுக்குப் பின்புறத்திலுள்ள நிலங்களை உழுதபொழுது அங்குப் பழங்காலத்தில் பயன்படுத்திய ஆட்டுக்கல், உரல், கட்டிடத்தின் தளங்கள், அடித்தளம் முதலியன தென்பட்டன. இவைகள் எல்லாம் முற்காலத்தில் பணிபுரிந்த பார்ப்பனர்களுடைய குடியிருப்பும், மடப்பள்ளியுமாக இருக்கலாம் என்கிறார்கள். இந்தக் கற்களைத் தொட்டாலோ, எடுக்க முயற்சித்தாலோ அன்று இரவு அங்குள்ள கோட்டைமுனியின் தொந்தரவு உறுதி என்று நம்புகிறார்கள்.

மேலூர்:

இரகுநாதபுரத்தின் மேற்குப் பக்கத்தில் இவ்வூர் அமைந்திருப்பதால இவ்வூர் மேலூர் என்ற பெயரில் வழங்கப்படுகின்றது. அரசுப் பதிவேட்டில் மாறுபாடு தெரிவதற்காக மேலூர் என்று குறியிட்டிருப்பார்கள் எனக் கருத வேண்டியுள்ளது. இதைப் போலத் தமிழகத்தில் ஊரை ஒட்டிய மேலூர்கள், கீழ்ஊர்கள் எண்ணற்றவையாய் இருக்கின்றன.

கொம்பூதி:

திருப்புல்லாணி ஒன்றியத்திலிருந்து மேற்குத் திசையில் 8 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது இவ்வூர். பன்னெடுங்காலத்திற்கு முன்பிருந்தே இவ்வூரிலுள்ளவர்கள் அரசபரம்பரையினர்களுக்கு நன்னாள் குறித்துக் கொம்பூதுவார்கள். எனவே தொழில் அடிப்படையில் இவ்வூருக்கு இப்பெயர் அமைந்தது. இத்தொழிலைப் பெரும்பாலும் பள்ளர்கள் என்ற இனத்தவரே செய்துவந்தார்கள். இப்போது இக்கிராமத்தில் யாதவர்கள்தாம் அதிகம் வாழ்கிறார்கள். அன்றையப் பள்ளர்கள் 'வாங்கா' என்ற வளைந்த இசைக்கருவியினை வைத்து ஊதித் தம் தொழிலை நடத்தி வந்திருக்கிறார்கள். இவ்வாங்கா (கொம்பு) செம்பால் ஆனது. சேதுபதி காலத்தில் இவர்களின் அரும்பணி குறித்துப் பாராட்டி இவர்கள் வாழ்ந்த கிராமத்தையே (கொம்பூதி) தானமாகக் கொடுத்தார் என்பதற்குச் சான்றுள்ளது. சேதுபதி பட்டயம் 20இல் சேதுபதி ரகுநாததேவர் ராமநாத சமுத்திரம் அட்டாலைச் சொக்கநாதர் சுவாமி கோயிலுக்கும் தெய்வராயர் கட்டுவித்த மடத்திற்கும் கொடுத்த நிலதானத்தைப் பற்றிய குறிப்புள்ளது.[68] இதில் "இப்போது புனப்பரளை நாட்டில் கொத்தங்குளமாகிய ஏந்தல் கோவிலுள் பாதியும் தெய்வராயன் கட்டிவித்த மடத்தன்மத்துக்குப் பாதியுமாக ஹிரன்யோ தகதாரபூஜவமாக கட்டளையிட்ட படியினாலே பொன்னரியாவேந்தலுக்கும் கொம்பூதிக்கும் மேற்கு அருங்குளத்துவாய்க்குக்கீழைச்சீகன் குளத்துக்கும், சொக்கநாகயூரணிக்குப், கிழக்குப்பாத்திய சேகரநல்லூர் இருளப்பன் கோவிலுக்கும் முட்டுக்குளம் திருவாங்கிக்கும் தெற்கு இன்னாள் செல்லைக்குள்ளாகிய கொத்தளங்குளமாகிய கிராமமும், ஊர்வுமானியமாக அனுபவித்துக் கொள்ளுவராகவும், என்ற குறிப்பு

வருகிறது. இதனால் கொம்பூதி கிராமம் சேதுபதி காலத்திலேயே தோன்றியுள்ளது என்பதும் தொழில் அடிப்படையில் அச்கிராமம் இப்பெயர் பெற்றதும் இவ்வூர் மக்களுக்கு இக்கிராமம் ரகுநாத-சேதுபதியால் மான்யமாக வழங்கப்பட்டதும் இறுதியாக விளங்கு-கின்றன. (சேதுபதி செப்பேட்டு: 20, சகம் 1592 AD 1670).

களரி :

உத்திரகோசமங்கைக்குக் கிழக்கில் ஒரு மைல் தூரத்தில் இக்கிராமம் அமைந்துள்ளது. இவ்வூரைச் சுற்றியுள்ளவர்கள் இங்கு வந்து மாசித்திங்கள் சிவன்ராத்திரிக்குக் களரி (தெய்வ வழிபாடு) நடத்திவந்தார்கள், வருகிறார்கள். எனவே தெய்வ-வழிபாட்டுக்குரிய கேளிக்கை, போர்ப்பயிற்சி, வீரவிளையாட்டுக்கள் எல்லாம் இங்கு நிகழ்ந்தமையால் இவ்வூருக்குக் 'களரி' எனப்-பெயர் ஏற்பட்டது. மங்கலநாதனுக்குத் திருவிழா எடுக்கும் காலத்தில் இவ்வூருக்குக் கிழக்கே ஒரு மைல் தூரத்தில் அமைந்-துள்ள 'களரி' என்ற கிராமத்திற்கு வந்து, அங்குள்ள பொட்டலில் பலவகையான கேளிக்கைகள் வீரவிளையாட்டுக்கள் நிகழ்த்தி-விட்டுப் பின்னர், இறைவனை உத்தரகோசமங்கைக்குக் கொண்டு வருவார்களாம். இப்படி விழாக்கள் நடத்துவதற்கு உதவியாக 1608இல் மதுரைநாயக்கர் முத்துவீரப்பன், சில நிலங்களைக் கோவிலுக்கு மான்யமாக வழங்கியுள்ளார்.[௬௨]

களரி என்ற சொல்லுக்குத் தமிழ் அகராதியில் கேளிக்கை, விருந்து என்ற பொருளுண்டு. எனவே, இவ்வூரில் மக்கள் உடனிருந்து விருந்தினருடன் உண்டு களித்திருப்பதற்கும் ஏற்ப இப்பெயர் அமைந்தது பொருத்தமாகவும் உள்ளது. இங்குப் பாண்டியர் காலத்தில் போர்க்களத்திற்குரிய பயிற்சிகள் நடத்திய இடம் என்றும், வீர விளையாட்டுக்கள் கற்றுக்கொடுக்கப்பட்ட இடம் என்றும் பலர் பலவகையில் பொருள் கற்பித்தாலும், சான்றுகள் இடம் தரவில்லை. மங்கலநாதன் எழுந்தருளித் திருவிழாக் காணும் 'களரி' விழா எடுத்ததே ஏற்புடையதாகத் தோன்றுகிறது. அதற்கு ஏற்ப இன்றும் அக்கிராமத்தில் 'களரிப்பெட்டல்' என்ற இடம் காணப்படுகிறது.

**வெள்ளா மருச்சுக்கட்டி :**

முந்நாட்டிலும் வேறெந்நாட்டிலும், நன்னாடாகிய பாண்டிவள நாட்டிலே பாய்ந்தோடும் வையை என்ற தெய்வநதி ஒன்றுண்டு. அது என்றும் வற்றா இனிய நீரொழுக்குடையது. மேற்றிசை மலையில் தோன்றி, நாற்றிசை பரவிச்சென்று கீழ்த்திசைக் கடலிற் கலப்பது. வேகித்து வருவது ஆதலால் வேகவதி[70] என்று விளம்பு-வார்கள். மலைபடு பொருள்களை வாரிவந்து திரையாகிய கரங்-களால் இருமருங்கும் எடுத்தெறிவது அந்நதி. அந்நதியில் போக்-கினைத் தடுத்துக் கடலுக்குள் போகாமல், விளையும் நிலங்களுக்கு நீர்ப்பாசனம் செய்யும் பொருட்டு மறித்ததால் இவ்விடத்திற்கு (வெள்ளம் மறித்தலில்) வெள்ளமருச்சுக்கட்டிக் கண்மாய் என்றும், இதைச்சுற்றியுள்ள குடியிருப்புக்கு வெள்ளாமருச்சுக்கட்டி என்றும் பெயர் வழங்குவதாயிற்று.

இரகுநாதச் சேதுபதி (1674-1710) வைகையை அடைந்த இரகுநாத சமுத்திரம் என்னும் பெரிய கண்மாய் ஏற்படுத்தினான் என்றும் சேதுபதி செப்பேடு 19ஆவது நமக்குச் சான்று தருகிறது. இதை வைத்துப் பார்க்கும் போது பின்னால் வந்த விசய இரகு-நாதச் சேதுபதி (1711 : 1725) என்பவரும் இப்படி வைகைப் போக்கைத் தடுத்துக் கண்மாயில் தேக்கி வேளாண்மைக்கு உதவி-யிருக்கின்றனர் என்ற செய்தியைச் சேதுபதி பட்டயம் 6, நமக்குச் சான்று தருவதோடு இவ்விடத்திற்கு இப்பெயர் பொருந்துவதாய் அமைகின்றது. இவ்வூரை இன்று பேச்சுவழக்கில் 'வெள்ளா' என்றே அழைக்கின்றார்கள்.

**இதன் சரம் :**

"இராமனாத சுவாமியைப் பூசை பண்ணுகிற பிறவாரு குருக்களுக்குத் தாம் பூசவமாகக் குருத்த ஆச்சாங்குடி. இந்த யெந்தலுக்கு ரெருனாங்கெல்கை கூறுவது கிற்பாற் கெல்கை மறுச்சுகட்டி கண்மாய்க் கரைக்கு மேற்கே தென்பாற்கெல்கை வளந்தமுடையார் தர்மத்துக்கு வடக்கு மேல்பாற்கெல்கை... அறுவமானிபமாக தாருதி பூறுவமாகக் கட்டளையிட்டோம் (சேதுபதி பட்டயம் : எண்.6).

காஞ்சிரங்குடி :

இராமநாதபுரத்திலிருந்து கீழக்கரை செல்லும் வழியில் உள்ளது இவ்வூர். திருப்புல்லாணியிடுருந்து தெற்கே 2 மைல் தொலைவில் அமைந்துள்ளது. இவ்வூர் தனிப்பட்ட ஒருவருக்குக் கொடையாக வழங்கப்பட்டதாகும். இதைச் சமீன் கிராமம் என்பர். இவ்வூர் பன்னெடுங்காலத்திற்கு முன்பு காஞ்சிர மரங்கள் அடர்ந்திருந்த காட்டுப்பகுதியாக இருந்ததாகவும் பின்னர், இங்கு மக்கள் குடியேறவும் இவ்விடத்திற்குக் காஞ்சிரங்குடி எனவும் பெயர் ஏற்பட்டது. இப்போது இக்கிராமத்தில் பெயரளவில் கூறிக்கொள்ள சான்றாகக் காஞ்சிர மரங்களே இல்லை.

சேதுபதி மன்னர்களின் ஆட்சிக்காலத்தில் சிறந்த சேவை செய்த அமைச்சர் வெள்ளையன் சேர்வைக்குக் கொடையாக இக்கிராமம் தரப்பட்டது. பின்னர் இக்கிராமத்தின் வருவாயைக் கொண்டு திருப்புல்லாணியில் ஒரு சத்திரமும் பள்ளியும் தொடங்கி அன்றுமுதல் இன்றுவரை நடத்தப்பட்டு வருகிறது. இதனைப் பற்றிய செய்திகளை நன்கு அறியவேண்டுமானால் இராமநாதபுர அரண்மனையிலுள்ள ஓலைச்சுவடிகளைப் படிக்கும்பொழுது நன்கு உணரலாம். இவ்வூரில் முகைதீன் ஆண்டவர் பள்ளிவாசலும், பக்கீர் ஒளிவுள்ளா தருகாவும் உள்ளன. இதோடு அய்யனார் கோவிலும் ஒன்றுள்ளது. இங்கு ஆவணியில் மஞ்சுவிரட்டுவிழா, ஆண்டுதோறும் மிகச்சிறப்பாக நடைபெற்று வருகிறது. காஞ்சிரங்குடி அருகில் ஒரு புதிய ஊர் தோன்றியது. அதற்குக் காஞ்சிரங்குடி புதுநகர் என்று பெயர் வைத்தார்கள்.

நல்லிருக்கை :

திருப்புல்லாணிக்கு மேற்கே 8 மைல் தொலைவில் இவ்வூர் அமைந்துள்ளது. இவ்வூரில் அருமையான நீர்நிலையுள்ளது. பொதுவாக, அக்காலத்தில் சமணர்கள் வைணவர்கள் தாங்கள் குடியிருக்கவோ, தவம் மேற்கொள்ளவோ, சிறந்த இடத்தைத் தேர்ந்தெடுக்கும் பொழுது முதலில் நல்லநீர் குடிக்கக் கிடைக்கக்-கூடிய இடத்தையே தேர்ந்தெடுப்பது வழக்கம். தண்ணீர் கிடைக்கும் இவ்விடத்தைக் குடியிருப்பதற்கு நல்ல இடம் என்று தேர்ந்தெடுத்து இருக்கை அமைத்துக்கொண்டால் இவ்வூர் நல்லிருக்கை எனப்பெயர் பெற்றது போலும். இங்குப் பெரும்

பாலும் வைணவ இனத்தைச் சார்ந்த யாதவர்கள் அன்று முதல் இன்றுவரை இருந்து வருகிறார்கள். இவ்வூரைத் தவிர இதைச் சுற்றியுள்ள வேறு எந்தக் கிராமத்திலும் நன்னீர் கிடைப்பதில்லை.

**மல்லல் :**

உத்தரகோசமங்கையின் அருகில் அமைந்துள்ள கிராமமே மல்லலாகும். இது வடக்கு மல்லல், தெற்கு மல்லல் என இருபிரிவு களாகவுள்ளது. இம்மல்லல் கிராமத்தின் அருகில் மிகப் பெரியதொரு கண்மாய் உள்ளது. இதே பெயரில் சிவகங்கை ஒன்றியத்திலும் ஓர் ஊர் உள்ளது. தமிழ் அகராதியில் மல்லல் என்றால் மிகுதி, செல்வம் என்ற பொருள் தரப்பட்டுள்ளது. இப்பொருளுக்கு ஏற்றவாறு இவ்வூர் மிக வளப்பம் மிகுந்த செல்வச்சிறப்புடன் திகழ்வதை நேரில் கண்டால் புலனாகும். பண்டைக்காலத்தில் பெருநகராய் இருந்த உத்தரகோசமங்கையின் கடைத்தெருவாய் இவ்வூர் விளங்கியது என்றும் கூறுகிறார்கள். இங்கு வேளாண்மைக்குரிய பெரியகண்மாய் உள்ளது. இதனாலேயே பல ஏக்கர் நிலங்கள் பயன் அடைகின்றன. வைகையாற்றின் நீர்ப்பெருக்கத்தை இங்குத்தான் முதலில் தேக்கி வைக்கிறார்கள், எனவே இவ்விடம் செல்வச்செழிப்புடன் விளங்குகிறது.

**குதக்கோட்டை :**

கோட்டை என்பது அரணைக் குறிப்பதற்குப் பெரும்பான்மையாக எங்கும் வழங்கும் சொல்லாகும். முற்காலத்தில் மண்ணால் அமைந்திருந்த கோட்டைகளும், பிற்காலத்தில் கல்லாற் கட்டப்பட்ட கோட்டைகளும், இன்றும் பல இடங்களிற் காணப்படுகின்றன. பாண்டிய நாட்டில் நிலக்கோட்டை என்பது ஓர் ஊரின் பெயர். அங்குப் பாளைக்காரன் ஒருவன் கட்டிய மட்கோட்டை இன்றும் உள்ளது. இதைப் போலவே முகவை மாவட்டத்தில் தாதனேந்தல், சின்னாண்டி வலசை என்ற இரு ஊர்களுக்கிடையே குதக்கோட்டை என்ற ஊர் அமைந்துள்ளது.

இவ்வூர்க்குக் குத்தக்கோட்டை என்ற பெயரும் உண்டு. இதுவே உண்மையான பெயராக இருக்கக்கூடும். பின்னர் மருவி குத்தக்கோட்டை குதக்கோட்டையாகி இருக்கவேண்டும். சேதுபதி பட்டயம்[71] எண் : 11இல் "விசயரெகுநாதச் சேதுபதியின் பட்டாபி-

ஷேகத்தின்போது திருப்புல்லணை என்ற கிராமத்தைத் தெய்வச்சிலைபெருமாள் நயினாருக்குச் சர்வமான்யமாக ரகுநாதச்சேதுபதி புத்திரன் ரகுநாதச் சேதுபதி தந்ததை இது குறிக்கிறது'' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் குத்தக்கோட்டை என்ற கிராமத்தையும் சேர்த்து விசயரெகுநாதச் சேதுபதி (1711-1725) வழங்குவதற்கு இப்பட்டயத்திலேயே சான்றுள்ளது. இவ்வூருக்கு இப்பெயர் வரக்காரணம் சேதுபதி மன்னர்களின் காலத்தில் குற்றம் செய்தவர்களையெல்லாம் இங்கு ஒரு கோட்டைகட்டி அங்கே அடைத்து வைத்திருப்பார்களாம். எனவே குற்றம் செய்தவர்கள் என்பது குத்தம் செய்தவர்களாகிப், பின் அவ்விடத்திற்குக் குத்தக் கோட்டை என்று பெயர் மொழித்திரிபால் மாறியிருக்க வேண்டும். இதைத்தவிர அங்கு இன்று வேறு கோட்டைகள் இருப்பதாகவும் தெரியவில்லை. பிறிதொரு காரணமும் கூறுவார்கள். குத்தக்கோட்டை என்ற குதக்கோட்டை பண்டைக்காலத்தில் நெல்குத்தும் கோட்டையாக, நெற்கோட்டையாக விளங்கிய இடம்என்கிறார்கள். நெல் குத்தும் கோட்டை குத்தக்கோட்டை என்றாகிப் பின் குதக்கோட்டை ஆகியிருக்கும் என்பர்.

### தெய்வச்சிலை நல்லூர் :

நால்வகை நிலங்களிலும் பொதுவாகத் தமிழ் மக்கள் குடியிருந்து வாழ்ந்தாரேனும், மருதநிலமே சிறப்பாகக் குடியிருப்புக்கு ஏற்றதாகக் கொள்ளப்பட்டது. ஆதலால், ஊர் என்னும் பெயர் மருதநிலக் குடியிருப்பைக் குறிக்கும்.[72] இவ்வூரும் மருதநில வளமிகுந்த கிராமமாகும். வெள்ளாமருச்சுக்கட்டி ஊராட்சியின் உட்கிடைப்பகுதியைச் சார்ந்தது.

தமிழ்நாட்டு ஊர்களை நல்லூர் என்றும் வகுத்துக் கூறுவார்கள். பெண்ணையாற்றங்கரையில்அமைந்தது திருவெண்ணெய் நல்லூர் அது சுந்தரமூர்த்தியைத் தடுத்தாட்கொண்ட ஈசன் கோவில் கொண்டுள்ள இடம்.[73] பொதுவாகத் தமிழ்நாட்டை ஆண்ட அரசர் பலர் தம் பெயர் விளங்குமாறு பல நல்லூர்களை உண்டாக்குகிறார்கள். அதுபோலவே செம்பிநாடு என்று வழங்கப்பெறும் இம்மண்ணில் வாழ்ந்த மன்னர்கள் திருப்புல்லாணி தெய்வத்தின் நினைவாகவோ, தொல்காப்பிய உரையாசிரியர் தெய்வச்சிலையார்

நினைவாகவோ இவ்வூருக்கு இப்பெயர் இட்டுள்ளனர். தொல்காப்பிய உரையாசிரியர் தெய்வச்சிலையார் திருப்புல்லாணித் திருத்தலத்திலேயே வாழ்ந்து வந்தார் என்பதற்குச் சான்றுகள் உள்ளன என்று ''திருப்புல்லாணி மான்மியம்'' என்னும் நூல் கூறுகிறது மேலும், இவர் இவ்வூரில் பிறந்தமையால் இவர் பெயராலேயே இவ்வூருக்குப் பெயர் ஏற்பட்டது, என்பர். இங்கு மிகச்சிறப்பு வாய்ந்த உத்திராட்ச மரம் ஒன்றுள்ளது. தொல்காப்பிய உரையாசிரியர் தெய்வச்சிலையார் வாழ்ந்த ஊர் ஆகையால் தொன்றுதொட்டு இக்கிராம மக்கள் 100 விழுக்காடு கல்வி அறிவுபெற்று விளங்குகிறார்கள். ஊரின் கிழக்குப்பகுதியில் ஐயனார் கோவிலுள்ள லிங்கம் பட்டை தீட்டப்பட்டிருந்தது. கொடி படர்ந்த மாதிரியும் உள்ளது. அவ்விடம் உள்ள மரம் சுமார் $1\frac{1}{2}$அடி சுற்றளவு உள்ளதாய், சுமார் 10 அடி உயரம் மட்டுமே உள்ளது. இம்மரம் பூக்கிறது; காய்க்கிறது. இம்மரம் பல தலைமுறையாய் இருந்து வருகிறது; பருப்பதுமில்லை; உயருவதுமில்லை.

கோனேரி :

ஏர்த்தொழிலாகிய பயிர்த்தொழிலுக்குப் பயன்படும் தண்ணீரைத் தேக்கி வைக்கும் நிலையம் ஏரி எனப்படும். இத்தகைய ஏரியின் மருங்கே எழுந்த ஊர்கள் தமிழ்நாட்டிலே பலவாகும். சில ஏரிகள் பண்டையரசர் பெயரால் இன்றும் அழைக்கப்படுகின்றன. சித்தூர் நாட்டில் பல்லவனேரி என்பது ஒரூர் பெயர்.[74] அது பல்லவ மன்னனால் ஆக்கப்பட்டதாகும். இதை ஒட்டியே பாண்டிய நாட்டிலும் முகவை மாவட்டத்தில் நல்லிருக்கை என்னும் ஊரில் உட்கிடையாக இருக்கும். கோனேரியும் (கோன் + ஏரி) அரசர் பெயரால் அமைந்து வழங்கப்படுகின்றது. சேதுமன்னர்கள் இங்குக் கோடைக்காலத்தைக் கழிக்க, குளிர்ந்த இவ்வேரிக் கரையில் அரண்மனையை அமைத்து, வாழ்ந்து வந்ததாக இக்கிராமத்தில் உள்ளவர்கள் கூறுகிறார்கள்.

இவர்கள் கட்டிய அரண்மனையில் அடிச்சுவடுகள் ஒன்றும் காணக்கிடைக்கவில்லை.

வித்தானூர் :

பண்டைக்காலத்தில் மன்னர்களைப் புகழ்ந்து பாடிப்பரிசில் பெற்றுவரும் புலவர்கள் வாழ்ந்த வரலாறு நாம் அறிவோம்.

அத்தகு வாழ்க்கை வாழ்ந்த வித்துவான்களும் இச்செம்பி நாட்டில் வாழ்ந்து வந்தார்கள் என்பதற்குச் சான்றுகள் பல உள.

சின்னக்கோவில் என்ற இடத்தில் பரிமேலழகர் வாழ்ந்து வந்தார் எனவும்,[75] திருப்புல்லாணியில் புல்லங்காடர் என்ற பதினெண்கீழ்க்கணக்கு நூலில் கைந்நிலை பாடியவர் வாழ்ந்து வந்தார் எனவும்,[76] தெய்வச்சிலை நல்லூர் என்ற ஊரில் தெய்வச்சிலையார் என்ற தொல்காப்பிய உரையாசிரியர் வாழ்ந்-ததும், பாண்டி மண்டலத்தைச் சேர்ந்த செம்பி நாட்டில் வீரநாராயண சதுர்வேதி மங்கலம் என்றும் ஊரில் திருச்செந்தூர்ப் பிள்ளைத்தமிழ் பாடிப் பெருமையுற்ற பகழிக்கூத்தர்[77] வாழ்ந்த-தாகவும் கூறப்படும் செய்திகளை வைத்துப் பார்க்கும் பொழுது வெள்ளா மரிச்சுக்கட்டி கிராமத்தின் உட்கிடையாக விளங்கும் வித்தானூரும், வித்துவான்கள் நிறைந்த ஊராகத் திகழ்ந்து இருந்தது எனக் கூறுவதில் பிழை ஒன்றுமில்லை. இவ்வூருக்கு முதலில் வழங்கிய பெயர் வித்வானூர். பின்னர்ப்பேச்சுவழக்கில் அது வித்தானூர் என வழங்கலாயிற்று. இப்பெயரே இன்னும் அரசுப்பதிவேட்டிலும் இருந்து வருகிறது. இவ்வூரில் பெரிய சிவன் கோயில் பாழ்பட்ட நிலையிலிருந்து காட்சி அளிக்கிறது. மேடான பகுதியில் பெரிய ஆவுடையுடன் கூடிய சிவலிங்கம் இருக்கிறது.

**கதைக்குளம் :**

ஏரிக்கு அடுத்தபடியாக வேளாண்மைக்கு உதவுவது குளம். குளம் எனும் வருமொழி அமைந்த ஊர்ப்பெயர்கள் தமிழ்நாடு முழுவதும் காணப்படும். இப்பகுதியில், குளங்களின் பெயர்கள், நிறம் பற்றியும், அளவு பற்றியும் அமைந்துள்ளன. ஆனால் இம்மாவட்டத்தில் கலைகளைப் பயிற்றுவிக்கும் ஊர்களுக்கும் இத்தகைய பெயர்கள் அமைந்து விளங்குகின்றன. முகவை மாவட்டத்தில் கலைஞர்கள் மிகுந்த ஆர்வத்துடன் கிராமியக் கலையை வளர்த்தும், பயின்றும் வாழ்ந்து வந்தார்கள். எனவே கலையின் அடிப்படையில் அவர்கள் வாழும் இடங்களும், பெயர்-களைப் பெறத்தொடங்கின. குறிப்பாக, கதைக்குளம் என்ற கிராமத்திற்கு இப்பெயர் வரக்காரணமே, இங்குள்ள மக்களில் பெரும்பாலோர் கிராமிய நடனநாட்டியக் கலைகளில் வல்லவர்களாக வாழ்ந்து வந்ததாலேயாகும் என்பர். இக்கிராமம் நேற்று

இன்று அன்று, பண்டைய பாண்டிய மன்னர் காலத்திலேயே தோன்றியிருக்க வேண்டும் என்று ஊகிப்பதில் தவறு ஒன்றுமில்லை. இவ்வூரில் பழமையான விஷ்ணுகோவில் ஒன்றுள்ளது. இன்று இவ்வூர், வெள்ளா மருச்சுக்கட்டியில் உட்கிடைக் கிராமமாக விளங்கி வருகிறது.

**கருக்காத்தி :**

நிலத்தின் நிறம் பற்றி எழுந்த ஊர்ப்பெயர்கள் பலவாகும். கருநிறம் வாய்ந்த தரை கரிசல் எனப்படும். பாண்டிய நாட்டில் சின்னக்கரிசல், குலையன் கரிசல் முதலிய ஊர்கள் உள்ளன. ஆனால் இவ்வூருக்கு இப்பெயர் கருமை என்ற பண்பின் பகுதி-யாகத் தொடங்கவில்லை. அதற்குப் பதிலாகப் பண்பட்ட பொரு-ளில் வழங்குகிறது. சாதாரணமாகக் கருக்காக இருக்கிறதா என்றால் பதமாக அல்லது கூர்மையாக இருக்கிறதா என்ற பொருளில் வழங்குவதை நாம் அறிவோம். பாண்டியன் இலவந்-திகைப் பள்ளித்துஞ்சிய நன்மாறன்[78] உத்தரகோச மங்கையைத் தலைநகராகக்கொண்டு ஆட்சி செய்த காலத்தில் தாம் இவ்வூரில் படைக்கலக் கருவிகள் எல்லாம் சாணை வைக்கப் பெற்றன எனக் கூறுவாரும் உளர். எனவே தொழிலின் அடிப்-படையில் இவ்வூர் இப்பெயரினைப் பெற்றுள்ளது. இக்கருக்காத்தி என்னும் கிராமம், மேலமடை ஊராட்சியின் கீழிருக்கும் ஓர் உட்கிடை கிராமமாகும்.

**பெரிய கன்னன்குடி :**

பெருக்கமும், சுருக்கமும் சில ஊர்ப்பெயர்களின் அடை-மொழியில் பொருந்தி நிற்கக் காணலாம். 'பெரிய' என்னும் முன்ஒட்டு கொண்டு தொடங்கும் ஊர்ப்பெயர்களின் வரிசையில் வைத்து எண்ணலாம். மேலும் இவ்வூர்ப் பெயரில் 'குடி' என்னும் பின் ஒட்டும் பெற்று வருகிறது. எனவே, இப்பெயரில் முன் ஒட்டும் பின் ஒட்டும் கொண்டு இலங்கும் சிறப்புடன் திகழ்கிறது இவ்வூர். எழுத்து வடிவிலும், பேச்சு வடிவிலும் கண்ணன் என்ற சொல் 'கன்னன்' என்று வழங்கப்பட்டுத் திரிந்துள்ளது. உண்மையான வடிவம் கண்ணன் குடியாகும். 'பெரிய' என்ற அடைமொழி பெற்று இருப்பதன் காரணம், இவ்வூர் அருகில் வேறு கண்ணன்குடி இருப்பதால் வேறுபாடு கருதி, வேறுபடுத்தி வழங்கப்பட்டது போலும்.

இதைப்போன்று தமிழ்நாட்டில் இன்றும் கண்ணன் பெயரால் (கண்ணனூர்) எழுந்த ஊர் திருச்சி நாட்டு முசிறி வட்டத்தில் உள்ளது. எனவே, வைணவத்தலம் சூழ்ந்த திருப்புல்லாணி வட்டாரத்தில் ''கண்ணன்'' பெயரால் ஊர் தோன்றி வழங்கியதில் வியப்பொன்றும் இல்லை. பாண்டியர்கள் வாழ்ந்த காலத்தில் இவ்வூர்ப்பகுதியில் இருந்தவர்கள் போர்க்கருவிகளைச் செய்து வாழ்க்கை நடத்தினார்கள் என்று கூறப்படுகிறது. இதற்குத் தக்க சான்று ஒன்றும் கிடைக்கவில்லை.

**வைகை :**

நிலவளமும், நீர்வளமும் உடைய தமிழ்நாட்டில் நினைப்பிற்கு எட்டாத காலந்தொட்டுப் பயிர்த்தொழில் பண்புற நடந்து வருகின்றது. பண்டைத்தமிழர், ஆற்றுநீர் பாயும் நிலப்பரப்பைப் பண்படுத்திப் பயிர் செய்து மருத நிலமாக்கினார்கள். அருமந்த பிள்ளைப் பாலூட்டி வளர்க்கும் தாய்போல் மருதநிலத்தை நீரூட்டி வளர்ப்பது நதியென்று கண்டு அதனைக் கொண்டாடினார்கள்.[79] காவிரியாற்றைப் பொன்னியாறென்று புகழ்ந்தார்கள். வைகையாற்றைப் 'பொய்யாக்குலக்கொடி'[80] என்று போற்றினார்கள். அப்படிப் போற்றப்பட்ட வைகைநதி, மலைபடு பொருள்களை வாரிவந்து, திரையாகிய கரங்களால் இருமங்கும் எடுத்தெறிந்து முகவை மாவட்டத்திலுள்ள திருபுல்லாணி ஒன்றியத்திற்குத் தெற்கே ஓடிக் கடலில் கலந்ததாகப் பழைய செய்தி கூறுகிறது. ஆனால் ஆற்றின் போக்கு மாறவே இன்று வைகைநதி வேறுதிசையில் மாறி ஓடத்தொடங்கியது.

பழைய போக்குள்ள பகுதியாகிய குளபதம் என்னும் சிற்றூரின் அருகில் 'வைகை' என்ற ஓர் உட்கிடைக்கிராமம் உள்ளது. இதை எண்ணிப் பார்க்கையில் முன்பு வைகை நதியின் கரையில் இருந்த இக்கிராமம், இந்நதியின் பெயரில் அழைக்கப்பட்டிருக்கலாம்.

## குறிப்புக்கள்

32. **'தூங்குஎயில்'** பற்றிய குறிப்பு :

தூங்கு எயில் எறிந்த தொடித்தோட் செம்பியன் : அகத்தியர் சொற்படி முதலித் காவிரிப்பூம்பட்டினத்தில் இந்திரவிழாச்

செய்வித்த சோழன். ஆகாயத்தில் செல்லவல்ல மூன்று கோட்டை-களை வாளாலெறிந்து அசுரரை வென்று சுவர்க்கத்தைக் காத்தவன்.

(மணிமேகலை 6,22).

— அபிதான சிந்தாமணி, பக்.885.

சோழன் ஒருவனால் அழிக்கப்பட்டதாகக் கூறப்படும் ஆகாயக்கோட்டை.

— 'பாட்டும் தொகையும்', ப.97.

33. S. Arunachalam, The History of the Pearl Fishery of the Tamil Coast, Historical Series No 8.

34. நாகப்பட்டினம்; ஐயங்கொண்ட சோழப்பட்டினம்; அதிவீர-ராமப்பட்டினம், தேவிபட்டினம், காயல்பட்டினம்; குலசேகரப்-பட்டினம் போல்வன.

35. அபிதான சிந்தாமணி, ப.421.

36. இளங்கோவடிகள், சிலப்பதிகாரம், இந்திரவிழா ஊர் எடுத்த காதை.

## பெரியபட்டணம்:

### காவிரிப்பூம்பட்டினம் குறித்த வரலாறு:

இது சோழநாட்டில் காவிரி கடலுடன் கலக்கும் சங்க-முகத்திலிருப்பது. இது துறைமுகப்பட்டினம். இது காவிரி-யாற்றின் சங்கமுகத்தில் உள்ள பட்டினமாதலால் இதற்கு இப்பெயர் வந்தது. இதைச் சோழர்களுக்கு முன் காகந்தன் எனும் அரசன் ஒருவன் ஆண்டிருந்தவன். அதனால் இதற்குக் காகந்தி என்று நடுப்பெயர். வங்காளத்தின் தலைநகராகிய சம்பாபதியினின்று வந்து குடியேறிய தமிழர் தங்கள் பழம்பதி மறவா திருத்தற்பொருட்டு இதற்கும் அப்பெயரிட்டனர். அதனால் இதற்குச் சம்பாபதி என ஒருபெயர் உண்டு. இதற்குப் புகார் என ஒரு பெயரும் உண்டு.

பெரிப்ளஸ் எனும் யாத்ரிகனும், டாலமி எனும் யாத்ரிகனும் முறையே கமாரம், கபேரிஸ் என்று கூறியது இந்நகரத்தையே. இதைக் கரிகாற் பெருவளத்தான் ஆண்டுவந்தான். இந்நகரைப் பற்றிச் சிலப்பு மேகலையில் காணலாம்.

— அபிதான சிந்தாமணி, ப. 421.

37. பிரான்மலை விசுவநாதர் கோயில் கல்வெட்டு.
38. திருப்பத்தூர்-திருத்தளீஸ்வரநாதர் திருக்கோயில் கல்வெட்டு.
39. குருவித்துறை சித்திரவத வல்லபபெருமாள்கோயில் கல்வெட்டு.
40. மேலது ,
41. மேலது ,
42. "மதுரைத்திருப்பணிமாலை" பூதலமடந்தை...எனத்தொடங்கும் மெய்க்கீர்த்தி.
43. Turnour and Wigesimha, Matrasama.
44. Travels of Mareopolo Bic. III Cha TV - XV Madras Journal of Literature and Science, P.37.
45. Elliot and Dowson, History of India as told by its Historians.
46. Dr.S. Krishnasamy Iyyangar, South India and Mohamadian Immadns, PP.3,4.
47. டி.வி. சதாசிவபண்டாரத்தார், பாண்டியன் வரலாறு, ப.106.
48. A.R. 157/1903 Maramangalam Inscriptions.
49. A.R. 27/1903 Thittaikudi.
50. அழகிய சிற்றம்பலக் கவிராயர் - ஒரு துறைக்கோவை.
51. 'நவமணிகள்', திருவாவிடுதுறை ஆதினவெளியீடு.
52. S.I.I.No.402/1903.
53. Marcopolo, Kulascordiner.

54. Elliot, History.

55. பரிஷ்தாரின் குறிப்புக்கள் தொகுதி-1, ப.126.
(N.Venkataramaniya, Early Muslim Expansion in South India).

56. Futuhus Sultan (Madras), PP. 369-70.

57. Voyages D'IBN Batouch, Vol.14.

58. Dr.S. Krishnsamy Iyyangar, South India and Her Mohamadian Immadans, P. 192.

59. C.Deframery and Dr.B.R. Sanquine, Voyages W'I NB Batouch Vol.IV.

60. Dr Harovitzo, Aligarh University, 1921.

61. D.Cordier, New light of Sir Marco polo, AD 114.

62. Dr.S. Krishnasamy Iyyangar, South India and Her Mohamadian Immadas, P.184.

63. Parameswar Lal Gupta, The Coins.

64. Edwar Sachaw, Alburan India.

65. Dr.S. Arunachalam, History of Pearl Fishery of Tamil Coast Treaties and Plates of Sethupathi.

66. Dr.Appadurai, Economic conditions of South India (in AD 1000 - 1500 AD).

67. *Kiliakkarai* :

The ancient name of the village was Kilakkarai Its antiquity could be traced to 15th century. A Ganesa temple named Ninaittadu Mudittadu Vinayaga, was in existence in 15th 16th century A.D. A suburb of the village was named Kodaimangalam alias Minaittadu Muditha Vinayaga Pattinam.

In a 16th century record, the Vijayanagar ruler Achyutaraya, and Tummuci Nayak made some gift. Another interesting

inscription from the village dated 1531 A.D. proves the place to be a pearl fishery. In that year, an agreement was reached specifying half panam was to be given on every 100 pearls sold in Kilakkarai and the proceeds to be utilized for worship and repairs to the temple of Ninaithadu Muditta Pillayar. The Sethupati ruler Thitumalai Sethupati made some gifts.

A copper plate grant was found in the village. The grant was given by Abhirama Ativirarama, the son of Ativirarama Pandya. At the request of one of his officers. Aiyankarappa, son of Peddppa and grandson of Nagama Nayaka two villages were clubbed together under a new name Pedda-nayakkan Samudram, and gifted to 69 Brahmanas.

"From the middle of 18th century this place was subjected to foreign invasion. In 1759 the Sethupathis permitted the Dutch to trade in their territory under a treaty. The Dutch built a fortress in violation of the treaty". Some remains of the buildings of the period still survive in the village.

The place is also famous for the Jamma Musjid, in which the tomb of Sithakkadi Marakkayar is located.

—R. Nagasamy and N.S. Ramaswami, Archeological Guide, P. 80.

68. சேதுபதி பட்டயம் : 20, வரி 19-28.

69. R. Nagasamy, Ramanathapuram (An Archaeological Guide), P. 133.

70. வேகவதி, கிருதமாலை, சிவகங்கை, சிவஞானநதி எனவும் பெயர்களுண்டு.

71. சேதுபதி பட்டயம் எண் : 11, வரி 24—42.

72. சங்க இலக்கியத்தில் ஊரன் என்ற சொல் மருதநிலத் தலைவனைக் குறிக்கும். "தண்டுறை ஊரனை"—ஐங்குறுநூறு 88.

73. ''பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூர்''-சுந்தரர் தேவாரம்.

74. North Aroct Manual Vol. II, P. 391.

75. திருப்புல்லாணி மான்மியம்.

76. திருப்புல்லாணித் தலவரலாறு, ப. 15.

77. பெருந்தொகை 1665.

78. புறநானூறு பாடல் 55, 56, 57.

79. சிலம்பு : கானல்வரி 27.

80. சிலம்பு : புறஞ்சேரியிறுத்த காதை (169-176).

குறிப்பு எண் 37 முதல் 66 முடியஉள்ள பகுதிகள் பதிப்பாசிரியர் எஸ். எம். கமால் அவர்களிடமிருந்து பெறப்பட்டவை.

"பெரியபட்டணம்", கட்டுரை, பக். 300-315, தமிழ்மாநில வரலாற்றுக் கருத்தரங்கு தொல்பொருள் ஆய்வுத்துறை, வரலாற்றுப்பேரவை, வெளியீடு மலர் எண் : 15, மே, 1979, அபிராமபுரம், சென்னை-18.

# 4. கருப்பொருளால் உருப்பெற்ற ஊர்ப்பெயர்கள்.

முன்னுரை :

நால்வகைப்பட்ட நிலங்கள் தமிழகத்தில் அமைந்திருக்கக் கண்டனர் பண்டைத்தமிழர். குறிஞ்சி நிலமாகிய மலையும், மலைசார்ந்த இடமும் ஒருவகை; காடும், காடு சார்ந்த முல்லை நிலமும் ஒருவகை; வயலும், வயல் சார்ந்த மருதநிலமும் பிறி- தொரு வகை; கடலும், கடல் சார்ந்த நெய்தல் நிலமும் இன்- னொருவகை. நால்வகை நிலங்களையுடைய காரணத்தால் தமிழகம் நானிலம் என்று வழங்கப்பெற்றது. இந்நிலங்களின், கருப்பொருள்களுள் ஊர்ப்பெயர்களும் இடம் பெறுகின்றன.

தமிழ் இலக்கிய மரபில், மலை என்னும் சொல் நிலம் ஓங்கி உயர்ந்து, பரந்து வரப்பினும் வளம் தரும் நிலையைக் குறிக்கும். மலையிற் குறைந்தது குன்று என்றும், குன்றிலும் குறைந்தது பாறை என்றும், அறை என்றும், கல் என்றும் பெயர் பெறும். மேலும் கிரி, அசலம், சைலம், அத்திரி, குறிஞ்சி என்ற பெயர்களைக் கொண்டும் குறிஞ்சி நிலத்தைச் சார்ந்த ஊர்கள் பெயர் பெற்றன.

பழங்காலத்தில் தமிழ்நாட்டில் மரஞ்செறிந்த காடுகள் மலிந்திருந்தன. முல்லை நிலத்திலுள்ள ஊர்ப்பெயர்கள், காடு, காவு, பொழில், தண்டலை, சோலை, தோப்பு, சுரம், வனம், ஆரண்யம், பாடி, பட்டி, மந்தை என்ற பின் ஒட்டு கொண்டு முடிந்தன. இன்றும், சில ஊர்ப்பெயர்கள் தனி மரங்களின் பெயராகக் காணப்படுகின்றன.

நிலவளமும், நீர்வளமும் உடைய தமிழகத்தில் நினைப்பிற்கு எட்டாத காலந்தொட்டுப் பயிர்த்தொழில் பண்புற நடந்து வருகின்றது. பண்டைத்தமிழர் தீம்புனல் பாயும் நிலப்பரப்பைப் பண்படுத்திப் பயிர் செய்து மருதநிலமாக்கினார்கள். இம்மருத- நிலத்திலுள்ள ஊர்கள் ஆற்றின் பெயரையும், துறையின் பெய- ரையும் கொண்டு இலங்குவதோடு, அரங்கம், துருத்தி, கடல், அணை, கால், ஓடை, மடை, ஏரி, பேரேரி, கோட்டகம், குளம்,

சமுத்திரம், ஏந்தல், தாங்கல், ஆவி, வாணி, மரு, இலஞ்சி, பொய்கை, ஊருணி, செறு, ஊற்று, கேணி, கிணறு, நிலம், புலம், பற்று, பண்ணை, பழமை, கழனி, வயல், விளை, நில அளவு குறிக்கும் சொற்கள், புன்செய், தோட்டம், ஊர் என்ற வரிசையில் உள்ள பெயர்களைக் கொண்டும் நின்று நிலவுகின்றன. இன்னும் சில பெயர்கள் விலங்குகள், பறவைகளின் பெயர்களைக் கொண்டும் முடிகின்றன.

நெய்தல் நிலமுடைய தமிழகம் நெடிய கடற்கரையுடையது. கடற்கரையில் அமைந்த சில ஊர்களின் தன்மையை அவற்றின் பெயர்களே காட்டும். கரை, துறை, பட்டினம், பாக்கம், களர், அளம், குப்பம் என்ற பின் ஒட்டில் அமைந்த கடற்கரை ஊர்கள் தமிழகத்தில் பல உள.

பெரும்பாலும் தமிழகத்திலுள்ள ஊர்ப்பெயர்கள்அனைத்தும் கருப்பொருள் அடிப்படையில் வைத்து எண்ணத்தக்கனவாக உள்ளன. பொதுவாக நோக்குமிடத்து இக்கருப்பொருள் அடிப்படையில், அதாவது, தெய்வம், தலைமக்கள், நிலமக்கள், பறவை, விலங்கு, ஊர், நீர், பூ, மரம், உணவு, பறை, யாழ், பண், தொழில் என்பனவற்றால் தாம் தமிழகத்திலுள்ள பெயர்கள் எல்லாம் அமையும்; அமைகின்றன என்று அறுதியிட்டு உறுதியாகக் கூறுமுடிகிறது. இதற்குரிய சான்றுகளைப் பேராசிரியர் ரா. பி. சேதுப்பிள்ளை அவர்களின் 'ஊரும் பேரும்' நூலில் கண்டு உய்த்து உணரலாம்.

இவ்வூராட்சி ஒன்றியத்திலுள்ள ஊர்களுக்குப் பின்ஒட்டுப்பெயர்களாகக் குளம், தோப்பு, காடு, தோட்டம், கூட்டம், ஏந்தல், குடி, குண்டு, ஓடை, மடை, வாடி, ஊருணி, சமுத்திரம், கரை என்ற முறையில் அமைந்துள்ளன. முதலில் 'குளம்' என்ற பின்ஒட்டில் அமைந்துள்ள ஊர்ப்பெயர்களைப் பற்றி ஆய்வோம்.

### 1. 'குளம்' என்ற பின் ஒட்டில் அமைந்தவை :

மருத நிலத்திற்குரியது குளம். ஏரிக்கு அடுத்தபடியாக வேளாண்மைக்கு உதவுவது குளம். ''குளம்'' என்னும் முடிவுடைய ஊர்ப்பெயர்கள் தமிழ்நாடு முழுவதும் காணப்படும். குளங்கள் நிறம் பற்றியும், அளவுபற்றியும் பல பெயர்களைப்

பெற்று வழங்கும். "லாந்தை" என்ற ஊராட்சியிலுள்ள கருங்குளமும், வெள்ளாமருச்சுக்கட்டி என்ற ஊராட்சியிலுள்ள வெங்குளமும் (வெண்குளம்), அவ்வவற்றிறுள்ள நீரின் நிறத்தைக் காட்டுகின்றன. மரங்களின் பெயர்களை முன்னிறுத்தித்தோன்றும் குளங்கள் பல உண்டு. அவற்றில் பனைக்குளம் ஊராட்சியே மரத்தின் பெயரால் அருகிலுள்ள குளத்தினைக்கொண்டு, பெயர் பெறுவதாயிற்று. புதுக்குளம் ஊராட்சியிலுள்ள ஆலங்குளம் கிராமம், குளத்தின் அருகிலுள்ள ஆலமரங்களின் செழிப்பால் இப்பெயரைப் பெற்றது. செடிகொடி பூக்களின் பெயராலும் அதனை ஒட்டிய இடத்திலுள்ள குளத்தின் பெயராலும் சில ஊர்களுக்குப் பெயர் ஏற்பட்டன. குறிப்பாக, இவ்வொன்றியத்திலுள்ள புக்குளம் (பூக்குளம்-புக்குளமாயிற்று) கொடிக்குளம் (தாமரைக்கொடிகள்நிறைந்தகுளம்), என்பவை எல்லாம்இப்படிப் பெயர் பெற்றவைகளே.

புதுக்குளம் என ஓர் ஊருக்குப் பெயர் உண்டு. அது அக்குளத்தின் அருகில் புதிதாக ஊர் தோன்றியதோடு மட்டுமல்லாமல், அக்குளத்தின் தன்மையையும் புலப்படுத்துகிறது. தில்லேந்தல் ஊராட்சியில் பள்ள மோர்குளம் என்ற ஊர் உள்ளது. இதை மோர்குளம் என்பார்கள். இதன் உண்மையான மூலவடிவம் பள்ளம் ஓர் குளம். இவ்வூரில் பள்ளமான ஓர் இடத்தில் குளம் உண்டாயிற்று. இதனால் இவ்வூருக்கு இப்பெயர் ஏற்பட்டது. திருப்புல்லாணி ஊராட்சி ஒன்றியத்தின் மேற்கே 6 மைல் றொலைவில் மாயாகுளம் என்ற கிராமம் உள்ளது. இவ்வூரில் இன்னும் இரு பிரிவுகள் உள்ளன. ஒன்று சின்னமாயாகுளம், மற்றொன்று புதுமாயாகுளமாகும். முன்னது அளவாலும், பின்னது புதிய குடியேற்றத்தாலும் பெயர் பெற்றவை. இதற்குத் தொண்டாள மேலக்கரை என்ற பெயரும் உண்டு என்கிறார்கள் இங்குள்ள குளம் சில காலங்களில் நீர் நிறைந்திருக்கும், சில காலங்களில் திடீர் என்று சுண்டிக்காய்ந்துவிடும். இதனால் இக்குளத்தை மாயாகுளம் என்று அழைத்திருப்பார்களோ என்று கருத இடமுண்டு. அன்றி மாயா என்ற பெண்ணின் பெயரால் உண்டான குளம் என்றும் உரைக்கிறார்கள். இக்கிராமத்தைப் பற்றிய பட்டயம் சேதுபதி அரண்மனையில் உள்ளது. இக்கிராமம் 1826இல் கொடையாகக் கொடுக்கப்பட்டதற்குச் சாசனமும் உள்ளது.

தானியத்தின் பெயராலும், சிறப்பான, குளிர்ச்சியான நீர்த்துறை உள்ள இடத்தாலும் சில ஊர்கள் பெயர்களைப் பெற்றுள்ளன. இவ்வரிசையில் இவ்வொன்றியத்தில் திணைக்குளம் என்ற ஊர் உள்ளது. ஒன்றியத்தின் கிழக்கே 2 மைல் தூரத்திலுள்ளது. இங்குத் திணைப்புல் அதிகம் விளைந்த காரணத்தாலும் குளிர்ந்த நீர்நிலை இருப்பதாலும் இவ்வூரைத் திணைக்குளம் என்று அழைத்தார்கள். இவ்வூருக்கு முன்னாள் அலிமுத்துவலசை என்னும் பெயர் வழங்கியது என்றும் சிலர் கூறுகிறார்கள். அலிமுத்து என்பவர் இவ்வூரில் செல்வாக்குடன் நிலங்களைக் கவனித்துப் தோட்டத்தில் வாழ்ந்து வந்துள்ளார். எனவே இவ்வூர் இவர் பெயராலேயே அலிமுத்து வலசை என்று வழங்கலாயிற்று. அலிமுத்து என்பவர் வாழ்ந்து சிறந்தது குறித்த வரலாறுகள் அடங்கிய ஓலைச்சுவடிகள் எரிந்து போய்விட்டதாலும் அவருடைய பரம்பரையினர் இன்று ஒருவரும் இல்லாததாலும் சரியான சான்றுகள் கிடைக்கவில்லை. இவ்வூர் (1674 - 1710) இரகுநாத சேதுபதி காலத்திற்கும் முன்பு தோன்றியது. இதைச் சேதுபதி செப்பேடு எண். 11இல் விரிவாகக் காணலாம்.[81] இங்கு 1936இல் கட்டிய பழைமை வாய்ந்த மசூதி ஒன்று உள்ளது. இவ்வூரில் உள்ள நீர்நிலை மிகக் குளிர்ந்த தன்மையில் இருப்பதால் கோடைக் காலங்களில் கீழ்க்கரையிலிருந்து இங்கு வந்து நீராடிச் செல்வார்களாம். இவ்வூரில் அன்றும் சரி, இன்றும் சரி முகம்மதியர்களே அதிகமாய் இருக்கிறார்கள்.

## 2. தோப்பு :

இனித், 'தோப்பு' என்னும் பின் ஒட்டில் முடியும் முல்லைநில ஊர்ப் பெயர்களைக் காணலாம். மரஞ்செடிகள் தொகுப்பாக வளரும் இடம் 'தோப்பு' என்று அழைக்கப்படும்.[82] தோப்பின் அடியாகப் பிறந்த ஊர்களும் உண்டு. மான்தோப்பு என்றும், மந்தித்தோப்பு என்றும், வெளவால் தோப்பு என்றும் தமிழ்நாட்டில் பல இடங்களில் பெயர்பெற்ற ஊர்களைக் காணலாம். இதைப் போலவே இவ்வொன்றியத்திலும் கடற்கரைக்கு அருகிலுள்ள தோப்புள்ள இடத்தைக் ''கடற்கரைத் தோப்பு'' என்று அழைக்கிறார்கள். இதைத் தவிர இவ்வூருக்குப் பெயர் வர, வேறு சிறப்பான காரணம் ஒன்றுமில்லை. இதைப் போலவே சாலை ஓரமாக அமைந்துள்ள தோப்புள்ள ஓர் இடத்தைச் 'சாலைத்தோப்பு'

என்று அழைக்கிறார்கள். எனவே, இப்பகுதியில் அதிகமான பனை மரங்களும், தென்னை மரங்களும் தோப்பாகக் காணப்படுவதால், இத்தகைய பெயர்களை இட்டு வழங்க, நாளடைவில் அவைகள், ஊர்களின் பெயர்களாக மாறிவிட்டன.

## 3. காடு

அடுத்து இவ்வொன்றியத்தில் ''காடு'' என்ற பின் ஒட்டில் முடிந்த ஊர்கள் பல உண்டு. பழங்காலத்தில் தமிழ்நாட்டில் மரஞ்செறிந்த காடுகள் மலிந்திருந்தன. பண்டைத் தமிழரசர்களாகிய கரிகால் வளவன் முதலியோர் காடு கொன்று நாடாக்கினர் என்று கூறப்படுகின்றது.[83] ஆயினும், அந்நாளில் இருந்து அழிபட்ட காடுகளில் தன்மையைச் சில ஊர்ப் பெயர்களால் உணரலாம். காடு என்னும் பெயருடைய ஊர்கள் தமிழ்நாட்டில் பல உள. சேலத்தினருகே ஏர்க்காடு என்னும் ஊர் உள்ளது. காடு சூழ்ந்த ஓர் அழகிய ஏரி அமைந்திருந்தமையால் ஏரியையும், காட்டையும் சேர்த்து ஏரிக்காடு என்ற அவ்வூருக்குப் பெயரிட்டார்கள். அது சிதைந்து ஏர்க்காடு என வழங்குகிறது.[84]

இவ்வொன்றியத்தில் முத்துப்பேட்டை என்ற கடற்கரையூரின் உட்கிடைகளாகத்தோப்புக்காடு என்ற மூன்று சிறுகுடிகள் உள்ளன. இங்கு மக்கள்குடியிருப்பு மிகக் குறைவு ஆனால் தோப்பும், தோட்டமும், காவல்செய்யும் பொருட்டு ஊரிலிருந்து சிலர் குடிமாறிச் சென்று வாழ்ந்து வருகிறார்கள். தோப்பும் காடும் சேர்ந்தது ''தோப்புக்காடா''யிற்று. இங்குப் பனைமரங்கள் அதிகம். இதனால் இப்பகுதியைக் காடாகவே கருதினார்கள். தோட்டப் பயிர்களை விளைவித்து, வானம் பார்த்த பூமியாக விளங்கும் இக்காட்டுப் பகுதியை மக்கள் ''தோட்டக்காடு'' என்று வழங்குகிறார்கள். இதேபோலவே, மாயாகுளம் என்ற ஊராட்சியிலும். ''தோப்புக்காடு'' என்ற ஊர் உண்டு. இதுவும் அதைப் போலவே பனைத் தொகுப்பால் ''தோப்புக்காடு'' என்ற பெயரைப்பெற்றது போலும். இனி, முத்துப்பேட்டையில் நந்தக்காடு என்ற ஓர் உட்கிடைக்கிராமம் உள்ளது. இதற்கு இப்பெயர் வரக் காரணம், இப்பகுதியில் முத்துக்குளிப்பு நடந்ததால், நத்தைகள் அதிகம் வந்து குவிந்திருக்கவேண்டும். அப்படிக் குவிக்கப்பட்ட இக்காட்டுப் பகுதியை நத்தைக்காடு என்று கூறியிருப்பார்கள். பின்னர் நாளடைவில் பேச்சு வழக்கில் திரிந்து, நந்தக்காடாகியிருக்கும்

அல்லது முத்துவிளையும் இக்காட்டுப்பகுதியை நல்ல வளப்பமான பகுதி என்று கருத்திற்கொண்டு, இவ்விடத்தைச் (நந்து-குன்றாத) செல்வம் குறையாத என்ற பொருளில் ''நந்தக்காடு'' என்று அழைப் தால் தவறு ஒன்றுமில்லை என்று எண்ணத் தோன்று-கிறது.

## 4. தோட்டம்:

இனித், தோட்டம் என்ற பின் ஒட்டில் அமைந்த ஊர்ப் பெயர்களை ஆய்வோம். ஊற்றுநீரை இறைத்துத் தோட்டப்-பயிர் செய்யும் வழக்கமும் தமிழ்நாட்டில் உண்டு. ஆதலால் தோட்டத்தைக் குறிக்கும் சொற்கள் சிறுபான்மையாக ஊர்ப்பெயர் களில் வழங்கக் காணலாம். பூக்கள் நிறைந்த தோட்டமுள்ள ஊர், பூந்தோட்டம் என்று அழைக்கப்படுகிறது. இவ்வூர் தஞ்சை நாட்டிலுள்ளது. தோட்டம், கொல்லை, கிளார் என்பன ஒரு பொருட் சொற்கள்.

சுண்டைக்காய் விளையும் தோட்டம் இங்கிருக்கின்ற காரணத்தால் மாயாகுளத்தின், உட்கிடைப்பகுதியிலுள்ள ஓர் இடத்திற்கு இப்பெயர் (சுண்டைக்காய்த் தோட்டம்) ஏற்பட்டுள்ளது. களிமண்குண்டு என்ற ஊரின் ஒரு பகுதியில் எ.எம்.ஆர். என்ற ஒருவரின் பெயரில் தோட்டம் இருந்தது. இது பிற்காலத்தில் இவர் பெயராலேயே இவ்விடத்திற்கு இப்பெயர் (எ.எம்.ஆர் தோட்டம்) ஏற்படலாயிற்று. இதைப் போலவே புகாரி என்பவர் பெயரில் தோட்டம் இருந்தது. பின்னர், இவ்விடம் இவர் பெய-ராலேயே புகாரித்தோட்டம் என்று வழங்கப்பட்டது.

களிமண்குண்டு ஊராட்சியின் கீழ் மடுவிழந்தான் தோட்டம் என்ற ஊர் உளது. இவ்வூருக்கு இப்பெயர் வரக்காரனம் உண்டு. ஆழமான நீர்நிலை என்று கூறப்படும் மடு, இங்கு இல்லாததால் நீர்நிலையற்ற வானம் பார்த்த தோட்டமாய் விளங்கியதால் மக்கள் இவ்வூரை மடு (வளப்பம் இழந்த) விழந்தான் தோட்டம் என்றார்கள்.

## 5. கூட்டம்:

அடுத்து, 'கூட்டம்' என்ற பின்ஒட்டில் தோன்றிய ஊர்-களைப் பற்றியதாம். ஆறுகள் கூடுகின்ற இடம் 'கடல்' என்றும்,

மக்கள் கூடுகின்ற இடத்தைக் கூட்டம் என்றும், வணிக நோக்கோடு கூடுவதைச் சந்தை என்றும் தமிழில் பலவகையாகப் பயின்று வருகின்றன. ஆனால் இங்குக் 'கூட்டம்' என்ற சொல் ஆங்கிலத்தில் மொழி பெயர்ப்பில் எழுந்த பிழையாகும். உண்மையான தமிழ் வடிவம் குட்டம் என்பதாகும். சிற்றூர்களில் பேச்சு வழக்கில் குளம், குட்டம் என்றுதான் வழங்குவார்களே தவிர, குளத்தை, குட்டத்தைக் கூட்டம் என்று வழங்குவதில்லை. எனவே திருப்புல்லாணி ஒன்றியத்துள் அருகிலுள்ள கோரைக்குட்டம் என்ற[85] (கோரைக்கூட்டம்) ஊராட்சி இருக்கிறது. இவ்வூரில் கோரைகள் நிறைந்த குளம் உளது. திருப்புல் என்பது தருப்பைப் புல்லைக்குறிக்கும். எனவே இராமன் காலடிபட்டுப் புனிதம்பெற்ற இப்புல் (கோரைகள்) நிறைந்தகுளம்[86] எனப்பொருள் கொள்வதால் இவ்வூருக்குக் கோரைக்குட்டம் என்ற பெயர் பொருத்தமாய் அமைகின்றது.

'தில்லேந்தல்' ஊராட்சியின் உட்கிடையாக இருக்கும் ஓர் ஊர், 'ஆமைக்கூட்டம்' என்ற பெயரில் வழங்கி வருகிறது. இதை ஆமைக் கூட்டம் என்றே வழங்கிவரக் காரணம், குட்டம் என்பதைக் கூட்டம் என்று ஆங்கில எழுத்தில் எழுதிப்படித்த குற்றமேயாகும். இயல்பான பெயர் ஆமைக்குட்டமேயாகும். இப்பகுதி கடல் ஓரமாக இருப்பதால் கடல் ஆமைகள் குளங்களில் மிகுதியாகக் காணப்படுகின்றன. எனவே இக்குளத்தில் மற்ற குளங்களை விட அதிகமாக ஆமைகள் இருந்ததால் 'ஆமைக்குட்டம்' என்று பெயரிட்டனர்.

## 6. ஏந்தல் :

இனி, நீர்ப்பெருக்குள்ள ஏந்தல் என்னும் பின் ஒட்டுள்ள ஊர்களைப் பற்றிப் பார்ப்போம். சிற்றேரியைக் குறிக்கும் ஏந்தல், தாங்கல் என்னும் இரு சொற்களும் ஊர்ப் பெயர்களில் வழங்குகின்றன. இவற்றுள் தில்லேந்தல் என்னும் ஊர் பின்ஒட்டுப் பெற்று வருகிறது. இப்பெயர் எழக்காரணம், தில்லையில் வாழும் சிவபெருமான் நினைவாக, அவர் அருள் கிட்டும்படியாக, நீர்த்துறைகள் நிறைந்த இவ்வூருக்கு இப்பெயரிடலாயினர். எனவே, தில்லை ஏந்தல் என்பதே இவ்வூரின் மூலப்பெயராகும். பின்னர், சொல் வழக்கில் சிதைந்து (தில்லை ஏந்தல்)

தில்லேந்தல் என்றாயிற்று. இவ்வூர் கீழத்தில்லேந்தல், மேலத்-தில்லேந்தல் என இரு பிரிவான உட்கிடைகளையும் திசைப்-பெயரால் பெற்றுள்ளது தில்லை[87] என்பது ஒருவகை மரம். இதனைத் ''தில்லையன்ன புல்லென்சடை'' புறநானூறு 252 பாடல் வரியால் உணரலாம். (திருநெல்வேலியின் வரலாற்றைக் கூறும் புராதனமாயுள்ள புராணம் வேணுவனபுராணம் எனப்படும். அது 454 விருத்தங்களாலானது) திருநெல்வேலிக் கோவிலில் பள்ளமான இடத்திலுள்ள சுயம்பு வடிவாக இன்றும் வேணுவன லிங்கம் என்று அழைக்கப்படுகிறது. இங்ஙனம் தலவிருட்சமரமான தில்லை மரம் இங்கு இருந்திருக்க வேண்டும். எனவே, அதன் நினைவால் இவ்விடத்திற்குத் தில்லை ஏந்தல் என்று பெயர் வைத்திருப்பார்கள் என்று எண்ணத்தோன்றுகிறது. பின்னர், அது தில்லேந்தல் எனக் குறுகி ஒலித்திருக்கக் கூடும்.

'ஏந்தலை'ப்பின் ஒட்டாகக் கொண்டு முடியும் இன்னும் ஓர் ஊர் உண்டு. பனையடியேந்தல் என்பது இதன் பெயர். பனைகள் கூட்டம் கூட்டமாக இவ்வூரில் தென்படுகின்றன. இங்குள்ள பள்ளர் இனத்தைச் சார்ந்தவர்கள இவ்வூர்ப் பனைஅடையேந்தல் என்கிறார்கள். பனைகள் அடர்ந்த ஏந்தல்பகுதி என்ற கருத்தில் கூறுகிறார்கள். எனவே இவ்வூருக்குப் பனையடையேந்தல் என்பது மருவிப் **'பனையடியேந்தல்'** எனப்பெயர் பெறுவதாயிற்று.

## 7. குடி :

''குடி என்னும்'' பின்ஒட்டில் எழுந்த ஊர்தான் ''ஆனைக் குடி''. இவ்வூர் திருப்புல்லாணிக்கு மேற்கே 5 கி.மீட்டர் தூரத்தில் அமைந்துள்ளது. இலவந்தி கைப்பள்ளி துஞ்சிய நன்மாறன் ஆண்டகாலத்தில், மணலூர் என்ற உத்தரகோசமங்கையை அடுத்த இவ்வூரில் தாம் ஆனைகளைக்கட்டி வைத்திருந்தார்கள் என்றும், அதனால் இவ்வூருக்கு ஆனைக்குடி என்று பெயர் ஏற்பட்டிருக்-கலாம் என்கிறார்கள். குறிப்பிடத்தக்க பட்டயங்கள் கிடைக்க-வில்லை.

அடுத்து, ஓர் ஊர் கடம்பமரம் மிகுதியாக விளையும் பகுதியாக விளங்கியதால் அவ்வூர் கடம்பங்குடி என்றபெயரினைப் பெற்று விளங்கியது. இன்னும் தமிழ்நாட்டிலுள்ள சில ஊர்ப்-

பெயர்கள் தனிமரங்களின் பெயராகக் காணப்படுகின்றன. 'கரவீரம்' என்பது பொன்னிறப் பூக்களைத் தருகின்ற ஒருவகை மரத்தின் பெயர். பொன்னலரி என்றும் அதனைக் குறிப்பதுண்டு. இன்றும் கரவீரக்கோயிலில் பொன்னலரியே தலவிருட்சமாகப் போற்றப்படுகிறது.[88] இப்படி ஒவ்வொரு மாவட்டத்திலும் மரங்களின் பெயர்களில் ஊர்ப்பெயர்கள் அமைவதைக் காணலாம். இதைப் போலவே கடம்பங்குடியும் பெயர் பெற்றது எனத் துணியலாம்.

'பெருந்தாமரைக்குடி' என்ற இவ்வூரில் தாமரைக்குளம் உளது. 'பெரிய' என்ற அடைமொழியைப் பெற்று பெருந்தாமரை என்று வழங்கலாயிற்று. அத்தகு பெரியதாமரை மலர்களை உடைய குளங்கண்ட ஒரே ஊரே 'பெருந்தாமரைக்குடி' ஆயிற்று. செடி கொடிகளின் பெயரால் ஊருக்குப் பெயர் ஏற்படுவது போலவே, இங்குக் கொடியால், தாமரைக்கொடியால் இவ்வூர்ப் பெயர் விளங்குகிறது.

## 8. குண்டு :

சில குடியிருப்புக்களின் தன்மையை அவற்றின் பெயர்கள் அறிவிக்கின்றன. மேட்டில் அமைந்த ஊர்களையும் பள்ளத்தில் அமைந்த ஊர்களையும் அவற்றின் பெயர்களால் உணரலாம். ''பள்ளம்'' என்னும் சொல் குண்டு, குழி, தரவு என்ற பொருள்களையும் தருகிறது. இங்குக் களிமண் நிறைந்த நிலப்பகுதியில் அமைந்த, குண்டு எனும் பகுதியில் நீர் பெருகி, ஊருக்கு உண்ணும் நீராக விளங்கும் இப்பகுதியைக், களிமண்குண்டு என்று அழைத்தார்கள். இஃது ஓர் ஊராட்சி ஒன்றியமாகும்.

## 9. மடை :

கால்வாய்களிலும், குளங்களிலும் கட்டப்பட்ட மதகுகள் மடையென்று பெயர் பெறும். மடையின் வழியாகவே, தண்ணீர் வயல்களில் சென்று பாயும். இத்தகைய மடைகள் அருகே சில ஊர்கள் எழுந்தன. மதுரையில் மேலமடை என்ற ஊர் இருப்பது போல, முகவை மாவட்டத்திலும் திருப்புல்லாணியிலிருந்து தென்மேற்கே 8 கி. மீட்டர் தூரத்தில் மேலமடை என்ற கிராமம் உள்ளது. இது களரிக்கண்மாயின் மேற்குப் பக்கமாகக் கடைசி மடையின் அருகில் இருப்பதால் இவ்விடத்திற்கு மேலமடை என்ற

பெயர் ஏற்பட்டது. மேற்கில் இருக்கும் மேல்மடை, மேலமடை-யாயிற்று.

## 10. ஓடை :

இயற்கையான நீரோட்டத்திற்கு, ஓடையென்பது பெயர் முகவை மாவட்டத்தில் பாலோடை இருப்பதுபோல, மேதலை ஓடை என்ற ஊரும் உள்ளது. இதற்கு இப்பெயர் வரக் காரணம் இவ்வூரின் மேற்கில் அமைந்துள்ளதும், தலைசிறந்ததுமான ஓடை ஒன்று ஓடுவதால் ஏற்பட்டது. மேற்கு+தலை+ ஓடை = மேதலை ஓடை எனறு பெயர் பெறுகிறது.

பெரும்பாலும் காடும் காடு சார்ந்த இடம் என்று கூறப்-படும் முல்லை நிலத்தில் உள்ள ஊர்களுக்குப் பட்டி, பாடி, வாடி, மந்தை என்ற பின் ஒட்டுக்களைக் கொண்டு முடியும் முகவை மாவட்டத்தில் உள்ள ஓர் ஊரின் பெயர் முள்ளுவாடி. இவ்-வூரில் அதிகமான முட்கள் இருந்ததாலும், காட்டுப்பகுதியாக இருந்ததாலும், இப்பெயர் ஏற்பட்டிருக்க இடமுண்டு. மதுரையின் அருகில் நத்தம் செல்லும் வழியில் லிங்கவாடி என்ற காட்டுப்-பகுதியில் அமைந்த ஊரும் உள்ளது.

''பற்று'' என்பது நன்செய். அது தென்னாட்டில் ''பத்து'' எனவும் வடநாட்டில் ''பட்டு'' எனவும் திரிந்து வழங்கும். இராமநாதபுரத்தைச் சேர்ந்த ஓர் ஊர் ''பெருங்கருணைப்பற்று'' என்று அழைக்கப்படுகிறது. செங்கல்பட்டு என்பது ''செங்கழு நீர்ப்பற்று'' என்றும் அழகிய சொல்லின் சிதைவேயாகும்.[89] முகவை மாவட்டத்திலும் இத்தகு அழகிய சொல்லால் அழைக்கப்-படும் ''செழுங்கல் நீரோடை'' என்ற ஊர் உண்டு. ஆனால் இப்பெயர் இன்று ''செங்கல் நீரோடை'' என்று மருவி வருகிறது.

## 11. வாடி :

கடற்கரையில் அமைந்த சில ஊர்களின் தன்மையை அவற்றின் பெயர்களே காட்டும். இன்றும், வைகையாறு கடலோடு கலக்கும் இடத்தில் அமைந்த ஊருக்கு ஆற்றங்கரை என்பது பெயர். இராமேஸ்வரத்துக்கு அண்மையில் கோடிக்கரை என்னும் ஊர் உண்டு. மாயாகுளம் ஊராட்சியிலும் அலவாக்கரை என்ற

கடற்கரைப் பகுதியும், காட்டுப்பகுதியுமாக அமைந்த ஓர் உட்கிடை உள்ளது. இஃது அலை + வாய் + கரை = அலைகள் தவழும் முகப்பில் அமைந்த கரையும் கானல் பகுதியும் சேர்ந்திருப்பதால் இவ்வூர்க்கு 'அலைவாய்க்கரைவாடி' என்ற பெயர் முதலில் இருந்து, பின்னர்ப்பேச்சு வழக்கில் அலவாக்கரை வாடி என்று திரிந்து வழங்கியது என்று கருத இடமுண்டு. மன்னன் சேதுபதி, இராமேஸ்வரம் கோவிலுக்கு இவ்வூரை மான்யமாகக் கொடுத்துள்ளார் என்பதற்குச் சேதுபதியின் பட்டயம் உளது.[90] (பின் இணைப்பில் காணலாம்).

## 12. ஊருணி :

''உத்தரவை'' ஊராட்சியின் உட்கிடைப்பகுதியாக விளங்குவது 'இரட்டையூரணி'. ஊரார் உண்ணும் நீரையுடையதாதலால் ''ஊருணி'' என்னும் பெயர் அதற்கு அமைந்தது என்பர்.[91]

ஊருணியின் பெயரால் வழங்கப்பெறும் ஊர்கள் தமிழ் நாட்டில் உண்டு. பெரிய அளவிலான ஊருணி இருந்தால் பேரூரணி என்று அழைக்கப்படுகிறது. இவ்வூரில் இரண்டு ஊருணி இருப்பதால் விசேடமான ஊராகக்கருதி, இதற்கு ''இரட்டை ஊருணி'' என்று பெயர் வைத்தனர்கள் போலும். ''ஊருணி'' என்பது பேச்சு வழக்கில் ''ஊரணி'' என்று திரிந்து வழங்குகின்றது.

## 13. சமுத்திரம் :

சில ஊர்ப் பெயர்களில் ''சமுத்திரம்'' என்ற வடசொல் இடம் பெற்றிருக்கின்றது. தமிழ்நாட்டு மன்னரும் செல்வரும் உண்டாக்கிய பெரிய ஏரிகள், கடல் என்றும், சமுத்திரம் என்றும், வாரிதி என்றும் புனைத்துரைக்கப் பெற்றன.[92] எனவே, தமிழ்நாட்டு ஊர்ப்பெயர்களில் உள்ள சமுத்திரம் என்னும் சொல், பெரும்பாலும் ஏரியின் பெயரென்று கொள்ளலாகும். நெல்லை நாட்டில் (அம்பாள் சமுத்திரம்) அம்பாசமுத்திரம் முதலிய பல ஊர்கள் உள்ளன. இன்றும் மைசூர் தேசத்தில் சிவசமுத்திரம் என்பது ஓர் ஏரியின் பெயராக வழங்குகின்றது. களிமண்குண்டு ஊராட்சியிலும் இதைப்போல நாகநாதர் சமுத்திரம் என்னும் ஓர் உட்கிடை கிராமம் உள்ளது. இவ்வூரில் பெரிய ஏரி ஒன்று உள்ளது. அதனால் இது சமுத்திரம் என அழைக்கப்

பட்டது. மேலும் இப்பகுதிகளில் நாகநாதர் வணக்கம் அதிகம். பரமக்குடியில் நயினார்கோயில் இருப்பதுபோல அங்கு அருகில் நாகநாதர் கோவிலும் உளது. அங்கு மக்கள் சென்று வருவதால் இறைவன் திருநாமம் தம் ஊருக்கும் வழங்கவேண்டுமென்ற பெருவிருப்பால், நாகநாதர் பெயரை முன்வைத்து, சமுத்திரம் போன்ற நீர்ப்பெருக்குமிக்கக் குளத்தையுடைய அப்பகுதியையும் சேர்த்து, 'நாகநாதர் சமுத்திரம்' என்று அழைத்தார்கள். பின்னர், அது பேச்சில் நாகநாத சமுத்திரமாகக் குறுகி ஒலித்தது.

## 14. கரை :

இவ்வொன்றியத்தில் அமைந்துள்ள பன்னக்கரை என்னும் கிராமத்தின் அருகில் அரசாங்கத்தாரால் தென்னைகளை வளர்க்கும் பண்ணை வைக்கப்பட்டுள்ளது. எனவே, இப்பகுதிக் கடற்கரை அருகில் இருப்பதால் ''பண்ணைக்கரை'' என்று அழைத்தார்கள் போலும். அது நாளடைவில் ''பன்னக்கரை' எனச் சிதைந்து வழங்கியது.

மேலும் இவ்வொன்றியத்திலுள்ள குளபதம், லாந்தை, கீழசீத்தை, இளங்காமணி, இளந்தொடை என்னும் ஊர்களுக்குரிய பெயர்க்காரணங்களைக் காண்பாம். முதலில் இளங்காமணி என்ற சிற்றூரின் பெயர்க்காரணத்தைக் கூறலாம்.

## 15. இளங்காமணி :

வண்ணான் குண்டு ஊராட்சியின் உட்கிடையில் இளங்காமணி என்னும் கிராமம் உள்ளது. மரங்களும் செடிகளும் செழித்தோங்கி வளரும் இக்'கா' இளங்காவாகியது. இளமை என்ற பொருளில் அல்ல, மிகவும் அண்மைக்காலத்தில் தோன்றியதும், பூத்துக்குலுங்கும் புதுப்பொலிவு உடையதும் ஆகிய பகுதிகளையுடையது. இச்சோலை ''கா'' என்ற பொருளைத்தருகிறது. இப்பகுதியில் அமைந்துள்ள இவ்வூர், மணிபோலச் சிறப்புமிக்கதாய்ச் 'சிறப்பு' என்ற அடைமொழியைப் பெற்று 'இளங்காமணி' என்ற தூயதமிழ்ப் பெயரினைப் பெற்று விளங்குகிறது.

எனவே, இவ்வூர் வளப்பமும், சிறப்பும் கருதி இப்பெயர் பெற்றது என்பதில் ஐயமில்லை. சான்றாக, ஒன்றினைக் கூறலாம்.

இன்னும், மலைவளம் வாய்ந்த திருக்குற்றால மலையின் அடிவாரத்தில் கண்ணினைக் கவரும் தண்ணறுஞ் சோலைகளின் நடுவே, ஓர் அழகிய ஊர் அமைந்திருக்கிறது. அவ்வூரின் இயற்கை நலத்தினைக் கண்டு இன்புற்ற பண்டைத் தமிழர் அதற்குப் ''பைம்பொழில்'' என்று பெயரிட்டார்கள்.[93] இறுதியாக, இக்கொள்கை அடிப்படையில் இவ்வூருக்கும் (இளங்காமணி) இப்பெயர் அமைந்திருப்பதில் வியப்பில்லை.

## 16. இளந்தொடை

அடுத்துவருவது, இளந்தொடை என்னும் பெரியபட்டணத்தின் உட்கிடை கிராமமாகும். இதிலும் 'இளமை' இருக்கிறது. இவ்வூரில் மூலவடிவம் இளந்தொடை. இனிமையான நீர் ஓடை என்பது பொருள். இவ்வூரின் அருகில் அருமையான ஓர் நீரோடை இருந்ததால், இவ்வூர் மக்கள் இவ்வூரை ஓடையின் பெயராலேயே இளந்தோடை என்று வைத்தார்கள். இளமை + ஓடை = இளந்தோடை. இதில் இளமை அல்ல பொருள் என்றும் குறையாத கன்னித்தமிழ்போல், என்றும் நீர் வற்றாத வளமையான ஓடை என்ற பொருளில் காணவேண்டும். தமிழ்ப் பெயர்களை ஆங்கிலத்தில் எழுதும்பொழுதும், ஆங்கிலப் பெயர்களைத் தமிழில் எடுத்து எழுதும்போது அரசுப்பதிவேடு பதிபவர்கள் செய்யும் தவறுகள், சிலசமயங்களில் இப்படிப் பெயர் மாற்றத்திற்குக் காரணமாகிவிடுகிறது குட்டம் - கட்டமாக மாறி எழுதப்பட்டது போல, இங்கு இளந்தோடை, இளந்தொடையாக எடுத்தெழுதப் பட்டிருக்க வேண்டும் என்பது வெளிப்படை.

## 17. குளபதம் :

இவ்வூரின் பெயர் உம்மைத்தொகைபோல் அமைந்துள்ளது. குளமும் பதமும் (மலை) இணைந்து ஒலிக்கிறது. குளபதம் ஓர் ஊராட்சி நிலையுடையது. இந்நாளில் ஆந்திர தேசத்துக் கர்னூல் நாட்டில் சிறந்து விளங்கும் ஸ்ரீ சைலம் என்னும் பதியே பருப்பதம் ஆகும். கல்லார்ந்த வழிநடந்து, அரிதில் காண்டற்குரியது அப்பதி. அதைப் போலவே, இவ்வூரில் பாறைகள் நிறைந்த சிறுகுளம் இருப்பதால் இதற்கு இவ்விடத்தைச் சார்ந்தவர்கள் குளபதம் என்று வைத்தார்கள் என்றால், அது பொருத்தமுடைய சொல்லாகத்தான் தெரிகிறது.

## 18. சீத்தை :

களரி ஊராட்சியின் உட்கிடையாக விளங்குவது சீத்தை என்னும் கிராமமாகும். இது களரியின் கிழக்கே இருப்பதால் கீழச்சீத்தை என்ற பெயரைப் பெறுகிறது. முற்காலத்தில், பெருந்தலை என்னும் ஊரில் தோன்றியதால் ஒரு புலவர் பெருந்தலைச்சாத்தனார் என்று பெயர் பெற்றார். அதைப்போலவே சீத்தலை என்னும் ஊரில் தோன்றியதால் மற்றொரு புலவர் சீத்தலைச்சாத்தனார் என்று பெயர் பெற்றார். எனவே, சீத்தலை என்பது ஊரின் பெயராக இன்று அல்ல, அன்றே வழங்கிவந்திருக்கிறது. எனவே, இவ்வட்டத்திலும் சான்றோர் பலர் பெயரில் ஊர்கள் அமைந்துள்ளன. குறிப்பாகத் தெய்வச்சிலை நல்லூர் போலச்சான்று காட்டலாம். எனவே, சீத்தலையூர் என்று இவ்விடத்திற்குப் பெயர் இருந்திருக்க வேண்டும். நாளடைவில், இச்சீத்தலையூர், இன்று தஞ்சாவூர் மருவி தஞ்சை என்று வழங்குவது போல, சீத்தை என்று மருவி வழங்கியிருக்க வாய்ப்பிருக்கிறது.

## 19. லாந்தை :

இடப்பெயர்களை ஆராயும் பொழுது, தமிழில் தற்சமயம் வழக்கொழிந்து வரும் பல அருமையான தமிழ்ச்சொற்கள் சிங்கள மொழியினுள் காணக் கூடியனவாக இருக்கின்றன. சிலப்பதிகாரம், மணிமேகலை, பத்துப்பாட்டு, பரிபாடல் ஆகிய இலக்கியங்களில் காணப்படும் இடங்களைக் குறிக்கும் பெயர்கள் யாவையும் தென்னிலங்கையில் உள்ள (சிங்கள) இடப்பெயர்களில் விரவி வருவதைக் காணலாம். இடப்பெயர்களில் பரவலாகத் தமிழ் மொழிச் சொற்களையும், சிங்களத்திற்கும் தமிழுக்கும் பொதுவான சில வடமொழிச் சொற்களையும் காணக்கூடியதாய் இருக்கிறது.

சான்றாக, லாந்தை என்ற இவ்வொன்றியத்திலுள்ள ஊருக்குப் பெயர் ஏற்படக் காரணம் யாது என்பதை ஆராய்வோம்.

''அலந்தை'' என்ற சொல்லுக்குக் குளம் என்பது பொருள். சிங்களத்தில்''லந்த''என்று அழைக்கப்படுகிறது. சிங்களத்திலுள்ள வடசொல், தமிழிலும் பரவியுள்ளதற்குச் சிறந்த சான்றாக இச்சொல் வழங்குகிறது. எனவே 'லந்தை' என்ற சொல் பேச்சு

வழக்கில் ''லாந்தை'' என்ற நீட்சிபெற்று வழங்கியிருக்கலாம். இவ்வூர் இராமநாதபுரத்திலுள்ள பெரியகுளத்தின் அருகில் இருப்பதால், குளக்கரையில் தோன்றிய ஊராகிப், பின் குளத்தின் பெயராலேயே அழைக்கப்பட்டிருக்கலாம். இங்கு, இன்று அரிசனர்கள் தாம் வாழ்கின்றார்கள். இவ்வூர் சேதுபதி மன்னர்களின் காலத்தில் இராமேசுவரத்திலுள்ள அக்கோவில் திருப்பணிக்கு மானியமாக எழுதித் தரப்பட்டதாகும்.

## குறிப்புக்கள்

81. சேதுபதி செப்பேடு எண் : 11 வரி : 23-32 ; அகம் 1650 AD 1728.

82. தொகுப்பு என்பது தோப்பு என்றாயிற்று, ''செய்குன்று சேர்ந்த சோலை தோப்பாகும்'' - பிங்கல நிகண்டு.

83. ''காடுகொன்று நாடாக்கிக் குளந்தொட்டு வளம்பெருக்கி''— பட்டினப்பாலை : 283 வரி

84. M.M. Vol. III, P. 1032, Madras Manual.

85. குட்டம், தாங்கல், கோட்டகம் ஏரி - பிங்கல நிகண்டு.

86. சேதுபதி பட்டயம் எண் 11; வா 28.

87. திருநெல்வேலி வேணுவன புராணம்.

88. பிங்கல நிகண்டு.

89. 337 of 1908 : MER 1933-34.

90. சேதுபதி பட்டயம் எண் : 9; வரி 40-46.

91. ஊரணி என்பது ஊருணியின் திரிபாகும். ''ஊருணிநீர் நிறைந்தற்றே'' என்னும் திருக்குறளால் அச்சொல்லின் பழமை விளங்கும். ஊருக்கு அணித்தாக உள்ள நீர்நிலை ஊரணியெனப்படும் என்றும் கூறுவர்.

92. 9 of 1896. சோழவாரிதி - வட ஆர்க்காடு - சாசனம்.

93. S. I. I. Vol. IV. P. 326.

# 5. சாதி அடிப்படையில் ஊர்ப்பெயர்கள்

[சாதி / சமூகம் / ஆட்சி செய்தோர் ]

பழந்தமிழகத்தில் பல வகுப்பார் வாழ்ந்திருந்தார்கள்; ஆயினும் அவர் பெயரும் பெருமையும் ஊர்ப்பெயர்களால் விளங்குகின்றனவே தவிர, இவர்களுடைய வரலாறு முறையாக எழுதப்படவில்லை. ''நாகர்'' என்பார் ஓர் இனத்தார். தமிழ் இலக்கியங்களில் நாகநாடு செல்வமும் அழகும் வாய்ந்த சிறந்த நாடாகக் குறிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டிலுள்ள நாகப்பட்டினம், நாகர்கோவில் முதலிய ஊர்களின் பெயர்களில் கடைச்சங்கப் புலவர்களில் ஒருவரான "நாகன்'' என்னும் ஒப்பற்ற ஒருவருடைய பெயரால் விளைந்துள்ளவற்றை நாம் காண்கிறோம்.[95] இதே போலத் தனிமனிதருடைய பெயரில், (அருவர், மழவர், திரையர், முத்தரையர், முனையர், பாணர், அதியர், ஆவியர், ஓவியர், வேளிர், குறுக்கையர், சோழ, சேர, பாண்டியர்) ஊர்ப் பெயர்கள் அமைந்து விளங்கின; விளங்கி வருகின்றன.[96]

தமிழ்நாட்டிலுள்ள வட ஆர்க்காட்டு வட்டத்தில் மகம்மதியத் தலைவர்கள் பெயரால் அமைந்த ஊர்கள் சில உண்டு. கருநாடக நவாபுகளில் ஒருவன் முகம்மது அலி என்பவன். அவனுக்கு வாலாஜா என்னும் பெயரும் உண்டு. அப்பெயர் ஆர்க்காட்டிலுள்ள வாலாஜாபேட்டைக்கு அமைந்துள்ளது. தமிழ்நாட்டில் மகம்மதிய வகுப்பாரைக் குறிக்கும் ராவுத்தர், மரக்காயர் முதலிய பெயர்களும் ஊர்ப்பெயர்களில் புகுந்துள்ளன. தென் ஆர்க்காட்டிலுள்ள ராவுத்த-நல்லூரும், இராமநாதபுரத்திலுள்ள மரக்காயர் பட்டினமும் இவ்வுண்மைக்குச் சான்றாகும்.

சென்ற சில நூற்றாண்டுகளாகத் தமிழ்நாட்டில் பரவிவரும் கிறுத்துவ சமயத்தின் சார்பாக எழுந்த ஊர்களும் உண்டு. குறிப்பாக, ஆரோக்கியபுரம், சாந்தபுரம், சௌக்யபுரம், சந்தோஷ-புரம், நீதிபுரம் முதலிய புத்தூர்களும் சென்ற நூற்றாண்டில் எழுந்துள்ளன.

பழந்தமிழ் நூல்களில் பேசப்படுகின்ற புலவர் பெயராகிய கீரன், ஆதன் முதலிய பெயர்கள் தமிழ்நாட்டு ஊர்ப்பெயர்களில் கலந்துள்ளன. ''கீரன்'' என்னும் பழம் பெயருக்குப் பின் ஊர்-

சேர்ந்து, கீரனூராயிற்று. ''ஆதன்'' பெயரைத் தாங்கிய ஊர் ஆதனூராயிற்று. கோடன்பாக்கம், சென்னையில் கோடம்பாக்க-மாயிற்று. இப்படித் தனிமனிதர், ஆட்பெயர்கள், மன்னர், மன-நிலை பெறமுயலும் முனிவர், புலவர், ஆன்றோர், சான்றோர், பாரி, காரி, ஓரி இவர்களின் பெயரோடு எல்லாம் இவ்வூரை இணைத்துப் பார்த்தும், பெயரைப் பறைசாற்ற முயன்றது அன்றைய, இன்றைய தமிழகம் என்றால் மிகையாகாது. 16ஆம் நூற்றாண்டிற்குப் பின்னர்ச்செட்டியார், வலயர், கைக்களர், மரைக்கான், பள்ளர், வேளாளர், போன்றவர்களின் பெயர்-களோடு ஊர்ப்பெயர்களும், ஊரின் இடங்களும், ஊரின் விகுதி-களும் இணைந்து வழங்கலாயின. அக்காலத்தும் இக்காலத்தும் தொழில் அடிப்படையில் வைத்துஊர்ப்பெயர்கள்தோன்றியுள்ளன. சான்றாகக் கொத்தன், வண்ணான், பெயரில் தொடங்கும் ஊர்-களைக் கூறலாம். இவற்றை விடுத்துச் சமுதாயத்திற்கு உறு-துணையாக விளங்கும் சில நிகழ்வுகளையோ, சில இடங்களை-யோ, பின் ஒட்டாகத் தாங்கிவரும் பெயர்களைப் பற்றியும் இவ்வியலில் ஆராயப்படும்.

மேலும், மொழி அமைப்பில் ஏற்பட்ட சில மாற்றங்களையும், கலப்புக்களையும், காலத்துக்காலம் வெவ்வேறு சமூகத்தினரிடையே நிலவிய குடிபெயர்ப்பு, குடியமர்வு, இனக்கலப்பு, மற்றும் வெளி நாட்டுத் தொடர்புகள் யாவற்றையும் ஒருங்கே அறிய இவ்விடப் பெயர் ஆராய்ச்சி உதவுகின்றதென்றால் மிகையாகாது.

1. ஏந்தல் :

சமூக, சாதிப் பெயர்களில் பின் ஒட்டாக, ஏந்தல அமைந்த ஊர்களைப்பற்றி முதலில் கூறுவாம். ''ஏந்தல்'' என்பது சிற்றேரியைக் குறிக்கும். நீர்ப்பெருக்குள்ள பகுதிகளையும் சுட்டும். பொதுவாக, மக்களினம் முதலில் ஓர் இடத்தில் குடியேறும் போது நீர் நிலைகளும் மற்றும் நில வளங்களும் உள்ள இடங்-களையே தெரிந்தெடுத்தனர். பின்னர்க்குடியேறிய இடங்களுக்கு அங்குள்ள குளம், வயல், ஆறு, மரம் முதலியவற்றின் பெயர்களை இட்டு வழங்கலாயினர். தமிழர் உறவுத்தொழிலுக்கும் இயற்கை வாழ்விற்கும் உயரிய இடமளித்த காரணத்தால் இடங்களின் பெயர்களிலும் இவை முன்னிற்கக் காணலாம்.

அந்நாளில் கூட்டம் கூட்டமாக ஊர் ஊராகச் சென்று வாணிகம் செய்தோரை 'வாணிகச்சாத்து' என்றழைத்தனர். வாணிகத்தைத் திறம்பட நடத்திய வணிகருக்கு 'எட்டி' எனும் பட்டத்தையும் பொற்பூவையும் அளித்து சிறப்பித்தனர். இத்தகை-யோர் வாழும் இடங்களைச் செட்டி ஏந்தல், செட்டித் தோட்டம் என்றெல்லாம் அழைக்கத் தொடங்கினார்கள். எனவே, இவ்விரு ஊர்களும் தொழில் செய்த செட்டியார் பெயரில் அமைந்தவை-களாகும். செட்டியார் + ஏந்தல் = செட்டி ஏந்தலாகவும், செட்டியார் + தோட்டம் = செட்டித் தோட்டமாகவும் குறுகி ஒலித்ததுபோலும். இதேபோன்று எக்ககுடி ஊராட்சியிலேயே இன்னும் ஒரூர் உளது. இதன் பெயர் பக்கிரி புதுக்குளம். "பக்கிரி" என்பவர் இங்கு வாழ்ந்து, சிறந்து, உயர்ந்த நிலையில் இருந்த தாலும், ஊா தோன்றக் காரணமாயிருந்ததாலும் பக்கிரி உண்டாக்கிய புதிய ஊர், அதன் அருகில் குளமும் இருந்ததால், பக்கிரி புதுக்குளம் என்று அழைத்தார்கள் என்பது இங்குள்ள வர்கள் கூற்றாகும்.

## 2. குடி :

இவ்வொன்றியத்தில் எக்ககுடி என்றும் ஊர் உளது. இங்கு வாழும் மக்கள் அனைவரும் ஒரே இனத்தைக், குடும்பத்தைச் சார்ந்தவர்கள். இவர்கள் இந்துக்கள்தாம். நபிகள் நாயகத்தின் சீடர்கள் நாகூரில் இருந்து ஏர்வாடி செல்கையில் இவ்விடம் தங்கித் தாகசாந்தி செய்தார்களாம். அப்பொழுது இவ்வழியில் ஏககுடி-யினரைக்கொண்ட இவ்வூர்மட்டும் இருந்ததாம். இப்போது அது பேச்சுவழக்கில் ஏககுடி > எக்ககுடியாக அழைக்கப்படுகிறது. இங்குள்ள இந்துக்கள் அனைவரும் இப்போது முஸ்லீம்களாக மதம் மாறியுள்ளார்கள்.

சித்தன் என்பவன் இக்கிராமத்தின் நன்மைக்குப் பல்வேறு வழியில் பணிபுரிந்தவன். எனவே, இவன் பெயரால் சித்தன்குடி என்று வழங்கியது. பின்னர்ச் "சிட்டங்குடி" என்று வழங்கிய இவ்வூர் "சிட்டாங்குடி" என்று பெயரால் நீட்சிபெற்றது சொல் வழக்கால் ஆகும்.

## 3. நத்தம் :

தில்லேந்தல் ஊராட்சியின் உட்கிடையாக நத்தம் என ஓர் இடமுண்டு. ஊர்ப்பொதுவாக அமைந்த இடம் நத்தம் எனப்படும்.

அத்தகைய இடம் குடியிருப்பாக மாறிய பின்வரும் பழைய பெயர் எளிதாக மறைவதில்லை. நெல்லை நாட்டிலுள்ள கீழநத்தம், மேலநத்தம் என்னும் ஊர்களும், மதுரையிலுள்ள பிள்ளையார் நத்தமும், தென் ஆற்காட்டிலுள்ள திருப்பணி நத்தமும், செங்கற்பட்டிலுள்ள பெரியநத்தமும் இதற்குச் சான்றாகும். சேலம் நாட்டு நாமக்கல் வட்டத்தில் வெட்ட வெளியான இடத்தில் ஒரு நந்தம் எழுந்தது. அது பொட்டல்நத்தம் என்று பெயர் பெற்றது

## 4. தோப்பு :

மரஞ்செடிகள் தொகுப்பாக வளரும் இடம் தோப்பு ஆகும். முகவை மாவட்டத்தில், இவ்வட்டாரத்தில் கடலோரப்பகுதிகளில் தென்னை, பனைமரத் தொகுப்பால் வளர்ந்துள்ள தோப்புக்கள் அதிகம். அதிலும் குறிப்பாகக் கொல்லர்கள் வாழும் இப்பகுதியைத் தோப்போடு இணைத்துக் ''கொல்லன்தோப்பு'' என்று அழைத்தார்கள். பின்னர் இவ்வூர்ப்பெயரை எடுத்தெழுதி உச்சரிப்பதில் 'கொள்ளன்' என்று பிழையாக அமைத்துவிட்டார்கள். இப்பகுதிகளில் கொள்ளனூர்[97] என்று வழங்கும் ஊர்கள் உள்ளன. எனவே, இவ்வூரையும் 'கொள்ளந்தோப்பு' என்று வழங்க ஏதுவாக இருந்திருக்கிறது. பெரும்பாலும் இங்கு வாழ்பவர்கள் 'கொல்லர்' தொழில் செய்பவர்களே. இதைப்போலவே பால்யர், தண்டல், வலயம், பொக்கனர், தாதன் போன்ற சமூக உறுப்பினர் பெயரால் ஏந்தல்கள் ஏற்படலாயின. இவைப் பால்யர் ஏந்தல், தண்டல் ஏந்தல், வலயர் ஏந்தல், பொக்கனர் ஏந்தல், தாதன் ஏந்தல் எனப் பெயர் பெற்றன. இங்கெல்லாம், தொழில் அடிப்படையில் பெயர் பெற்றவர்கள் வாழ்கின்றார்கள்.

## 5. புரம் :

இனிப், புரம் என்ற பின் ஒட்டில் முடிந்த ஊர்களைப் பற்றிக் காண்போம். ''புரம்'' என்பது பெரிய ஊரினைக் குறிக்கும் சொல் அல்லது புகழ்பரப்பி நிற்கும் சொல். சான்றாக, காஞ்சிபுரத்தைக் கூறுவோம். இதைப் போலவே தனிமனிதரால், இறைவனால் அழைக்கப்படும் ஊர்களும் புரம் என்றும் வழங்கப்படுவதை நாம் காணலாம். இவ்வரிசையில், லெட்சுமி, கிருஷ்ணா, குமரன் என்ற இறைவனின் அருள்வேண்டி அவர்களின் பெயருக்குப்பின் ''புரம்'' என்ற பின்ஒட்டுப்பெற்று லெட்சுமிபுரம்,

கிருஷ்ணாபுரம் என்று அழைக்கப்பட்டது என்று இவ்வூரார் கூறுகிறார்கள்.

இதேபோன்று குமரன் பெயரால் தோன்றியபுரம் குமாரபுரம் என்று வழங்கலாயிற்று. அரசியல் தலைவர்களின் பெயரால் இன்று நாட்டில் பல பெயர்கள் பல்கிப்பெருகியிப்பதை அறிவோம். இங்குள்ள ஓர் ஊர் நேருவின் பெயரால் நேருபுரம் என்று அழைக்கப்படுகிறது.

## 6. குளம் :

ஒரு குறிப்பிட்ட தொழில்புரியும் தொழிலாளர்கள் வாழும் குடியிருப்பு என்று ஊரில் சிலபகுதிகள் அமைவது வழக்கம். இப்பகுதியில் கொத்தன்குளம் என்ற ஊர் உளது. இங்குள்ள குளத்தின் அருகில் கொத்தர்கள் தம் சொந்தக்காரர்களுடன் குடியிருப்பைத் தொடங்கியதால் கொத்தன்குளம் என்று பெயர் ஏற்படலாயிற்று. சேதுபதி ரகுநாத தேவர் ராமநாத சமுத்திரம் அட்டாலைச் சொக்கநாதர் சுவாமி கோயிலுக்கும், தெய்வராயர் கட்டுவித்த மடத்திற்கும் கொடுத்த நில தானச் செப்பேட்டில்[98] கொத்தன் குளமும் சேர்த்துக் கொடுக்கப்பட்ட செய்தி உளது. எனவே, இவ்வூர் (1647-1672) இல் வாழ்ந்த சேதுபதி ரகுநாத தேவருக்கு முன் தோன்றியதாகும்.

## 7. சேரி :

பல குடிகள் சேர்ந்து வாழ்ந்த இடம் சேரி என்று பெயர் பெற்றது. பள்ளர் வாழும் சேரி பட்சேரி எனப்படும். பறையர் வாழுமிடம் பறைச்சேரி; எனவே, சேரி என்னும் சொல் சேர்ந்திருந்து வாழும் இடத்தினை முற்காலத்தில் குறிப்பதாயிற்று. இக்காலத்தில் சேரி என்னும் சொல் இழிந்த வகுப்பினராக எண்ணப்படுகின்ற பள்ளர், பறையர் முதலியோர் வசிக்கும் இடங்களைக் குறிக்கின்றது. ஒவ்வோர் ஊரிலும் சேரி உண்டு. அஃது ஊரின் புறத்தே தாழ்ந்த வகுப்பார்க்கு உரியதாக அமைந்திருக்கின்றது.

தாதனேந்தல் ஊராட்சியின் உட்கிடைக்கிராமத்தில் பள்ளர்சேரி என்ற ஊர் உளது. இதுவும் மேற்கூறியகாரணத்தால்

அமைந்த சேரியே. பள்ளர் + சேரி = பள்ளர்ச்சேரி என்பதற்குப் பதிலாகப், பள்ளச்சேரி என்று மருவி வழங்கிவருகிறது.

18 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஆங்கிலப்படைக்குத் துணைபுரிந்த மகம்மது யூசப்கான் என்பவன் தமிழ்நாட்டில் கான்சாகிப் என்று வழங்கப்பெற்றான். அவன் செய்த உதவிக்குக் கைம்மாறாகப் பாண்டிய நாட்டின் கவர்னராக ஆங்கிலேயர் அவனை நியமித்தனர். மதுரையைச் சேர்ந்த கான்சாபுரம் அவன் பெயரால் அமைந்தது. இன்னும் பல ஊர்கள் மகம்மதியப் பெயர்களைக் கொண்டு வழங்கக் காணலாம். தமிழ்நாட்டில் மகம்மதிய வகுப்பாரைக் குறிக்கும் ராவுத்தர், மரக்காயர் முதலிய பொருள்களும் ஊர்ப்பெயர்களில் புகுந்தன. இராமநாதபுரத்திலுள்ள மரக்காயர்பட்டினமும், நயினா மரைக்கான் என்ற ஊரும் இவ்வுண்மைக்குச் சான்றுகளாகும்.

## 8. மரைக்கான் :

நயினா மரைக்கான் என்பது ஓர் ஊராட்சி நிறுவன அமைப்புடைய ஊர். இன்று அங்கு முகம்மதியர்கள் இல்லை; யாதவர்களே அதிகம். அன்று நயினார் என்பவர் புகழ்பெற்ற குடும்பத்தில் பிறந்திருந்ததால் அவர் பெயரில் நயினார் + மரைக்கான் = நயினாமரைக்கான்[99] என்று வழங்கினார்கள் போலும். இவ்வூர் தனி மனித செல்வாக்கால் தோன்றிய ஊராகும். மேலும், இவ்வூர் சகாப்தம் 165இல் முத்துரெகுநாத சேதுபதி காலத்தில் (1730) தோன்றியதாகும்.[100] இப்படித் தனிமனித செல்வாக்கால் தோன்றிய மற்றோர் ஊர் கொடைக்கான் என்ற ஊர். வண்ணாங்குண்டின் உட்கிடைக்கிராமம். இவ்வூருக்கு இப்பெயர் வரக்காரணம் கொடைகொடுக்கும் செத்தும் கொடுத்தான் சீதக்காதி வாழ்ந்த இப்பகுதியாதலால் அவன் நினைவாக "கொடைக்கான்" என்று வைத்திருக்கலாம். கொடை என்பது அடைமொழியாகவும், கான் என்பது காட்டைக் குறிப்பதாகவும் கொண்டால் இவ்வூர்ப் பெயருக்குக் காரணம் கூறலாம்.

## 9. தரவை :

இறைவன் திருநாமத்தால் சில ஊர்களுக்கு முன்ஒட்டாகத் தோன்றிச் சிறப்புச் செய்வதைப் பரக்கக் காணலாம். இதன்

அடிப்படையில் இங்கும் பத்திரகாளியின் பெயரால் முன்-ஒட்டில் அமைந்த ஒரு பகுதியைக் காணலாம். இவ்வூர் தரவை என்றபின் ஒட்டால் இணைந்து விளங்குகிறது. 17ஆம் நூற்றாண்டில் இவ்வூர் தோன்றியது. பத்திரகாளி என்னும் பெயர் சுருக்கப் பெற்று பத்தராவாகி, பத்தரா தரவை[101] பத்தராதரவை என்று வழங்குகின்றது. தரவை என்றால் கரம்பு, களைமூடிய உவர்நிலம் என்று கூறப்படும்.

## 10. வெளி :

வெளி என்னும் சொல் சில ஊர் பெயர்களில் அமைந்திருக்-கின்றது. நாகபட்டினத்துக்கு அருகே வடக்குவெளி என்னும் ஊர் உண்டு. இதைப்போன்று பத்தராதரவைக்கு அருகில் பத்தரா-தரவை வெள்ளி என்ற ஓர் ஊர் உளது. சங்ககாலத்துப் புலவரில் இருவர், ''வெளி'' என்றும் பெயருடைய ஊர்களில் பிறந்த்தாகத் தெரிகின்றது. எருமை வெளியனார் என்பது ஒருவர் பெயர். வீரை வெளியனார் என்பது மற்றொருவர் பெயர். இருவரும் முறையே ''வெளி'' என்ற பின் ஒட்டில் முடிந்த ஊரில் பிறந்தவர்கள் என்பது வெளிப்படை. இதன் பொருள் யாதெனின் ஊருக்கு வெளியே தனியாகப்போய் அமைந்த ஊர் என்பதாகும். எனவே, பத்தராதரவையின் புறத்தே அமைந்த ஊர் பத்தராதரவை வெளி என்றாயிற்று.

## 11. மடம் :

கைக்கோளர் என்ற ஒருவகை சாதியார் உண்டு. அத்தகை-யோர் வாழும் ஊரில் எழுப்பப்பட்ட மடம் என்று இருந்தது. தாதனேந்தல் என்னும் ஊரில் உட்கிடையில் அமைந்திருக்கும் இவ்வூரில் கைக்கோளர் சாதியார் அதிகம் வாழ்வதாலும், அவர்-கள் கட்டிய மடம் ஒன்று இருப்பதாலும் கைக்கோளர் மடம் என்று பெயர் வந்துள்ளது. பின்னர்ப் பேச்சு வழக்கில் 'கைக்களர் மடம்' என்ற பெயர் மாறி வழங்குகிறது.

## 12. ஊர் :

வேளிர் என்னும் பெயருடைய ஒரு வகுப்பார் முன்னாளில் சிறந்து விளங்கினர். அக்குலத்தலைவர்கள் சோழகுல மன்னரோடு

உறவு கொண்டிருந்ததாகத் தெரிகின்றது. வேளாளர் என்ற ஒரு-வகை இனத்தவர்கள் தம் தொழிலால் பெயர் பெற்றவர்கள். பயிர்த்தொழிலே பழந்தமிழ்நாட்டில் பழுதற்ற தொழிலாகக் கருதப்பட்டது. ஆதலால் எல்லா இனத்தாரும் இத்தொழில் புரியத்தொடங்கினார்கள். எனவே, தொழிலால் வேளாண்மை செய்பவர்கள் வேளாண் பெருமக்கள் ஆயினார்கள். வேளாண்மை செய்பவர் வேளாளர் ஆயினார். அத்தொழிலையே நம்பி வாழும் அவ்விடத்திற்கு வேளானூர் என்ற பெயர் உண்டாயிற்று. இவ்-வூரின் வடக்கே ஒரு பிரிவும், தெற்கே ஒரு பிரிவும் வாழ்கிறார்கள். எனவே, அவைகள் வடக்கு வேளானூர், தெற்கு வேளானூர் என்ற பெயரினைப் பெறுகின்றன.

## 13. நாடு :

நாடு என்னும் சொல் ஆதியில் மனிதர் வாழும் நிலத்தைக் குறிப்பதற்கு வழங்கப்பட்டது. அந்தமுறையில் தமிழர் வாழ்ந்த நாடு என்று பெயர் பெற்றது. அந்நாடு மூன்று பாகமாகிய பொழுது ஒவ்வொரு பாகமும் தனித்தனியே நாடு என்னும் பெய-ருக்கு உரியதாயிற்று. நாளடைவில் இந்நாடுகளின் உட்பிரிவு களும் நாடு என்று அழைக்கப்பட்டன. கொங்குநாடு, தொண்டை நாடு முதலியன இதற்குச் சான்றாகும். சிறுபான்மையாகச் சில தனியூர்களும் நாடென்று பெயர்பெற்று வழங்குதல் உண்டு. வண்ணாங்குண்டுப் பகுதியில் சிலம்பிநாடு என்ற ஊர் உளது. இதற்கு இப்பெயர் வரக்காரணம், இங்குச் சிலம்பி என்ற பெண் தெய்வம் இருந்ததால் இவ்வூருக்கு இப்பெயர் ஏற்பட்டிருக்கலாம் என்கிறார்கள். இன்னும் சிலர், பாண்டிநாட்டில் கண்ணகியின் சிலம்பு பெற்ற சிறப்பை நினைவூட்டும் வண்ணமாக இவ்வூருக்குச் சிலம்பு நாடு என்று வைத்தார்கள். அதன் பேச்சுவழக்கில் சிலம்பி-நாடு என்றாயிற்று என்பவரும் உளர். நாடு என்னும் சொல்லின் பொருள் வழக்காற்றில் நலிவுற்ற தன்மையை இவ்வூர்ப்பெயர்கள் உணர்த்துவனவாகும்.

## 14. குண்டு :

மேட்டில் அமைந்த ஊர்களையும் பள்ளத்தில் அமைந்த ஊர்களையும் அவற்றின் பெயர்களால் உணரலாம். வண்ணான் இனத்தைச் சேர்ந்தவர்கள் வாழும் பகுதியில் குளம் இருத்தல் வேண்டும். எனவே, இவ்வொன்றியத்தில் ஓர் ஊருக்கே வண்ணான்

குண்டு என்றுபெயர் வரலாயிற்று. இங்கு, இடிபாடுடைய சிவன் கோயில் உள்ளது. 9,10 ஆம் நூற்றாண்டில் இவ்வூரில் இக்கோவில் கட்டப்பட்டிருக்கவேண்டும் என்கிறார்கள். சிவாலயத்தில் சிதைந்த உருவங்கள், தூண்கள் இருக்கின்றன. நந்தி, சப்தமாதர் சிலைகள் அகழ்ந்து எடுக்கப்பட்டன. இவைகள் இன்று சேதுபதி அரண்மனை அரும் பொருட்காட்சியில் வைக்கப்பட்டுள்ளன. வண்ணான்-குண்டின் உட்கிடையாகப் புருக்கலன்பட்டி என்ற ஓர் ஊர் உளது. இங்குப் புருக்கலன் என்பவன் கொடிகட்டிப் பறக்க வாழ்ந்தவன். அவன் பெயரில் தோன்றிய பட்டியே புருக்கலன்பட்டியாகும்.

## 15. இஞ்சி :

கோட்டையின் மதிற்சுவர் இஞ்சி என்று சொல்லாற் குறிக்கப் படும். பாண்டிநாட்டில் மதுரைக்கு அண்மையில் வடபழஞ்சி, தென்பழஞ்சி என்னும் ஊர்கள் உள்ளன. பழஞ்சி என்பது பழ இஞ்சி என்பதன் சிதைவாகத் தோன்றுகிறது. இவற்றால் பண்டைய நகரத்தின் கோட்டை மதில்களின் எல்லையை ஒருவாறு அறிந்துகொள்ளலாம். இக்காலத்தில் நாங்குனேரிக்கு அருகில் உள்ள பெரும் பழஞ்சிக்கு வழங்கும் தளபதி சமுத்திரம் என்னும் பெயரும் அவ்வூரின் வீரத் தன்மையை விளக்குகின்றது.

எனவே, தில்லேந்தல் அருகிலுள்ள இவ்விடம் (பழஞ்சிராய்) சேதுபதிகளின் காலத்தில் அமைக்கப்பட்ட கோட்டைகளால் அமைந்ததால் 'பழஞ்சி' என்ற முன் ஒட்டாலேயே இப்பெயர் பெற்றது. பின்னர்ப் பேச்சு வழக்கில் 'பழஞ்சிராய்' என்ற நீட்சிபெற்று விளங்கியது. இவ்வூராட்சியிலேயே 'கொம்பிடா' மதுரை என்ற ஊர் அமைந்துள்ளது. 'கொம்பிடா' என்பது பின்னால் ஏற்பட்ட திரிபாகும். கும்பிடா என்றால் கும்பிடும் என்று பொருள்தரும். எனவே, மதுரையை நோக்கிக் கும்பிடும் இடமாக அவ்வூர் மக்கள் கருதி அங்குப் பூசை நடத்துவார்களாம். ஆண்டுக்கு ஒருமுறை மீனாட்சியை நினைத்து, மதுரைநோக்கி விழா எடுத்தார்கள். எனவே, இவ்வூர்க்குக் 'கும்பிடா மதுரை' என்று பெயர் ஏற்பட்டது. பின்னர் அது கொம்பிடா மதுரை எனத் திரிந்து வழங்கியது.

## 16. தாங்கி :

பண்டைக்காலங்களில் ஊருக்கு ஊர் சுமைதூக்கிச் செல்பவர்கள் இளைப்பாறிச் செல்லும்பொருட்டு, ஊர் வழியின் அருகில் சுமைதாங்கிக்கல் ஒன்று அமைத்திருப்பார்கள். இன்றும் சிலகிராமங்களில் இவற்றைக் காணமுடியும். களரி ஊராட்சியில் சுமைதாங்கி என்று ஓர் ஊரின் பெயர் அமைந்துள்ளது. இதற்கு இப்பெயர் வரக்காரணம் இவ்வழியில் செல்பவர்களுக்கு இக்கிராமமே இளைப்பாற வசதியாய் அமைந்ததேயாகும். எனவே சுமைதாங்கியைப் பயன்படுத்துமிடம் ''சுமைதாங்கி'' என்ற பெயராலேயே அழைக்கப்பட்டுவிட்டது.

இப்பெயரை ஒட்டிய அடுத்த ஊர், பஞ்சந்தாங்கி ஆகும். எல்லாக் காலங்களிலும் வானம் பார்க்காத பூமியாம், கிணற்றுப்பாசனத்தால் விளைவதால் பஞ்சம் வராமல் காக்கும் ஊர் ஆயிற்று. எனவே, பஞ்சந்தாங்கி என்று அழைத்தார்கள்.

## 17. நிலம் :

இதைப் பருவிநிலம் என்றும் அழைப்பர். பருவி என்ற வாரிசுதாரர்கள், இந்நிலத்திற்கு உரிமை உடையவர்கள். நிலம் என்ற அடிப்படையில் ஊர்ப்பெயர் அமைவது எங்குமில்லை. ஆனால், சின்னாண்டி வலசையில் ஓர் இடம் இப்பெயர் பெற்றுள்ளது. இங்கு முகம்மதியர்கள் அதிகம். அதனால் பருவி என்ற ஒருவனின் பெயரால் அங்குள்ள அனைத்து நிலமும் தோட்டமும் இருந்ததால், அந்நிலங்களுக்குப் பருவி நிலம் என்று வழங்கியிருக்கலாம்.

இம்முறையில் இவ்விடம் இப்பெயரைப்பெற்று இருக்க வேண்டும். அண்மையில் இப்பருவி தன் சகோதரனால் கொல்லப்பட்டான் என்ற செய்தியும் இங்கு உண்டு.

### குறிப்புக்கள்

95. ரா.பி. சேதுப்பிள்ளை, ஊரும் பேரும், பக். 88, 146.
96. மேலது, பக். 89, 146.
97. சேதுபதிச் செப்பேடு, எண் : 7, வரி 40
98. மேலது., எண் : 20, வரி 17-28.
99. மேலது., எண் : 9, வரி 40
100. மேலது., எண் : 9, முதல் இருவரிகள்.
101. மேலது., எண் : 9, வரி 41.

# 6. வலசு - வலசை பின் ஒட்டில் எழுந்த ஊர்ப்பெயர்கள்.

பெயர்களை வகைப்படுத்தல், அதன் அடிப்படையில் பரப்பு, வரைபடங்கள் — ஆகியவற்றின் அடிப்படையில், பண்பாட்டுக் கூறுகள் தோன்றிப் பரவுதலை (Diffusion of Cultural traits) ஆய்வதைப்போல், ஒரு குறிப்பிட்ட பெயர்க்கூறு எங்குத் தோன்றி எப்படிப் பரவியது என்பதைக் காணலாம். இதைக் கொண்டு மக்களின் குடியிருப்பு முறைகள், குடியேற்றத்தின் வளர்ச்சி குடிப்பெயர்ச்சி முதலியவற்றைக் கணிக்கலாம். காட்டாகக் கோவை மாவட்டத்தில் 13-ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு வடகிழக்குப் பகுதியில் பாளையம் விகுதியுடைய பெயர் மிகுதியாகத் தோன்றி, மேற்குநோக்கி 18-ஆம் நூற்றாண்டுவரை பரவியிருந்தாலும், 16ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு, பட்டி - பெயர் விகுதி தென்மேற்குப் பகுதியிலும், வலசு விகுதி வடகிழக்குப்பகுதியிலும் மிகுதியாகக் காணப்படுவதும், மூன்று திசைகளிலும் அவ்வக் காலங்களில் நடந்த கன்னட, தெலுங்கு, தமிழ்க் குடியேற்றங்களைக் காட்டுகின்றன.

பெயர்களை வகைப்படுத்தலின் மூலம், பலநாட்டு, இனமொழிக் கூறுகளோடு ஒப்பிட்டாய்ந்து, உலகளாவிய ஒற்றுமை வேற்றுமைகளைச் சுட்டிக் காட்ட இயலும். இராமநாதபுரம் திருப்புல்லாணி ஒன்றியத்தின் கிழக்குப் பகுதியில்தான் அதிகமான வலசை[102]என்ற பின் ஒட்டில் ஊர்ப்பெயர்கள் அமைந்துள்ளன இப்பெயர்கள் 16ஆம் நூற்றாண்டில் தான் வழங்கப்பட்டிருக்க வேண்டும் என்பதற்குச் சேதுபதிகளின் செப்பேடுகள் சான்று பகர்கின்றன.

"வலசை" என்ற சொல்லுக்குக் கலைக்களஞ்சியத்தில் வேற்றுநாட்டுக் குடியோடுகை[103] என்ற பொருள் வருகிறது. மற்றொரு பொருள் கூட்டம் (Crowd) என்ற பொருளில் வருகிறது.

இன்னும் நுட்பமாக இச்சொல்லை ஆராய்ந்தால் Valacai தெலுங்கில் Balije என்ற பொருளைத் தருகிறது. Balije (The Balija caste) குறிக்கிறது.

நடைமுறையில் இச்சொல்லைப் பயன்படுத்துகிற தன்மையைப் பார்த்தால், வலசை வாங்குதல் என்றால் (To Emigrate to fly from home) வேற்றூர்க்குக் குடியோடுதல் என்ற பொருளே ஏற்றமும் ஏற்பும் உடையதாய் இருக்கிறது. தமிழகத்தில் வடுக இனத்தினர் இங்ஙனம் ஓர் ஊரிலிருந்து மற்றோர் ஊருக்கு அடிக்கடி மாறி, இடம் பெயர்ந்துகொண்டு இருந்தார்கள் என்பது வரலாறு. இதே போலவே முகவை மாவட்டத்தில் விளையும் இடம் நோக்கி, விளையாத இடங்களிலிருந்து மக்கள் ஓடிவந்துப் பிழைப்பு நடத்தினார்கள் என்ற கருத்து மற்றொன்று, யாதவர்கள் என்பவர்கள் தம் பிழைப்புக்கருதி ஒவ்வோர் ஊரின் அருகிலும் ஆட்டுக்குட்டிகளைக் கூடாரங்களில் அடைத்து வைத்துக் கிடைபோட்டுப் (பயிர் உரத்திற்காக இங்ஙனம் செய்தல்) பின்னர் அடுத்த ஊர் நோக்கிச் சென்று கொண்டிருப்பார்கள் என்ற கருத்து பிறிதொன்று.

இறுதியாக, ஊரின் அருகில் தோட்டம், வயல், தோப்பு, இருப்பின் அவற்றின் நடுவே ஒரு குடிசையை அமைத்து. வேளாண்மை செய்து வருதல். பின்னர் அருகில் பல குடிசைகள் தோன்றுதல், இங்குச்செல்ல வசதி செய்யும் பொருட்டு முதலில் பாதை போடுதல், பின்னர் மின்விளக்கு அமைத்தல், அதனால் அவ்விடத்திற்கு அரசு ஆணைப்படி ஒரு பெயரை இடுதல். இந்த வகையில்தான் வலசு, வலசை என்ற பெயர்கள் (பின் ஒட்டு) ஊர்ப்பெயர்களோடு இணைந்து வழங்கப்பட்டது. பின்னர்த், தனிமனிதர் பெயரின் பின்னரும் இவ்வலசை என்ற சொல் இணைந்து, இடத்திற்குப் பெயராக அமைந்தது.

குறிப்பாக, இவ்வொன்றியத்தில் வலசை என்ற பின் ஒட்டில் அமைந்த ஊர்கள் 33 ஆகும். இவற்றில் பெரும்பாலும் தனிமனிதர் பெயராலேயே இவ்வலசைகள் பெயர்பெற்றிருக்கின்றன. இவற்றைப் பற்றி இங்குக் காண்போம்.

மதுரை நாயக்க மன்னர் காலத்திலும் குடியேற்றங்கள் நடந்துள்ளன. இவ்வாறு வடக்கு, வடமேல், வடமத்திய, கிழக்கு, மத்திய மாகாணங்களில் பெருமளவில் தமிழர் குடியேற்றங்கள் நடைபெற்றுள்ளன. 16ஆம்நூற்றாண்டில் தமிழ்நாட்டில் சேலம், தர்மபுரி, தென்னார்க்காடு மாவட்டங்களில் கொடிய பஞ்சம் ஏற்பட்டு மக்கள் குடிபெயர்ந்து வேறு இடங்களுக்குச் சென்று

வாழ்ந்தனர். இவர்களில் பெரும்பாலோர் வட இலங்கைக்கும் வந்து குடியேறினர். அவ்விதம் குடியேறிய மக்கட் சமூகத்தினரின் பெயரில் பல ஊர்கள் யாழ்ப்பாணத்திலும் உள்ளன. இடையர்கள் குடியேறிய பகுதி இடைக்காடு என்றும் குறும்பர் குடியேறிய பகுதி குறும்பச்செட்டி என்றும், மறவர் குடியேறிய பகுதி வட மராட்சி (மறவன்பலோ) என்றும் அவரவர்களின் இனப் பெயராலேயே அழைக்கப்பட்டன.

இப்படி இடம்விட்டு இடம் சென்று குடி ஏறுதல், தமிழகத்தில் புதியதல்ல; எனவே வலசு-வலசைபோதல் என்பது தமிழசத்தில் முகவை மாவட்டத்தில் அதிகம். ஏனெனில் இங்கும் பஞ்சம் அதிகம் ஏற்படுதல் உண்டு. ஒவ்வோர் ஊரிலும் ஒரு தனிப்பட்ட மனிதனின் செல்வாக்கு இருப்பது இயல்பே. அவருக்குக் கிடைக்கும் மரியாதையே தனியானது. ஆனால் சில இடங்களில் அவர்களின் பெயராலேயே அவ்விடம் பெயர்பெறத் தொடங்கின.

## 1. குதக்கோட்டையில் வலசை :

குறிப்பாக, இவ்வொன்றியத்தில் கிழக்குப் பகுதிகளில் உள்ள ஊர்களே 'வலசை' என்ற பின் ஒட்டுக்களைப் பெற்று முடிகின்றன. குத்தக்கோட்டை என்ற குதக்கோட்டை அக்காலத்தில் நெற்களஞ்சியமாக விளங்கிய கோட்டையாகும். இங்கு 4 வலசைகள் உட்கிடையாக இருக்கின்றன. வள்ளிமாடன் என்பவன் பெயரால் தோன்றிய ஊர் வள்ளிமாடன் வலசை. கொட்டியக்காரன் என்பவன் பெயரால் தோன்றிய ஊர் கொட்டியக்காரன் வலசை. சேதுபதி மன்னரின் விருதாவளியைச் சார்ந்தது இவ்வூர். இதைப்போலவே வீரன், காடுகாவல்காரன் பெயராலும் வலசைகள் பெயர்பெற்றன. வீரன்வலசையில் பெரும்பாலோர் அரிசனர்கள், அவர்களில் சிறந்த ஒருவன் பெயரால் இவ்வூர் இப்பெயர் பெற்றது. வள்ளிமாடன் என்பவன் கோனார் வகுப்பைச் சார்ந்தவன். இவனுடைய வீரத்தால் இவ்வூருக்கு இப்பெயர் ஏற்பட்டதாம். இங்கு, இவர்கள் வாழ்ந்ததால் மட்டுமல்லாமல், இவ்வூர் தோற்றத்திற்கும், வளர்ச்சிக்கும் காரணமாக விளங்கியவர்கள்.

## 2. களிமண்குண்டில் வலசை :

இதை அடுத்து, களிமண்குண்டு என்ற ஊராட்சியில் 6 வலசைகள் உள்ளன. 'குத்துக்கல்' என்ற ஓர் இடம் உள்ளது.

இவ்வழியாகத்தான் இராணி மங்கம்மாள் இராமேசுவரம் சென்றதாகக் குறிப்பு உள்ளது. அந்தப் பாதைக்கு அருகில் குத்துக்கல் ஒன்று உள்ளது. எனவே அவ்விடத்தைச் சூழ்ந்து வாழ்ந்து கொண்டிருக்கும் சில குடிசைகளை ஓர் ஊராக அமைத்து, அதற்குக் குத்துக்கல் வலசை என்ற பெயர் வைத்-தார்கள். இங்குப் பனைக்கூட்டமும், தென்னைகள் சூழ்ந்த தோப்பும் மிகுந்த ஓர் இடமுள்ளது. அவ்விடத்தைக் காக்க சிலர் குடில்களை அமைத்துக் கொண்டு, சிரமைப்புச் செய்து கொண்டிருந்தார்கள். அதற்குப்பின் பல குடிசைகளும், பாதை-களும், விளக்குகள் அமைக்கப்படவே, அவ்விடத்திற்கு ஒரு பெயர் அவசியமாயிற்று. உடனே அவ்விடத்திற்குத் "தோப்பு வலசை" என்று பெயர் வைத்தார்கள்.

இவற்றோடு, இவ்வொன்றியத்தின் அருகில் அமைந்துள்ள கட்டையன், மொட்டையன் வலசைகள் அங்கு வாழ்ந்ததோடு அல்லாமல், சேதுபதிகளின் அரசுக்கு உறுதுணையாக இருந்தார்-கள். எனவே அவர்களின் நினைவாக இவ்வூர்கள் கட்டையன், மொட்டையன் வலசைகள் என்ற பெயர்களைப் பெற்றன. மேலும் குப்பச்சி, வெள்ளையன் என்ற இருவர் பெயரால் வலசைகள் தோன்றின. இவர்கள் இவ்வூர்களுக்குச் செய்த நன்மைகளைப் பற்றி அறியக் கிடைக்கவில்லை.

### 3. இரகுநாதபுரத்தில் வலசை:

ரெகுநாதபுரத்தின் கிழக்குப் பகுதியிலுள்ள வயல்களிலும், தோட்டங்களிலும் பயிர்த்தொழில் செய்பவர்கள் தங்கள் குடியிருப்-பை அங்கேயே தொடங்கினார்கள். பின்னர் அவ்விடம் கிழக்கு வலசை என்றாகியது. இதே போல மேற்கே உள்ள பகுதிகள் மேலவலசை என்றாகியது. ரெகுநாதபுரத்தின் ஊர்க்கடைசியில் அரிசனர்கள் தாங்களாகவே ஒரு குடியிருப்பு ஏற்படுத்திக் கொண்டு, அதற்குச் சின்னரெகுநாத வலசை என்று பெயர் வைத்துள்ளார்கள் ரெகுநாதபுரத்தில் மணியக்காரன் என்பவர் வாழ்ந்து வந்தார். அவர் குடும்பத்தில் தன் சகோதரியுடன் குடும்பத் தகராறு வரவே, கோபங்கொண்டு ஊரின்புறத்தே தம் வயல் பகுதியில் ஒரு குடிசையை அமைத்துக்கொண்டு வாழ்க்கை யைத்தொடங்கினார். பின்னர் அவ்விடத்தில்சில குடிசைகள் வரவே, அவ்விடம் இவர் பெயரைக் (மணியக்காரர்) கொண்டே வழங்கலாயிற்று.

4. சின்னாண்டியில் வலசை :

சின்னாண்டி என்னும் ஊராட்சியில் 5 வலசைகள் உள்ளன. சின்னாண்டி என்பவன் பெயரால் எழுந்த வலசை ஒன்றும் துறையான் என்பவன் பெயரால் எழுந்த வலசை மற்றொன்றும் மகுவி என்பார் பெயரால் எழுந்த வலசை இன்னொன்றும் சங்கன் என்பார் பெயரால், எழுந்த வலசை பிறிதொன்றும், வில்லி என்பாள் பெயரால் எழுந்த வலசை எனவும் தனிமனிதர் பெயரால் எழுந்தவைகளாகும். சின்னாண்டி வலசையின் அருகில் புதிய கோவில் அமைக்கப்பட்டது. பின்னர், அவ்விடம் புதுக்கோவில் என்று பெயர் பெறலாயிற்று. சேதுக்கரையில், சீனிவலசை, பிச்சை வலசை என்னும் இரண்டு வலசைகள் கடற்கரையில் அமைந்துள்ளன. இவைகள் எல்லாம் இங்கு எழக்காரணம் கடலில் சென்று மீன்பிடித்துப் பிழைப்பதற்காக, இவர்கள் தங்கள் இடங்களைவிட்டு நகர்ந்து, கடலில் அருகில் தொழிலுக்கு எளி-தாக அருகில் இருக்கையை மாற்றியதால் தோன்றிய புதிய ஊர்களாகும். இங்கு, முதலில் குடில் அமைத்த சீனி, பிச்சை என்பவர்களால் எழுந்தவைகளாகும் இவ்வலசைகள்.

5. மேதலோடையில் வலசை :

மேதல் ஓடை அதாவது மேதலை ஓடை என்ற முன்னா-ளைய ஊரின் அருகில் மோதி, சிலம்பன், மொங்கான், கட்டை-பிரான் என்ற நால்வர் பெயரில் நான்கு வலசைகள் எழுந்துள்ளன.

6 கோரைக்குட்டத்தில் வலசை :

கோரைக்குட்டத்தில் உப்புலா வலசை என்ற ஓர் ஊர்உளது. இஃது உவர்நிலமுள்ள பகுதியாதலால் இப்பகுதியில் அமைந்த இவ்வலசைக்கு உப்புவலசை என்று பெயர் எழுந்தது. பின்னர் இது பேச்சுவழக்கில் உப்புலாவலசை என்று நீட்சி பெற்று ஒலித்தது. இங்கு உப்பு உற்பத்தி செய்யும் கிளார்கள்104 அதாவது பண்ணையார்கள் இருப்பதால் இவ்விடம் உப்புக்கிளார் வலசை என்று முன்பு இருந்ததாகக் கூறுவர்.

7. காஞ்சிரங்குடியில் வலசை :

முன்னாளில் காஞ்சிரங்குடி, காஞ்சிர மரங்கள் நிறைந்த காட்டுப்பகுதியாக இருந்தது. இப்போது காஞ்சிர மரங்களே

இல்லாத கிராமமாய்க் காட்சியளிக்கிறது. இக்கிராமத்தின் கிழக்குப் பகுதியில் சென்ற சிலர் ஊரின் ஒதுக்குப்புறத்தில் குடியேறினார்கள். எனவே இவ்விடத்திற்கு 'காஞ்சிரங்குடிக் கீழவலசை' என்ற பெயர் உண்டாயிற்று. இதேபோல மேற்கில் தோன்றிய புதிய குடிஓடுகை காஞ்சிரங்குடி மேலவலசை ஆயிற்று.

## 8. உத்தரவையில் வலசை :

உத்தரவை என்னும் ஊராட்சி, இவ்வொன்றியத்தில் உள்ளது. இதற்கு இப்பெயர் வரக்காரணம், களைகளும், கரம்பை நிறைந்த பகுதியும் உள்ள ஓர் இடமாய் இருப்பதால்தான். இத்தரவைகள் ஒன்றியத்தில் பல இருப்பதால் வேறுபாடு தோன்றுவதற்காக, அதன் அருகில் உள்ள ஊராட்சியின் பெயரின் முதல்எழுத்து, அல்லது அருகிலுள்ள பெரிய ஊரின் பெயரின் முதல் எழுத்தை முன்வைத்து (புள்ளியிட்டு)த் தரவை என்று எழுதுவது வழக்கம். இதை நாம் பல ஊர்களில் காணலாம். மதுரையில் கல்லுப்பட்டியும், திருமங்கலத்தில் கல்லுப்பட்டியும் இருந்தால் எம். கல்லுப்பட்டி, டி. கல்லுப்பட்டி என்று அழைப்பது போல, அன்னாளில் தலைநகராய் விளங்கிய உத்தரகோசமங்கை ஊரின் முன்எழுத்தினைப்பெற்று, உ. தரவை என்ற பெயர் பெற்றது. பின்னர்ப் பேச்சு வழக்கில் உத்தரவை என்று திரிந்து வழங்கியது. இதைப் போலவே இப்பகுதியில் 'டி' தரவையும் உள்ளது.[105] இவ்வூரின் அருகில் உமையணன் வலசை என்ற ஊரும், நம்பியான் வலசை என்ற ஊரும் உள்ளன. இவ்விரண்டில் நம்பியான் வலசையில் பெரும்பாலும் யாதவர்களே உள்ளார்கள். பெரும்பாலும் நம்பி என்பது இச்சாதிப் பெயராகும். எனவே, சாதிப் பெயரால் இவ்வலசை பெயர் பெற்றது.

## 9. நயினாமரைக்கானில் வலசை:

அடுத்து, நயினா மரைக்கான் என்ற ஊராட்சியில் இரு வலசைகள் உள்ளன. வீரவேல் வலசை என்ற கிராமமும், பருத்திக் காட்டு வலசை என்ற ஊருமாகும். வீரவேல் என்ற ஊருக்குப் பெயர் வரக்காரணம் முருகனது வேல் நினைவாகவும், சைவர்கள் இப்பகுதிகளில் அதிகமிருந்ததாலும் வந்ததுபோலும். மேலும் பருத்திக்காட்டில் தனியாகக் குடில் அமைத்து, அப்பகுதிப் பள்ளர்ப்

பல்கிப் பெருகிய குடில்களைத் தன்னகத்தே கொள்ளவும் அவ்விடம் பருத்திக் காட்டுவலசை என்ற பெயர் பெற்றது.

### 10. தாதனேந்தலில் வலசை :

முத்துவீரப்பன் பெயரில் ஒருவலசை தாதனேந்தல் ஊராட்சியில் அமைந்துள்ளது. இவ்வூர் இவர் தோற்றுவித்ததால் இப்பெயர் பெற்றது. இறுதியாகப், பத்திராதரவை என்ற இடத்தில் பூச்சி என்பவர் பெயரில் ஒரு வலசை ஏற்பட்டது. அங்கு, இப்பூச்சி என்பவர் பல நன்மைகளைச் செய்தமையால் அவர் பெயரால் இவ்வூர் அழைக்கப்பட்டது என்பர். 'வலசை' என்ற பின் ஒட்டில் அமைந்த இவ்வூர்களைப்பற்றியே தனி ஆய்வே செய்யலாம். இப்பின் ஒட்டில் எழுந்த இவ்வூர்கள் 16ஆம் நூற்றாண்டில் தான் தொடங்கியிருக்கவேண்டுமானால், உதயன் சேதுபதி காலத்திலேயே இப்பகுதிகள் அமைந்திருக்க வாய்ப்பிருக்கின்றன.

இச்சேதுபதிகள் சோழமன்னர்களின் கீழ் ஆண்டுவந்த காலங்களில் அவ்வப்பகுதிகளில் பல அமைச்சர்களின் அந்தஸ்துகளில் பலரை நியமித்திருந்தார்கள். அவர்கள் உண்மையாக உழைத்ததற்காகச் சேதுபதிகளின் பரம்பரையினர் அவர்களுக்குக் கொடையாகப் பலகிராமங்களையும், பல சலுகைகளையும் வழங்கியிருந்தார்கள். இதைச் சேதுபதி செப்பேட்டிலும், ஓலைச்சுவடிகளிலும் காணலாம். இவர்கள் அவ்வூரில் சிறந்த ஆட்சி செய்ததால் அவ்வூர் மக்கள் நன்றியறிதலுடன் அவர்களின் நினைவாகப் பல ஊர்களுக்குப் பெயர் வைத்தார்கள். அவற்றுள் பல வலசைகளுக்கும் இத்தகைய கடமைவீரர்களின் பெயர்களை வைக்க மறக்கவில்லைபோலும்.

## குறிப்புக்கள்

1( 2. Valacai, N. (T. Valaga வலகா; K. Valase வலசே)

103. ''திவ்ய தேசத்தெம் பெருமாள்களும் நம்மாழ்வாரும் அங்கே வலசையாக வெழுந்தருள'' (யதீந்த்ரம் : 12)

104. தென்னர்க்காட்டில் - 'கருப்புக்கிளார்' என்ற இடமுண்டு. கிளார் - தோட்டம், வயல் எனப்படும்; இங்கு உப்பு வயலுக்குப் பொருத்தமாய் அமைகிறது.

105. சேதுபதி செப்பேடு எண் : 11, வரி 30-32.

# பெயர்க்காரணங்களும் எல்லையுரையும்

திருப்புல்லாணி ஊராட்சி ஒன்றியத்தின் ஊர்ப்பெயர் காரணங்களை ஆராய்ந்து, ஒருவகையான முடிவுகள் அளிக்கப்பட்டன. இவ்வாய்வுக்கு எல்லையாகவும், வரையறையாகவும் ஐந்து இயல்களில் உள்ள செய்திகளே துணையாக நின்றன. அவைகள் கோவிலால் பெயர் பெற்றவை, வணிக-வரலாற்றுத் தொடர்பால் பெயர் பெற்றவை, சமூக அடிப்படையில் பெயர் பெற்றவை, 'வலசை' யின் ஒட்டில் எழுந்த ஊர்ப்பெயர்கள் என்பனவாம்.

கோவில்கொண்ட ஊர்களையும், கோவில் குடிகொண்டிருக்கும் இறைவன் திருநாமத்தால் பெயர் பெற்ற ஊர்களையும், இவ்வொன்றியத்தில் (பத்து ஊர்களைக்) காணமுடியும். வணிகத்தில் சிறந்தோங்கிய பேட்டைகளும், கடற்கரை பட்டினங்களும் இங்கு மிகுதி. சங்ககாலந்தொட்டுச் சிறந்து விளங்குவதாகக் கருதப்படும் பெரியபட்டணம் போன்ற இடங்களைக் காணலாம். இவ்வூரில் இன்று வரலாற்றுச் சின்னங்களைத் தாங்கி இருக்கும் காசுகளும், பொருட்களும் காலந்தோறும் கிடைப்பதைக் காணலாம்.

ஊர்விட்டு ஊர்செல்லும் (வலசை) குடியோடுகை செய்யும் மக்களும் இங்குள்ளார்கள். கோவை மாவட்டத்தில் இதைப்போல 'வலசு' என்ற விகுதிகளையுடைய ஊர்கள் மிகுதி. இங்கும் குடியோடுகையால் இப்பெயர் ஏற்பட்டிருக்கலாம் என்று ஊகிக்கிறார்கள். கி.பி. 16ஆம் நூற்றாண்டிற்குப் பிறகே இச்சொல்ஆட்சி வந்தது என்கிறார் டாக்டர் கி. நாச்சிமுத்து.[106]

மரம், விலங்கு பெயர்களுடைய ஊர்ப்பெயர்கள் அவ்வப் பகுதியின் மர, விலங்கு வளத்தை அறிவிக்கின்றன. இவ்வளங்கள் இப்பொழுது குறைந்தாலும் அதை ஊர்ப்பெயர்களால் ஊகிக்கலாம். சான்றாக, இவ்வாய்வில் தலவிருட்சங்களாக, இலந்தை, அரசமரம் போன்றவை இருப்பதையும் அக்காலத்தில் அப்பகுதியில் இவைகள் மிகுதியாக இருந்தன என்ற செய்திகளையும் அறியமுடிந்தன.

சமூக அடிப்படையில் ஊர்களுக்குப் பெயர்கள் அமைந்துள்ளன. இஃது எப்படி எழுந்திருக்க முடியும் என்று பார்க்கையில் அங்கு வாழும் மக்களின் தொழில் அடிப்படையில் சில ஊர்கள் பெயர் பெற்றிருக்கின்றன. குறிப்பாகச் செட்டித்தோட்டம், கொள்ளன் குளம் முதலியவற்றைக் குறிப்பிடலாம். இன்னும் சில சாதி அடிப்படையில் பெயர் பெற்றுள்ளன. அவை பள்ளச்சேரி, கைக்களர்மடம் போல்வன. இக்கள ஆய்வில் கிடைத்த புதிய சான்றுகள் சில உள்ளன. பெரியபட்டணத்தில் பெயர் காரணத்தையும் அவ்வூரின் பழமையையும் சிந்திக்கும் பொழுது, அவ்விடம் சங்க காலத்தில் பாண்டியர்களால் ஆட்சி செலுத்தப்பட்டிருக்க வேண்டும் என்று ஊகித்தறியும் அளவுக்குப் பல புதைபொருட் சான்றுகளும், வாணிபச்சந்தை (முத்து) நிகழ்ந்ததற்கான சான்றுகளும், பண்டைக்காலக் காசுகளும், கட்டிடங்களின் இடிபாடுகளும் சான்று நல்கி நிற்கின்றன.

அடுத்து, உத்தரகோச மங்கையின் கோவிற்சுவர்களில் வரையப் பெற்றுள்ள ஓவியங்கள், எழுத்துக்களில் பண்டைய பாண்டிய மன்னன் ' இலவந்திகைப் பள்ளி துஞ்சிய நன்மாறன் பற்றிய (புறநானூற்றுப் பாடல் பெற்ற மன்னன்) குறிப்புக்கள் கிடைத்தன. மேலும் வண்டோதரியின் பெயரும் அதில் குறிக்கப் பெற்றிருந்தது. இங்கு 'இலந்தை' என்ற விருட்சமரம் இன்றும் நின்று நிலவுவதைக் காணலாம். ஒருகாலத்தில் இப்பகுதியில் சோலைகள் நிறைந்த வாவிகள் பல இருந்ததை 'இலவந்திகை'' என்ற இலக்கியச் சொல்லால் (புறநானூற்றுப் பாடல்; 52) உணரும்படியாக உளது.

இத்தகு செய்திகளைத் தேடும் கடும் முயற்சியில் ஈடுபட்ட போது, கால்நடையாகப் பல இடங்களுக்கும் செல்ல வேண்டியிருந்தது; கேள்விகணைகளைத் தொடுத்தாலும், திறவாத வாய்கள்தாம் பல இருந்தன. திறந்த சில வாய்களும் மறக்கக்கூடியதும், மறுக்கக்கூடியதுமான செய்திகளையே தந்தன; செய்திகளைத் தொகுப்பதற்கும், சீரான விடைதேடுவதற்கும் வினாநிரல் பட்டியல் அச்சிட்டேன். நிரப்பிய பட்டியலோ சிலவே ஆகும். ஏனெனில் பலர்கூறும் பதில்கள் ஆய்விற்குத் தேவையற்றதாகவும், நிறுவமுடியாதவைகளுமாய் இருந்தன.

இப்பணியை இன்னும் திட்டமிட்டுத் தெளிவாகச் செய்ய-வேண்டும். கூட்டு முயற்சியால் நிரைவு காணலாம். அரசும் பொதுமக்களும் முன்வருவார்களேயானால், இக்கள ஆய்வினைச் செம்மையாகச் செய்யமுடியும்.

குறிப்பாக, இக்கள ஆய்வில் (நான் பெற்ற) அனுபவம் என்னவென்றால், எந்தச்செயலையும் தொடங்குமுன் திட்டமிட்டுச் செய்யவேண்டும் என்பதாகும். ஓர் ஊருக்குப் போய்விட்டு, அங்கே சில ஆட்களைச் சந்தித்துவிட்டு, ஊர்க்காட்சிதனைக் கண்டுவிட்டு வந்தால் களஆய்வுப் பணி முடிவதில்லை. மீண்டும் மீண்டும் களஆய்வு நோக்கோடு சென்ற பின்னர்தான் தெளிவு ஏற்படுகிறது. மேலும் இவ்ஆய்வில் ஒரு விருப்பம் ஏற்பட்டது எனலாம். முதலில் ஊரில் பெயர்க்காரணங்களை அறிய வினாநிரல் பட்டியல் அமைத்துக்கொண்டு, ஒவ்வொரு வினாவாகக் கேட்டு (மாதிரி பின்னிணைப்பில் உள்ளது) அறிந்துகொண்டேன். அதை வைத்து அவ்வூருக்குப் பெயர் ஏற்பட்ட வழிதனை உணர்ந்துகொண்டேன். குறிப்பாக நிலத்தில் அடிப்படையில், நீரின் அடிப்படையில், கோவிலின் அடிப்படையில், சாதி, சமய அடிப்படையில் பெயர்கள் அமையும் என்பதையும் ஊகிக்க முடிந்தது.

இக்கள ஆய்வினால் சமுதாயத்திற்கும், நாட்டிற்கும் யாது பயன் என்று சிலர் வினாவுகிறார்கள். அதற்கு விடைகூறுதல் நன்று.

மொழியில் பெயராய்வால், மொழியியல் ஒலியனியல், உருபனியல், பொருளியல் மாற்றங்களையும், வளர்ச்சிகளையும் வட்டார வழக்க மாறுபாடுகளையும் அறியமுடியும். பெயராய்வு அகராதி தயாரிப்புக்கும் உதவிசெய்யும் பெயரமைப்பு முறைகளை-யும் இவ்வாய்வால் அறியலாம்.

காட்டாகச் சூரலூர் > சூலூர் எனத் திரிவதை வைத்துக் கொண்டு மொழியிடை ரகர வீழ்வு என்ற ஒலியனியல் விதியை உருவாக்கலாம். புத்தூர் (1-6 நூற்றாண்டு வரை), புதார் (6-8 நூ), புதுவூர் (14 நூ), புதூர் (16 நூ, பிறகு) போன்ற வடிவங்களைக் காலவாரியாக நோக்கும் பொழுது நூற்றாண்டுகள்

தோறும் ஏற்பட்ட உருபவியல் மாற்றங்களை அறியமுடிகிறது. படைமுகாமைக் குறித்த பாளையம், கால்நடைகள் அடைக்கப்படும் இடத்தை உணர்த்தும் பட்டி, கோட்டையைச் சுட்டும் புரம் போன்ற சொற்கள் எவ்வாறு தனிநிலையில் சொற்களாக இருந்து ஊர்ப்பெயர் விகுதிகளாக மாறின என்பதை ஆய்ந்தால் மொழியில் ஏற்பட்ட பொருள் விரிவுகளையும் மாற்றங்களையும் காண இயலும் என்கிறார் டாக்டர். கி. நாச்சிமுத்து.[107]

வரலாற்றிற்குப் பெயராய்வும் ஒரு துணைச்சான்றாக நின்று உதவுகிறது. சில சமயங்களில் இது மட்டுமே பல செய்திகளைத் தரும் தனிச்சான்றாகவும் அமையும். இவை வரலாற்றில் பழங்காலத்தில் எவ்வெப்பகுதியில் எவ்வெவ் இனங்கள் வாழ்ந்தன என்பதை இடப்பெயர்களைக் கொண்டு அறியமுடியும். வாழ்ந்து எவ்விதச்சுவடும் இல்லாமல் மறைந்துபோன இனங்களைப் பற்றியும் அறியலாம். காட்டாக, இலங்கையின் தமிழ்பேசும் வடபகுதியில் காணப்படும் சிங்கள ஊர்ப்பெயர்களும், சிங்களம் பேசும் தென்பகுதியில் உள்ள தமிழ்ப்பெயர்களும் பண்டு அப்பகுதிகளில் சிங்களரும், தமிழரும் வாழ்ந்ததை உறுதிப்படுத்துகின்றன.

சமய வரலாற்றை அறியவும் பெயர்கள் உதவுகின்றன. பள்ளி, பாழி போன்றவை சமணபௌத்தத் தொடர்பையும், மங்கலம், நல்லூர் போன்றவை வைதிக சமயத் தொடர்பையும் காட்டுகின்றன. ஊர்களிலுள்ள, திரு என்ற அடைமொழி பக்திக்கால நிலையை உணர்த்துகின்றன. அரசியல் வரலாற்றில் சேர, பாண்டிய, பல்லவ ஒய்சள, நாயக்க, முசுலீம் அரசுகளின் தொடர்பை முறையே இரும்பொறை, சோழமாதேவி, வீரபாண்டி, மகேந்திரவாடி, தனநாயக்கன்கோட்டை, கொத்தல்ரேவு, வாலாஜாபாத் போன்ற பெயர்கள் காட்டுகின்றன என்பது டாக்டர். கி. நாச்சிமுத்துவின் கருத்தாகும்.[108]

பெயர்களும் ஒருவகையில் புதைபொருட்களே. புதைபொருட்களைப் போலவே, பழைய இடப்பெயர்களும் வரலாற்றுக் முற்பட்ட காலத்திலிருந்தே வழக்கிலிருக்கின்றன; எனவே, அவை புதைபொருட்களைப் போல் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தைப் பற்றிக் கூறும் வல்லமையுடையன. இதனால்தான் தொல்-

பொருளாய்விற்கு இடப்பெயராய்வு பலவகையில் துணையாக அமைகிறது என்கிறார் மேலைநாட்டறிஞர் F.T. வெயின்ரயிட்.

தென்னிந்திய வரலாற்றில் சிக்கல் நிறைந்த பெருங்கற்காலப் பண்பாட்டை (Megalithic culture) ஆய்பவர்கள் பெயர்ச்சான்றுகளால் பல செய்திகளை உறுதிப்படுத்த முனைவதைக் காணலாம். அங்காடி, படை (பட்டாடை) போன்ற ஊர்ப்பெயர் விகுதிகள் பெருங்கற்காலச் சின்னங்கள் இருந்த இடங்களைக் குறிக்கும் என்பார் அறிஞர் K.R. சீனிவாசகன்.[109]

திராவிடர்க்கும், மேற்காசியா, ஐரோப்பா முதலிய இடங்கட்கும் உள்ள தொடர்பைப் பேசுபவர்கள் ஊர்ப்பெயர்களை ஒப்பிட்டுக் காட்டுவர் என்கிறார். N. வாகுவெரி.[110] மொகஞ்சதாரோ நாகரிகத்தையும், அதற்கும் வரலாற்றுக் காலத்திற்கும் இடைப்பட்ட இருண்டகால இந்திய வரலாற்றையும் அறிய இந்தியா முழுமையுமுள்ள பெயராய்வு துணைசெய்யக்கூடும்.

வரலாற்றுக்காலப் புதைபொருளாய்விலும், மறைந்துபோன நகரங்கள் இருந்த இடங்களைத் தற்காலத்திய பெயர் வடிவங்களை வைத்தே கண்டுபிடித்துத் தோண்டிப் பார்க்கிறோம். காட்டாகப் புகார், கொடுங்கல்லூர் ஆகிய இடங்களில் நடந்த புதைபொருளாய்வுகளைக் குறிப்பிடலாம்.

பழங்காலத்தில் இயற்கையாக எழுந்த இடப்பெயர்கள் இயற்கை அமைப்புகளைக் கொண்டே எழுந்தன. எனவே பெயராய்வால், இயற்கை நில அமைப்புக்களைப் பற்றி அறிய முடியும். தமிழ் இலக்கியம் ஐவகை நிலங்களுக்கேற்ற பெயர்களைப் பேசுகிறது. ஆனால் அவ்வரையறைகள் எல்லாம் மயங்கிக் கிடப்பதையும் பார்க்கிறோம். இதற்குக் காலந்தோறும் ஏற்பட்ட நில அமைப்பு மாறுபாடுகள் காரணமாகலாம். சான்றாக, கழிப்பாலை என்ற ஊரிருக்குமிடத்தில் அப்பெயர் சுட்டுவதைப் போலப் பெயர் எதுவுமில்லை. ஒருகாலத்தில் கடல் அதன் அருகிலிருந்து பின்வாங்கியிருக்கலாம்.

ஊர்களின் பெயர்களைச் சுற்றி, மக்களின் பழைய நினைவுக்களையோ, எண்ணங்களையோ வெளிப்படுத்தும், நாட்டுக்கதைகளும், தலபுராணங்களும் எழுகின்றன. இவை நாட்டிலக்கிய

ஆய்வாளர்க்குப் பல செய்திகளைத் தரும். பெயர்களைப் பற்றிய கதைகள் தலபுராணம் என்னும் இலக்கிய வகையாக மலர்ந்து இலக்கியத்தை வளம்படுத்தியிருக்கின்றன. எனவே, பெயராய்வு இலக்கியத்திற்கும் பயன்படுகிறது.

பெயர்களை வகைப்படுத்தல், அதன் அடிப்படையில் பரப்பு வரைபடங்கள் தயாரித்தல்-ஆகியவற்றின் அடிப்படையில், பண்பாட்டுக் கூறுகள் தோன்றிப் பரவுதலை (Diffusion of cultural traits) ஆய்வதைப்போல, ஒரு குறிப்பிட்ட பெயர்க்கூறு எங்குத் தோன்றி, எப்படிப் பரவியது என்பதைக் காணலாம். இதைக் கொண்டு மக்களின் குடியிருப்பு முறைகள், குடியேற்றத்தின் வளர்ச்சி, வேகம் முதலியவற்றைப் பற்றி ஊகிக்கலாம். காட்டாகக் கோவை மாவட்டத்தில் 13ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு வடகிழக்குப் பகுதியில் பாளையம் விகுதியுடைய பெயர் மிகுதியாகத் தோன்றி, மேற்குநோக்கி 18ஆம் நூற்றாண்டுவரை பரவியிருந்தாலும், 16ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு பட்டி-பெயர் விகுதி தென்மேற்குப் பகுதியிலும், வலசு விகுதி வடகிழக்குப் பகுதியிலும் மிகுதியாகக் காணப்படுவதும், மூன்று திசைகளிலும் அவ்வக்காலங்களில் நடந்த கன்னட, தெலுங்கு, தமிழ்க் குடியேற்றங்களைக் காட்டுகின்றன.

பெயர்களை வகைப்படுத்தலின் மூலம், பலநாட்டு, இனமொழிக் கூறுகளோடு ஒப்பிட்டாய்ந்து, உலகளாவிய ஒற்றுமை வேற்றுமைகளைச் சுட்டிக்காட்ட இயலும். இடப்பெயராய்வுகளின் துணையால், சரியான நிலநூல் பெயர்களை நிலைப்படுத்த முடியும். இந்நோக்கத்தோடு, சில மேனாடுகளில் இடப்பெயராய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இடப்பெயராய்வால் நிகழும் இந்நன்மைகளைச் சுட்டிக்காட்டி, ஒவ்வொரு நாடும் இங்ஙனம் 'நிலநூல் பெயர் நிலைப்படுத்தல் குழுக்கள்' நிறுவ வேண்டியதன் அவசியத்தையும், அக்குழுக்கள் இணைந்த அனைத்துலக நிலநூற் பெயர் நிலைப்படுத்தல் பெருங்குழு (Commission on International Standarlization of Geographic Names) ஒன்று தோற்றுவிக்க வேண்டும் என்றும் அனைத்துலகப் பெயராய்வுக் கழகத்தின் ஐந்தாவது மாநாடு (1955) தீர்மானம் நிறைவேற்றியிருப்பது குறிப்பிடத்தக்கது. இச்செய்தி Onoma என்ற திங்களிதழ் (1966இல்) 12ஆவது மலரில் வெளிவந்துள்ளது.

இந்தியாவிலுள்ள பலமொழிப் பகுதிகளிலும் பெயராய்வு-களை மேற்கொள்ளவும், கருத்துப் பரிமாற்றங்கள் ஏற்படுத்தவும் பொது அமைப்பு ஒன்றுதேவை. அல்லது தற்போதுள்ள மொழி-யியல் அமைப்புக்களை இதற்குரிய அரங்கமாக்கிக் கொள்ளலாம். உடனடியாக, திராவிட மொழிகளில் ஒருங்கிணைந்த பெயராய்வை மேற்கொள்ளும்படி தூண்டவேண்டும். இதன் ஒரு படியாகத் தமிழில் பெயராய்வுகளை மிகுதிப்படுத்த முயலலாம். தமிழ்-நாட்டிலுள்ள பல்கலைக்கழகத் தமிழ்த்துறைகள், இதற்கு ஏதாவது நீண்டகாலத் திட்டம் தீட்டி ஒரு முயற்சியைத் தொடங்கி வைக்கலாம். அல்லது மொழியியல் துறைகள், வட்டார வழக்-காய்வின் ஒரு பகுதியாக இதை மேற்கொள்ளலாம். தமிழ் ஆய்வுக்கழகங்கள் தங்கள் பணிகளில் ஒன்றாக இதையும் அரசு உதவியோடு மேற்கொள்ளலாம். உருமாறியுள்ள பழைய இப்பெயர்களுக்கு மீண்டும் பழம் வடிவம் கொடுக்க அரசும் மக்களும் விரும்புகின்ற இக்கால கட்டத்தில் அவ்விருப்பத்தை அறிவியல் முறையில் பெயராய்வினை வழிப்படுத்திப் பெயராய்வுக் கழகங்களின் மூலமோ, நில நூற்பெயர் நிலைப்படுத்தல் குழுக்கள் மூலமோ செய்விக்குமாறு அரசைத் தூண்டலாம். இதனிடையில் தனிப்பட்ட முறையில் மாணவர்களை இத்துறை-யில் பயில்விக்கலாம்.

## குறிப்புக்கள்

106. கி. நாச்சிமுத்து, ஆய்வுமலர் தொகுதி-1, ப. 351.

107. மேலது., ப. 347.

108. மேலது., ப. 349.

109. மேலது., ப. 350.

110. மேலது., ப. 350.

பின்னிணைப்பு: 1

# துணை நூற் பட்டியல்

1. ஆறுமுகம்பிள்ளை, கு., **திரு. உத்தரகோச மங்கை தலபுராணம்**, தேவஸ்தான வெளியீடு, உத்தரகோசமங்கை, இராமநாதபுரம், 1979.

2. ............... ............... **இராமேசுவர குடமுழுக்கு மலர்**, பகுதி-6, ''சேதுபதிகளின் செப்பேட்டுச் செய்திகள்'' இராமேசுவர தேவஸ்தான வெளியீடு, 1975.

3. இராகவையங்கார், மு., **செந்தமிழ்**, 'செந்தமிழ்ச் சான்றோர் திருப்பெயர்', தொகுதி 1, (பதி.9), ப.387, 1942.

4. இராகவையங்கார், உ.வே.ரா., **சேது நாடும் தமிழும்**, செந்தமிழ்ச்செல்வி, 1950.

5. இராமச்சந்திரன், பொ., **தூர்ந்துபோன துறைமுகங்கள்**, கட்டுரைப்பகுதி, பாண்டியநாட்டுத் துறைமுகங்கள் பல்கலைக்கழக ஆய்வோடு, கேரளப் பல்கலைக்கழகம் (மு.ப.), 1968.

6. சீனிவாசன், டி.சி., **திருப்புல்லாணி என்னும் புல்லாரண்ணிய மான்மியம்**, தேவஸ்தான வெளியீடு, முகவை, 1974.

7. சேதுப்பிள்ளை ரா.பி., **தமிழகம் ஊரும் பேரும்**, (மு.பதி.), பழனியப்பா பிரதர்ஸ், சென்னை, 1956.

8. தாதாச்சாரியார், என். எஸ்., **திருப்புல்லாணித் தல வரலாறு**, இராமநாதபுரம், தேவஸ்தான வெளியீடு, இராமநாதபுரம், 1974.

9. நாச்சிமுத்து, கே., **ஆய்வு மலர்**, 'இடப்பெயராய்வு ஓர் அறிமுகம், தொகுதி-1 ஜெயகுமாரி ஸ்டோர்ஸ், நாகர்கோவில், 1972.

10. சண்முகசுந்தரம், ல., **தமிழும் தாவரமும்** (மு.பதி) தமிழ்ப் புத்தகாலயம், சென்னை 1970.

1. CHOKKALINGAM, T.A., **Historic place names of ancien Tamilakam upto 10th Centur A.D.** M.Litt., Thesis, Unpublished, Madras Uuiversity 1956.

2. DURAISAMY, M.A, **Sur names of the Sangam Age Literary** and Tribal, Madra University, 1968.

3. KALARATNAM, K., **Tamil place names in Ceylon outside the Northern and Eastern Provinces**, proceedings of the First International Conference Seminar of Tamil Studies, Vol. I, Kuala Lumpur, 1968.

4. NACHIMUTHU, K., **Internal migrations and place names** of Tamilakam, JDT, Vol.I, 1970.

5. NICOLAISEN, W.F.H., Field work in place, name Research, studia Hibernica I, 1961.

6. RAMACHANDRAN CHETTIAR, C.M., **'Place names in Tamilnadu'**, JMGA. March, 1938 and Dec. 1938.

7. RENGASAMY IYER, K.V., **Some Historical place names in South India**, Madres, 1940.

8. SETHUPILLAI, R.P., **'Place nemes suffixes in Tamil'** Annals of Oriental Research, Madras University, Vol IV Part I & II, Vol V, Part I & II.

## JOURNALS

1. IYER, T.S.S., **'Place names in Tirunelveli District'**, Vol. XV, Sectiod IV.

2. ... ... ... ... ... ... ... ... **'Place names in Tanjore District'** Vol. XII, 1936.

3. ... ... ... ... ... ... ... ... **'Place names in Tamilnadu,'** **Vol. VIII**, 1938 A.

4. ... ... ... ... ... ... ... ... **Ramnad Manual.**

பின்னிணைப்பு : 2

# சேதுபதிகளின் பரம்பரைப் பட்டியல்

| வ.எண் | காலம் | பெயர் |
|---|---|---|
| 1. | 1605-1621 | சதக்கத் தேவர் என்ற உடையன் சேதுபதி. |
| 2. | 1622-1635 | கூத்தன் சேதுபதி. |
| 3. | 1635-1646 | சதக்கத் தேவர் என்ற தளவாய் சேதுபதி. |
| 4. | 1647-1672 | ரெகுநாத சேதுபதி என்ற திருமலை சேதுபதி |
| 5. | 1672 | ராஜசூரிய சேதுபதி. |
| 6. | 1673 | அடானா ரெகுநாத சேதுபதி. |
| 7. | 1674-1710 | ரெகுநாத சேதுபதி என்ற கிழவன் சேதுபதி. |
| 8. | 1711-1725 | திரு உடையத் தேவர் என்ற விஜயரெகுநாத சேதுபதி. |
| 9. | 1726 | சுந்தரேஸ்வர் ரெகுநாத சேதுபதி. |
| 10. | 1726-1729 | பவானி சங்கர் சேதுபதி. |
| 11. | 1730-1735 | கட்டையத் தேவர் என்ற முத்து விஜய ரெகுநாத் சேதுப்தி. |
| 12, | 1736-1748 | சிவகுமார் முத்து விஜய ரெகுநாத சேதுபதி. |
| 13. | 1748-1749 | சேதுபதி ராக்கத் தேவர். |
| 14. | 1749-1762 | செல்லமுத்து விஜய ரெகுநாத சேதுபதி |
| 15. | 1763-1772<br>1782-1795 | முத்துராமலிங்க சேதுபதி. |
| 16. | 1795-1803 | பிரிட்டிஷ் நிர்வாகம் |
| 17. | 1803-1807 | இராணி சேதுபதி மங்கலேசுவரி நாச்சியார். |

18. 1807-1820 அண்ணாசாமி சேதுபதி என்ற முத்துவிஜய ரெகுநாத சேதுபதி.

19. 1820-1829 விஜய ரெகுநாத இராமசாமி சேதுபதி.

20. 1829-1830 இராணி சேதுபதி முத்து வீராயி நாச்சியார்.

21. 1830-1845 மங்களேசுவரி நாச்சியார், துரைராஜ நாச்சியார்.

22. 1846-1862 இராணி சேதுபதி பர்வதவர்த்தினி நாச்சியார்.

23. 1862-1873 முத்துராமலிங்க சேதுபதி.

24. 1873 1888 இளையோர் அரசவையில் ராஜா பாஸ்கர சேதுபதி (மைனர்)

25. 1889-1903 ராஜா பாஸ்கர சேதுபதி.

26. 1903-1909 குத்தகையாளர் (Lessees)

27. 3.6.1910-4.8.1928 - முத்துராமலிங்க சேதுபதி.

28. 4.8.1928-6.8.1935 - ஸ்ரீ சண்முக ராஜேசுவர நாகநாத சேதுபதி.

29. 6.8.1935-2.4.1946 - இளையோர் அரச்சவை

30. 2.4.1945-4.3.1967 - ஸ்ரீ சண்முக ராஜேசுவர நாகநாத சேதுபதி.

31. 5.3.1967 இலிருந்து - ஸ்ரீ இராமநாத சேதுபதி.

பின்னிணைப்பு : 3

# ஊராட்சியும் உட்கடையும் அகரநிரல்

1. ஆலங்குளம்

   1. புதுக்குளம்
   2. பெரியகன்னன்குடி

2. இரகுநாதபுரம்

   1. கீழவலசை
   2. சின்னரகுநாதபுரம்
   3. தோட்டக்காடு
   4. மணியக்காரன் வலசை
   5. மேலூர்
   6. மேலவலசை

3. உத்தரகோச மங்கை

   உட்கடை இல்லை

4. உத்தரவை

   1. இரட்டையூரணி
   2. உமையணன் வலசை
   3. நம்பியான் வலசை

5. எக்ககுடி

   1. கொத்தங்குளம்
   2. பக்கிரி புதுக்குளம்

6. களரி

   1. ஆனைக்குடி
   2. கீழசீத்தை
   3. சுமைதாங்கி

7. களிமண்குண்டு

   1. கட்டையன் வலசை
   2. குத்துக்கல் வலசை
   3. குப்பச்சி வலசை
   4. சாலைத்தோப்பு
   5. தோப்பு வலசை
   6. மொட்டையன் வலசை
   7. வெள்ளையன் வலசை

8. காஞ்சிரங்குடி

   1. அலவாய்க்கரைவாடி
   2. இலட்சுமிபுரம்
   3. கீழவலசை
   4. செங்கல் நீரோடை
   5. புதுநகர்

9. கீழக்கரை

   உட்கடை இல்லை

10. குளபதம்

   1. வைகை

**11. குதக்கோட்டை**

1. காடுகாவல்காரன் வலசை
2. கொட்டியக்காரன் வலசை
3. வள்ளிமாடன் வலசை
4. வீரன் வலசை

**12. கொம்பூதி**

உட்கடை இல்லை

**13. கோரைக் கூட்டம்**

1. உப்புலர வலசை
2. தண்டரேந்தல்
3. வலயனேந்தல்

**14. சின்னாண்டி வலசை**

1. குமாரபுரம்
2. சங்கன் வலசை
3. செட்டிதோட்டம்
4. துறையான் வலசை
5. புதுக்கோவில்
6. பெரிவி நில்ம்
7. மகுலி வலசை
8. வில்லி வலசை

**15. சேதுக்கரை**

1. அகஸ்தியர்தீர்த்தம்
2. கீழப்புதுக்குடி
3. சீனி வலசை
4. பஞ்சந்தாங்கி
5. பிச்சை வலசை.

**16. தாதனேந்தல்**

1. கைக்களர் மடம்
2. பள்ளபச்சேரி
3. பொக்கனரேந்தல்
4. முத்துவீரப்பன்

**17. தில்லேந்தல்**

1. ஆமைக்கூட்டம்
2. கடற்கரைத்தோப்பு
3. கீழத்தில்லேந்தல்
4. கொம்பிடாமதுரை
5. சின்னப்பாலய னேந்தல்
6. நத்தம்
7. பலஞ்சிறை
8. பள்ளமோர்குளம்
9. பாலயனேந்தல்
10. மேலத்தில்லேந்தல்

**18. திருப்புல்லாணி**

உட்கடை இல்லை

19 திணைக்குளம்

1. ஆதியட்சபுரம்
2. சிலம்பன்வலசை
3. மொங்கான் வலசை
4. மோதி வலசை

20 நல்லிருக்கை

1. கோனேரி
2. செட்டியேந்தல்

21. நயினாமரைக்கான்

1. கொள்ளன்தோப்பு
2. பருத்திக்காட்டு வலசை
3. வீரவேல் வலசை

22. பத்திராதரவை

1. பத்திராதரவை ராஜவெளி
2. புருக்கலன்பட்டி
3. பூச்சி வலசை

23. பனையடியேந்தல்

உட்கடை இல்லை

24. பனைக்குளம்

1. அருகுடி
2. கடம்பங்குடி
3. புக்குளம்
4. மாலங்குடி

25. பெரியபட்டணம்

1. இளந்தொடை

26. மல்லல்

1. தெற்குமல்லல்
2. மாலங்குடி
3. வடக்கு மல்லல்

27. மாயாகுளம்

1. சின்னமாயாகுளம்
2. சுண்டைக்காய்த் தோட்டம்
3. தோப்புக்காடு
4. புதுமாயாகுளம்
5. புல்லந்தை
6. முள்ளுவாடி

28. முத்துப்பேட்டை

1 தோப்புக்காடு
2. நடுத்தெரு

29. மேலமடை

1. கருக்காத்தி

30. மேதலோடை

1. சிட்டாங்குடி
2. மேதலோடை வடக்கு
3. மேதலோடை தெற்கு

31. லாந்தை

1. கண்ணந்தை
2. கருங்குளம்
3. பெருந்தாமரைக்குடி

32. வண்ணாங்குண்டு

1. இளங்காமணி
2. எ.எம்.ஆர். தோட்டம்
3. கிருஷ்ணாபுரம்
4. கொடைக்கான்
5. சிலம்பி நாடு
6. செல்வனூர்
7. நந்தக்காடு
8. நாகநாத சமுத்திரம்
9. நேருபுரம்
10. பன்னக்கரை
11. புகாரித் தோட்டம்
12. புதூர்
13. மடுவிழந்தான் தோட்டம்

33. வெள்ளாமருச்சிக்கட்டி

1. கதைக்குளம்
2. கைலாச மங்கலம்
3. கொடிக்குளம்
4. தெய்வச்சிலை நல்லூர்
5. வித்தானூர்
6. வெண்குளம்

34. வேளானூர்

1. வேளானூர் வடக்கு
2. வேளானூர் தெற்கு

பின்னிணைப்பு-4

## ஊர்ப்பெயர்ப் பட்டியல் 'அகர நிரல்'

| வ.நிர். | பெயர் | வ.நிர். | பெயர் |
|---|---|---|---|
| 1. | அகஸ்தியர் தீர்த்தம் | 30. | காஞ்சிரங்குடி |
| 2. | அருகுடி | 31. | காஞ்சிரங்குடி கீழவலசை |
| 3. | அலவாக்கரைவாடி | 32. | காஞ்சிரங்குடிமேலவலசை |
| 4. | ஆலங்குளம் | 33. | காடுகாவல்காரன் வலசை |
| 5. | ஆனைக்குடி | 34 | கிருஷ்ணாபுரம் |
| 6. | ஆமைக்கூட்டம் | 35. | கீழசீத்தை |
| 7. | ஆதியட்சபுரம் | 36. | கீழக்கரை |
| 8. | இளங்காமணி | 37. | கீழப்புதுக்குடி |
| 9. | இளந்தொடை | 38. | குளபதம் |
| 10. | இலட்சுமிபுரம் | 39. | குதக்கோட்டை |
| 11. | இரகுநாதபுரம் | 40. | குமாரபுரம் |
| 12. | இரகுநாதபுரம் கீழவலசை | 41. | குப்பச்சி வலசை |
| 13. | இரகுநாதபுரம் மேலவலசை | 42. | குத்துக்கல் வலசை |
| 14. | இரட்டையூரணி | 43. | கைலாசமங்கலம் |
| 15. | உத்தரகோச மங்கை | 44. | கைக்களர்மடம் |
| 16. | உப்புலாவலசை | 45. | கொத்தங்குளம் |
| 17. | உத்தரவை | 46. | கொடிக்குளம் |
| 18. | உமையணன் வலசை | 47. | கொம்பூதி |
| 19. | எக்கக்குடி | 48. | கொட்டியக்காரன் வலசை |
| 20. | எ. எம். ஆர். தோட்டம் | 49. | கொடைக்கான் |
| 21. | கண்ணந்தை | 50. | கொள்ளன்தோப்பு |
| 22. | கருங்குளம் | 51. | கொம்பிடா மதுரை |
| 23. | கடம்பங்குடி | 52. | கோனேரி |
| 24. | கதைக்குளம் | 53. | கோரைக்கூட்டம் |
| 25. | களரி | 54. | சங்கன்வலசை |
| 26. | கருக்காத்தி | 55. | சாலைத்தோப்பு |
| 27. | கடற்கரைத்தோப்பு | 56. | சின்னப்பாலயனேந்தல் |
| 28. | களிமண்குண்டு | 57. | சின்னமாயாகுளம் |
| 29. | கட்டையன் வலசை | 58. | சின்னாண்டிவலசை |

| வ.நிர். பெயர் | வ.நிர். பெயர் |
|---|---|
| 59. சிட்டாங்குடி | 91. பக்கிரிபுதுக்குளம் |
| 60 சிலம்டன்வலசை | 92. பள்ளமோர்குளம் |
| 61. சிலம்பிநாடு | 93. பாலயனேந்தல் |
| 62. சின்னரெகுநாத வலசை | 94. பலஞ்சிறை (பழஞ்சிராய்) |
| 63. சீனிவலசை | 95. பஞ்சந்தாங்கி |
| 64. சுமைதாங்கி | 96. பள்ளபச்சேரி |
| 65. சுண்டைக்காய்த் தோட்டம் | 97. பன்னக்கரை |
| 66. செட்டியேந்தல் | 98. பத்திராதரவை |
| 67. செங்கல்நீரோடை | 99. பத்திராதரவை ராஜாவெளி |
| 68. செட்டிதோட்டம் | 100. பருத்திக்காட்டு வலசை |
| 69. செல்வனூர் | 101. பனையடியேந்தல் |
| 70. சேதுக்கரை | 102. பனைக்குளம் |
| 71. தண்டரேந்தல் | 103. பிச்சைவலசை |
| 72. தாதனேந்தல் | 104. புக்குளம் |
| 73. தில்லேந்தல் | 105. புதுக்குளம் |
| 74. திருப்புல்லாணி | 106. புல்லந்தை |
| 75. தினைக்குளம் | 107. புதுமாயாகுளம் |
| 76. துறையான்வலசை | 108. புதுநகர் |
| 77. தெய்வச்சிலை நல்லூர் | 109. புதுக்கோவில் |
| 78- தெற்குமல்லல் | 110. புதூர் |
| 79. தோப்புக்காடு (மாயாகுளம்) | 111. புகாரித்தோட்டம் |
| 80. தோப்புவலசை | 112. புருக்கலன்பட்டி |
| 81. தோட்டக்காடு | 113. பூச்சிவலசை |
| 82. தோப்புக்காடு (முத்துப்பேட்டை) | 114. பெருந்தாமரைக்குடி |
| 83. நல்லிருக்கை | 115. பெரியகன்னன்குடி |
| 84. நந்தக்காடு | 116. பெரிவிதிலம் |
| 85. நத்தம் (தில்லேந்தல்) | 117. பெரியபட்டணம் |
| 86. நடுத்தெரு (முத்துப்பேட்டை) | 118. பொக்கனரேந்தல் |
| 87. நம்பியான் வலசை | 119. மல்லல் |
| 88. நயினாமரைக்கான் | 120. மகுலிவலசை |
| 89. நாகநாத சமுத்திரம் | 121. மடுவிழந்தான் தோட்டம் |
| 90. நேருபுரம் | 122. மணியக்காரன் வலசை |

| வ. நிர். | பெயர் | வ. நிர். | பெயர் |
|---|---|---|---|
| 123. | மாலங்குடி (பனைக்குளம்) | 138. | வலயனேந்தல் |
| 124. | மாலங்குடி (மல்லல்) | 139. | வடக்குமல்லல் |
| 125. | மாயாகு | 140. | வள்ளிமாடன் வலசை |
| 126. | முள்ளுவாடி | 141. | வண்ணாங்குண்டு |
| 127. | முத்துவீரப்பன் வலசை | 142. | வித்தானூர் |
| 128. | முத்துப்பேட்டை | 143. | வில்லிவலசை |
| 129. | மேலமடை | 144. | வீரன்வலசை |
| 130. | மேலத்தில்லேந்தல் | 145. | வீரவேல்வலசை |
| 131. | மேதலோடை (வடக்கு) | 146. | வெண்குளம் |
| 132. | மேதலோடை (தெற்கு) | 147. | வெள்ளையன்வலசை |
| 133. | மேலூர் (இரகுநாதபுரம்) | 148. | வெள்ளாமருச்சிக்கட்டி |
| 134. | மொட்டையன்வலசை | 149. | வேளானூர் வடக்கு |
| 135. | மொங்கான்வலசை | 150. | வேளானூர் தெற்கு |
| 136. | மோதிவலசை | 151. | வைகை |
| 137. | லாந்தை | | |

# பிழை திருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 2 | தலைப்பு வரி | ஊராராய்ச்சி | ஊராட்சி |
| 3 | 24 | என்ற Bibilographical | தொகுத்தரும் Bibilographical and information Bulltin யை. |
| 5 | 20 | இடப்பெயர்களைத் | இடப்பெயர்களையும் |
| 7 | 14 | ஒவியவியல்<br>உருபவியல்<br>பொருளவியல் | ஒலியனியல்<br>உருபனியல்<br>பொருளனியல் |
| 8 | 1 | துணுகி | நுணுகி |
| 16 | 32 | பெரிய பட்டிணமாகும் | பெரியபட்டினமாகும் |
| 29 | 25 | என்று | என்றும் |
| 49 | 7 | தலபுரானம் | தலபுராணம் |
| 53 | 17 | மகளான சிதைக்கு | மகளான சீதைக்கு |
| 60 | 26 | பேரரகாதி | பேரகராதி |
| 65 | 7 | பூமிபில் | பூமியில் |
| 66 | 5 | இலச்சினையுளனும் | இலச்சினையுடனும் |
| 68 | 30 | சாரியான | சரியான |
| 69 | 4 | பெரியபட்டிணத்திற்கு | பெரியபட்டினத் திற்கு |
| 70 | 26 | பலனாகிறது | புலனாகிறது |
| 70 | 28 | குடிப்பிடுவதால் | குறிப்பிடுவதால் |
| 80 | 21 | ஓரூர் | ஓரூர் |
| 105 | 31 | உறவுத்தொழிலுக்கும் | உழவுத்தொழி லுக்கும் |
| 108 | 5 | பெருகியிப்பதை | பெருகியிருப்பதை |
| 114 | கடைசி வரி | Balige (The Balige caste) குறிக்கிறது | Baliza (The Baliza caste) இனைத்தைக் குறிக்கிறது |
| 123 | 2 | நிரைவு | நிறைவு |
| 123 | 24 | பொருளவியல் | பொருளனியல் |
| 124 | முதல்வரி | உருபவியல் | உருபனியல் |
| 125 | 6 | (பட்டாடை) | (பட்டடை) |